406

406
3-56

# பெரிய எழுத்து

# ஞானசவுந்தரி அம்மானை



கலைமகள் கம்பெனி
ஹரோடு, திருநெல்வேலி சந்திப்பு.

1

+

கடவுள் துணை

# ஞானசவுந்தரி அம்மானை

பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந்து எடுத்து
திருத்தி எழுதப்பட்டது.

Accn. No: 111894
No of Pages: 92

பிரசுரம் :

**கலைமகள் கம்பெனி**

பிரபல புத்தக வியாபாரிகள்

174 ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு.

உரிமைப் பதிவு] 1956 [விலை ரூ 1—0—0

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:— 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் "ஞானசவுந்தரி அம்மானை" என்னும் இந்நூல் காப்பி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நூலுக்கு உடையவரான கலைமகள் கம்பெனியாரின் உத்தரவின்றி பிறர் இதை பதிப்பித்தலும், இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தலும் கூடாது. இதில் கண்டிருக்கிற விஷயங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படிக்கின்றி மீறி அச்சிட்டால் அதனல் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு

கலைமகள் கம்பெனியார்

மரியே வாழ்க

# ஞானசவுந்தரி அம்மானை

---

## காப்பு

(நேரிசை வெண்பா)

சீரிலங்கு மாநகராஞ் சிறந்தரோ மாபுரியிற்
பேரிலங்குந் தர்மராசர் பெற்றசெல்வி—நேரிலங்கும்
ஞான சவுந்தரியாள் நற்சரிதை கூறவினி
தானகிறிஸ் தேசுபரன் தாப்பு.

எண்சீர் விருத்தம்

சீர்வளரும் சேசுமரி திருநாமத் தாலே
செகமீதில் மனுவோர்கள் தெளிந்தி டேறப்
பேர்வளரும் பதிரோமை பேர்பெரிய நாட்டில்
பிரதான முடிவேந்தர் பிதிர்வாழ்ந் தோங்க
தார்வளரும் தர்மராசர் புதல்வியாம் ஞான
சவுந்தரியாள் காவியத்தை தாரணியோர் கேட்க
நேர்வளரும் அம்மானை நீணிலத்தில் கூற
நிமலனருள் கிருபைதினம் காப்ப தாமே.

## கதைச் சுருக்கம்

அளவிடக் கூடாத ஆனந்தரோ மாபுரியில்
பிழைப்புள்ள ராஜியத்தில் பிறந்த மனுஷிரிலே
தப்பித முள்ளவளாம் தர்மராசர் தேவியவள்
செப்புமுறை யொப்பனையாள் தீர்க்கமுள்ள வஞ்சியவள்
நன்மைகுணங் கெட்டவளாம் நால்பேர்க்கும் நல்லவள்போல்
மங்கை மனச்சூது மற்றொருவர் காணூர்கள்
கர்த்தர் தருமராஜருட காதலியாள் மூத்தகுடி
பெற்றெடுத்த புத்திரியை பிந்தினதாய் செய்தபங்கம்
தர்மமகா ராசர் தரையாள வந்ததுவும்
முறைமைப் படியாக மூத்தகுடி செய்தபாவம்
வதுவைசெய்த தேவியர்தான் மகவொன்றை யீன்றதுவும்
விதவையருந் துஞ்சினதும் வேந்தனும் இரண்டாந்தாரம்
இளையகுடி மன்றல்செய்து இருந்தொன்ருய் வாழ்ந்ததுவும்
தர்மர்நா டாண்டதுவும் தரையிலிவர் வாழுகையில்
மிருகவேட்டைக் கேகினதும் மீண்டுவரு முன்பாக
குழவியை தாயிளையாள் கொல்லவகை செய்ததுவும்

இளங்கொடியை வெட்டாமல் இருகரங் கொய்ததுவும்
மலைவேட்டை வந்தெஜிப்தூர் மன்னர்கண் டாதரித்து
தலைவன் வதுவைசெய்து சமனாத்து வாழ்ந்ததுவும்
வேட்டைசென்ற தர்மரசர் வீட்டில்வந்து புத்திரியை
கேட்டதற்குத் தேவியவள் இலேசமொழி சொன்னதுவும்
அரசன் வெறுப்புற்று அரையடைத்துப் பூட்டினதும்
துரைதுயரை மாற்றுதற்குத் தொல்புவியோர் வந்ததுவும்
மன்னன்மனந் தேராததால் மறுத்துவே றேகியதும்
இன்னஞ் செருசலையாள் இஸ்பாஞ்சிய ராசர்வந்து
தர்மருக்குப் புத்திசொல்லி சடைத்தவரூர் ஏகியதும்
பின்னே எஜிப்தரசன் பிலேந்திரர் வந்ததுவும்
அண்ணல் தர்மராசருக்கு அறிவுமனந் தேற்றியதும்
பிலேந்திரர் தம்மூருக்குப் புறப்பட்ட வேளைதனில்
தலைவன் பிரியமுற்று தானிருத்திக் கொண்டதுவும்
தர்மரோ டெஜிப்தரசன் சமாளித் திருந்ததுவும்
வர்மித்து மாற்றானும் வந்து வளைந்ததுவும்
தன்னாட்டுக் காவலனும் தன்படையை ஏவினதும்
மன்னர்தர்மர் தானறிந்து மாதுயரம் பூண்ட்துவும்
மாற்றானுடன் பொருத மந்திரியைக் கூவியதும்
மூத்தோனும் மன்னவனும் முப்படையைச் சேர்த்ததுவும்
துரைதன் பிலேந்திரரைத் துணைக்கு வரச்சொன்னதுவும்
அரசனெஜிப்தூர்போய் அன்னைதந்தைக் கோதியதும்
மாதாப்பிதா தேவியரும் மனத்துயர மாகியதும்
காதலியைத் தேற்றிவிட்டுக் கணவன்வந்து கூடியதும்
புரவலனும் மாசனமும் போர்பொருதப் போனதுவும்
பரகதியின் * ஆஞ்சுவந்து படைபொருதி வென்றதுவும்
புருஷனும் போர்முனைக்குப் போகுமுன்னே தேவியர்க்கு
கருத்தங்கி மூன்றுதிங்கள் காளைரெண்டு பெற்றதுவும்
பிலேந்திரனின் றேவியர்தான் பிள்ளைரெண்டு பெற்றசெய்தி
கலகத்திற் போனவர்க்கு காணவஞ்சல் விட்டதுவும்
அந்தவஞ்ச லொற்றனையும் அலங்காரி கண்டதுவும்
கட்டியனை தானழைத்து காகித மாறூடியதும்
மட்டறியா தன்னைபிதா மருமகளையும் பாலரையும்
கழுத்தறுக்கக் காகிதந்தான் கண்டதினால் தாய்மகவை
கொலுவிற்சிமியோனும் குவட்டிற்றுரத்தியதும்
தவத்துறவோன் கண்டவரைத் தற்காத்து மூவரையும்
குகையிலே சேர்த்ததுவும் குடலயர்ந்து வாடியதும்
பரலோகம் பார்த்தழவே பரகதியோர் தோன்றியதும்
கரம்வளர்த்துத் தீன்கொடுத்துக் கதிர்வானோ ரேகியதும்
மூவர் துயராற்றியதும் முனிதிரும்ப வந்ததுவும்

---

* ஆஞ்சு—சம்மனசுகள்

பாவைரெண்டு கைகளையும் பார்த்துத் திகைத்ததுவும்
ஞானசவுந்தரியாள் நடந்த நவம் சாற்றியதும்
தேன்மொழியாள் சொற்கேட்டுத் தேருமல் மாதுறவோன்
அன்னை மரிசுதனர் அடையாளங் கேட்டதுவும்
பொன்னுலகோர் வர்ணிப்பை புகழ்ந்தே யுரைத்ததுவும்
தவசிமகிழ்ந் தேகியதும் தலைவனூர் சேர்ந்ததுவும்
அவர்புதல்வர் தேவியரால் அயர்ந்தழுது சோர்ந்ததுவும்
மாதாபிதா சலித்து மைந்தர்மனந் தேற்றியதும்
காதலியைப் பாலகரை கழுத்தறுத்துக்கொல்லாமல்
கடுவாய் புலியருந்த காட்டில்விட்டோ மென்றதுவும்
அடுக்கநின்ற வொற்றனைவிட் டாட்படையை சேர்த்ததுவும்
காவலனும் தன்படையும் காட்டிற்பாய்ந் தேகியதும்
தேவியையும் மைந்தரையும் தேடி அலைந்ததுவும்
மூவரையும் முன்காத்த முனிஇவரைக் கண்டதுவும்
பாவைரெண்டு பாலரும் பட்டதுயர் சாற்றியதும்
பசித்தயர்ந்து வாடியதும் பரலோகம் பார்த்ததுவும்
ரிஷிமுன்னெல்லாமுரைக்க இருபாலர் தேவியையும்
கர்த்தனைக் கூட்டியந்த கற்குகையைக் காட்டியதும்
புத்திரர் தேவியையும் போய்ச்சேர்ந் தழுததுவும்
இறைவ னழுதமர்ந்து ஏவலனைத் தான்கூவி
சிறுபாலர் தேவியையும் தேடிவந்து கண்டோமென
அன்னை பிதாவறிய அஞ்சல் அனுப்பியதும்
மன்னன் சிமியோனும் மலைக்குன்றி லேறியதும்
குகையி லிருந்தோரைக் கூட்டிவரத் தண்டிகையும்
தேவியரை முன்னனுப்பி தேறிமன்னன் போனதுவும்
சென்றழைத்து தேன்மொழியைச் சிமியோன் வினவியதும்
கண்டு மன துவிம்மிக் கண்ணீர்சொரிந்ததுவும்
பூவைதுய ராற்றியதும் புரவலன்முன் தோன்றியதும்
பாவையிரு பாலரின்மேல் பணம்சிதறிக் கொண்டதுவும்
அருமையிரு பாலரையும் அரண்மனைக்குள் ளாக்கியதும்
பெரியதர்மர் அஞ்சலித்து பிலேந்திரராட்கள் விட்டதுவும்
ஒற்றனுட னெஜிப்தரசன் ரோமைநக ரேகியதும்
கேட்டெல்லாந் தர்மராசர் கிலேசமுற்று வாடியதும்
ஐயரிடம் அன்னைசெய்த அநியாயஞ் சாற்றியதும்
மறைவுகுலங்கேட்டு மன்னன் மகனென் றறிந்ததுவும்
இருகரத்தாற் சென்ருவி இருவிழியாருகியதும்
தென்னர்தர்மர் தேவியரைத் தீயிலே சுட்டதுவும்
பொன்னுடைமை ஆஸ்தியெல்லாம் புத்திரிக் கீந்ததுவும்
கர்த்தன் அறைபுகுந்து கடுந்தவசி யாகினதும்
புத்திரி போயிருந்து பூதலத்தை ஆண்டதுவும்
மன்னர் தர்மர் முன்போன மருமகன் பாலரையும்

இன்னும்வரக் காணுததால் எழுதிஅஞ்சல் விட்டதுவும்
விருந்தாகப் போனவரை வேந்தன்மக ளென்றறிந்ததும்
திரவியமும் ஆஸ்திகளும் சேர்ந்தசெய்தி மைந்தனுந்தான்
அத்தனுக்கோர் நிருபம் அஞ்சல்வழி விட்டதுவும்
புத்திரனஞ்சல் கண்டு பிரியமெத்த கண்டதுவும்
இலங்கிய ரோமைவிட்டு எஜிப் தாருக் கேகியதும்
மலங்கிநின்ற பிதா மனமகிழ்ந்து போற்றியதும்
மாறிவந்து ரோமையிலே மாநிலத்தை ஆண்டதுவும்
பேறடைந்து தர்மராசர் பேருலகில் துஞ்சியதும்
மன்னன் தர்மராசருக்கு மகளுதவி செய்ததுவும்
தென்னன் சிமியோனும் தேவியுயிர் போனதுவும்
காவல னெஜிப்தரசன் கதிவா னடைந்ததுவும்
தேவிதுயர் பூண்டு தேடி அழுததுவும்
மூவர்இரு சீமை முறைப்படியே ஆண்டதுவும்
பாவை சவுந்தரியாள் பரலோகம் சேர்ந்ததுவும்
மாதாக் கடன் தீர்த்து மைந்தர் உலகாண்டதுவும்
பூதலத்தில் மானிடரே பிரியாமல் இவ்வுரையை
சத்திய வேதம் தவருது மானிடரே
கர்த்தருக்கு ஸ்தோத்திரமாய் கருத்தோடே கேட்டருளும்

## நாட்டுச் சிறப்பு

நாட்டலங்கா ரச்சிறப்பை நானுரைக்கக் கூடாதால்
பாட்டியுரை கேட்டபடி பகருவே னம்மானை
பொன்னிலங்கும் ரோமா புரிநக ரின்பெருமை
இந்நிலத்தோ ராலே இனம்பிரிக்கக் கூடாது
நந்நாட்டி னூர்சிறப்பை நான்சிறிது சொல்லுகிறேன்
மன்னர்தர்மர் சீமையிலே மாபெரிய கோபுரங்கள்
கோபுரத்தின் முனையிலங்க குடிகள் பொருந்திலங்க
தேவாலயங் கள்தோறும் சிறப்பாய்த் திருநாளும்
கொற்றவர்கள் பூ கப்பும் கொட்டார மேடைகளும்
சத்திரச் சாலைகளும் தங்கமிட்ட சாய்மனையும்
சுற்றுக்குச் சுற்றுங்கு சூதான கோட்டைகளும்
விஸ்தார வீதிகளும் வீட்டுக்குமேல் வீடுகளும்
மரகதநீ லம்பச்சை மாற்றதிக தங்கமதால்
அரண்மனை கொட்டாரம் அரைச்சுவரும் பொன்னுலே
மானிடர்கள் வீடுமனை மரகதத்தால் கட்டிடுவார்
ஆனசெம்பு பித்தளையும் அதிகமாய் தானெழுதி
செம்பைத் தகடாக்கிச் சுவர்கட்குத் தான்பதித்து
கம்பைக் கதவுநிலை கல்வெள்ளி பொன்னுலே
நாட்டுக்கல் மோட்டுவளை நற்பவளக் கொம்புகளாம்

வீட்டுக்கு மேலோடு வெள்ளிநிற வெங்கலமாம்
மாடகூட மேடைகளில் மயிலிருந்து கூவிடுமாம்
கூடவன்ன மாடிடுமாம் குயிலிருந்து கூவிடுமாம்
பச்சையுடன் சேர்ந்த பவளவாயிரஞ்சிவப்பு
மிச்சமதாய் விளைந்து மேலோங்கும் பட்டணத்தில்
பக்தி மிகுந்திலங்கப் பவளமொழி தான்துலங்க
சித்தம் பொருந்திலங்கத் தேவமணம் வீசிநிற்க
காட்டிற் கரும்பிலங்கக் கணுகணுவாய் முத்திலங்க
மாதமும்மாரி பெய்ய மாணிக்கக் கல்விளைய
கோதும்பை செந்நெல் குவிந்திருக்கும் ரர்ச்சியத்தில்
வேதத்தி னுகமங்கள் விதவிதமாய்ப் பாடிநிற்க
விண்ணிலுள்ள தேவமணம் வேதமண வாசமுண்டு
அன்றன்றுள்ள அப்பமுண்டு அனுதினமும் பூசையுண்டு
பரிமள வாசமுண்டு பாரிலங்க மாநிலத்தோர்
திருவிழாக் கொண்டாடித் தேரோட்டம் காண்பதல்லால்
அரசரடிபிடிகள் அநியாயம் காண்பதில்லை
பாலகரில் முந்தினதும் பலனிலே பத்திலொன்றும்
ஆலயத்துக் கீந்திடுவார் அந்நாட்டில் வாழ்மனுவோர்
வெள்ளிமலை பொன்மலையில் விளையும் கனகபொடி
அள்ளிக் குவித்திடுவார் அந்நாட்டில் வாழ்மனுவோர்

## ஞானசவுந்தரி பிறப்பும் வளர்ப்பும்

அண்டபிண்ட மாமிகிரி அனைத்துயிர் ஆகாயமெல்லாம்
உண்டாக்கி வைத்த ஒருவன் திருவருளால்
மண்டலத்தின் மேலான மாநகரி ரோமையிலே
தெண்டித் தரசாண்டு தேர்வேந்தன் நாட்போக்கி
பூரிப்பாய் வந்துதித்த போர்வேந்தன் தர்மராசர்
தேறி உலகாண்டு செங்கோல் செலுத்திவந்தார்
செங்கோல் முழங்கியந்த தேசத்தை ஆளவந்த
தங்க முடிவேந்தன் தர்மமகா ராஜேந்திரன்
ரோமாபுரி நாட்டுக்கு உரியகர்த்த னுகவந்த
இறைவருக்கெல்லாம் முதலாய் ராச்சியத்தை ஆளவந்த
ஆதரை எல்லாமடக்கி ஆளவந்த அண்ணல்துரை
வேதபத்துக் கற்பனைக்குள் விஸ்வாச முள்ளவர்தான்
போதமும் அன்பும் பொறுமைதயை உள்ளவர்தான்
சோதிக்குகந்தவர்தான் பராபரற்கன் புள்ளவர்தான்
சத்திய ராசரிலும் தாரணிக்கு மூத்தவர்தான்
திசைபெற்ற ரோமையிலே திட்டசட்டத் தோடிருந்து
அசையா முடிசூட்டி ஆண்டிருப்பார் ராச்சியத்தை
தென்னவர்க்குத் தென்னவராய் செங்கோலுயர்ந்தவராய்

மன்னவர்க்கு மன்னவராய் மாநிலத்தை ஆண்டவராய்
பகைத்தவரைக் காடேற்றிப் பசித்தோரைக் காப்பாற்றி
உகந்தவரை ஆதரித்து உற்றவரை தாபரித்து
தாழ்ந்தவரைத் தாபரித்துத் தனித்தவரைத் தற்காத்து
சேர்ந்தவரைச் சேர்த்தணைத்துச் சிறியாரை இயல்பாக்கி
அகதிக் கசனமிட்டு ஆடைதுயில் தானீந்து
பகுதி இறைகொடுக்கப் பத்தா தெளியவர்க்கு
பொருளைத்தான் கொடுத்து பலப்படுத்தி வைத்திடுவார்
கன்னி மணம்முடிக்க கைப்பண மில்லாதவர்க்கு
மன்னர் முதலளித்து மணக்கோல மாக்கிடுவார்
வறுமை அணுகாமல் மேதினியில் மானிடரை
தர்ம நடக்கையினுல் தாரணியை ஆண்டுவந்தார்
ஒருவ ரிருவரோடு ஒருநாளும் பகையாமல்
சரிசமமாய் வாழ்ந்திருக்க சட்டமிட்டு வைத்திடுவார்
கஸ்திபிணி உள்ளவர்க்கு கைமுதலிட் டாதரிப்பார்
வைத்தியரையும் வளமாய் வைத்திடுவார் ஊர்தோறும்
செத்தோ ருடலடக்கித் தேவனுக்காய் தருமமிட்டு
சத்திய ஆலயங்கள் தருமமாய்த் தான்முடித்து
கப்பமிடும் ஊர்ப்பணத்தைக் கணக்குடனே நாள்தோறும்
எப்போதும் தண்டிவரும் ஏந்தல் தாமராசருக்கு
வதுவை மணம்சூட்ட வயதுசம மொத்ததினுல்
சரியொத்த ராசர்குலத்தார் குழலுக் காளனுப்பி
வாழும் குலக்கொடியாள் வடிவுள்ள மங்கையரை
ஆளும் முடிவேந்தனுக்கு அழைப்பித்து நிச்சயித்து
கூறும் குலக்கொடியாள் கொற்றவருக் கேற்கையுள்ளாள்
தேறிய தேன்மொழியாள் தென்னவர்க்கு நல்லவள்தான்
பைங்கொடியாள் சூர்யகுல பாவைக் கோமடவாள்
மேவிழியாள் ஒப்பனையாள் மன்னவர்க்கு வாழ்க்கையுள்ளாள்
மங்கையரில் மிக்கழகாள் மாதுநல்ல சற்குணத்தாள்
பொங்கும் நிறவடியாள் பூங்கொடியும் பூநிறத்தாள்
வதுவை மணக்கொம்பு வகைவகையாய்ச் சேகரித்து
சதிரிட்டுப் பந்தலிட்டுச் சாதம் கறியுமிட்டு
புரவலரும் பூங்கொடியும் பொன்னலயம்புகுந்து
குருஆசாரியர்முன் கும்பிசமும் நன்மை பெற்று
ஞானக் கலியாணம் நல்லதிரு மாங்கலியம்
மானுர் கழுத்தணிந்து மாதாவைக் கைத்தொழுது
தம்பூருட்ம்மானம் தாளம் தவில் முழங்க
கொம்பு குழலோசையுடன் கொற்றவரும் தேவியரும்
தேவாலயத்திருந்து சிரேஷ்டர்பாதம் கைதொழுது
சேவகரும் சூழ்ந்திடவே திடியோர் வெடிமுழக்க
ஏவலரும் ஊழியரும் எண்ணடங்கா சேனையுடன்

காவலனும்தேவியரும் கனசிவிகைமீதேறி
மறுதேசத்தரசர்கள் மந்திரிமாருங்கூட
தர்மதானம்வழங்கி தண்டிகையில்தானேறி
ஆலயம்விட்டெழுந்து அரண்மனைவந்துட்புகுந்து
பாலோடறுசுவையும் பற்றிவந்தோர்க்கேயளித்து
நாட்டில்நடக்கும்முறை நலம்பெறவேதான்நடத்தி
பூணும்பணியணிந்து புரவலனும்தேவியரும்
ஒன்றித்திருபேரும் உலகிலொருமனமாய்
தெண்டித்துலகாண்டு தேசமனுஷருக்கு
பாவநினைவகற்றி பத்துரையை போதித்து
தேவனுக்கு கீழ்ப்பணிந்து சீர்மைபெலப்படுத்தி
காசினியில் மானிடரை கற்பனைக்குள்ளாக்கி
மாசறுத்து நன்ருய் மாதாவைதோத்தரித்து
சத்திய வேதமுறைதவருதே வீற்றிருந்தார்
நித்தியன்மேல் வைத்தபத்தி நினைவொருநாள்மாருமல்
மாநிலத்தில்மாசறுத்து மன்னவரும்தேவியரும்
தேனுலகையாண்டு நிடத்தோடிருக்கையிலே
கற்றதர்மராசருட காதலியாள்தன்னுதரப்
புத்திரசந்தானமதாய் பூவையரும்தேற்றரவாய்
வானுதலுக்குற்றகெர்ப்பம் வளர்ந்துஉயர்ந்தோங்கி
ஊனுமுறுப்பாகி உகந்துசடம்மெலிந்து
ஒன்றுரண்டுமூன்று மொருநான்குமைந்தாகும்
என்றேறெழெட்டொன்பதிலே ஏந்திழைக்குதேய்வெடுத்து
கைகாலுளைந்து காயந்தளர்ச்சிகொண்டு
மெய்நடுங்கிமேனிகுன்றி மெத்தமெலிவாகி
ஐயமறந்துதங்கி அறவேதுணுக்கேட்டாய்
மைவிழுந்தாவிமங்கை மாவிதனகஸ்தியுற்று
தரிப்புற்றுநோவெழும்பி தாங்காதகைபூண்டு
பொறுப்பித்தசஞ்சலமாய் பேதைஅறிவுகுன்றி
போதம்குளறுதலாய்ப் பூவையரும்வல்லமையாய்
சேதப்பட்டாமலொரு செல்வியைஈன்றெடுத்தாள்
ஈன்றகுழந்தையரை ஏவலர்கள்வந்தேந்தி
வேண்டிபிரபலமாய் வெகுவாகநேசமுற்று
நீராட்டிசீராட்டி நேசமுடன்தாராட்டி
ஓராட்டிபாராட்டி ஓவியத்தைபட்சமுடன்
அன்னைபிதாமகிழ்ந்து அனைவோரும்சோபனமாய்
கன்னிக்குபாலளித்து கண்ணுக்குமையெழுதி
கழுத்திற்குவளையிட்டு காலுக்குபீலிதண்டை
குழந்தைக்கிடும்பணிகள் கூராககொண்டணிந்து
சிறக்கபணிபூட்டி திட்சைபெறகோவிலிலே
இறையவனும்தேவியரும் ஏவல்செய்யுமூழியரும்

தன்னுட்டுக்கோவிலிலே சற்குருமாரைத்தேடி
கன்னிசிறுபேதையரைக் கையாலணைத்தேந்தி
தம்பூருநாதசுரம் தாளம்தவில்முழங்க
கொம்பூதிக்கொண்டு கொடியுமிடக்கயமும்
பாரவெடிமுழக்கி பாரிற்றிசையறிய
ஆரவாரத்தோடே அண்ணல் தர்மர்புத்திரியை
தேவாலயம்புகுந்து சிரேஷ்டர்பாதங்கையளித்து
ஆவிக்குமெய்ஞ்ஞானஸ் நானம் நிறைவேற்றுமென்று
தலைவனும்புத்திரியை சற்குருமார்கைகொடுத்து
நாமமிட்டார்ஞான சௌந்தரியாள்தானெனவே
சீர்மைக்குமேலான சிறப்புள்ள நாமமென்று
பேரிட்டுக்கொண்ட பெருங்குருவை ஆசரித்து
ஊருக்கெழுந்தருளி உயர்குருவை தான்விஞவி
கொற்றவரும்தேவியரும் கூடும்சனத்தோடும்
புத்திரியைகொண்டவர்கள் போனார்தம்மாளிகைக்கு
மாளிகையில்வீற்றிருந்து மகவைவெபலனுக்கி
நாளுக்குநாள்வளர்ந்து நாரிவளர்ந்துவந்தாள்
பின்னுல்ஒருமதலைப் பிறவியொன்றுமில்லாததால்
கன்னிவளர்ந்துவர கடந்து இருமூன்ருண்டில்
இளங்கொடியைசன்றவளும் இடர்நோய்கட்காளாகி
வளர்ந்துபிணிதாவி வனிதையுடதேகம்வற்றி
கஸ்திஅதிகமிஞ்சி காயம்வெளுப்பேறி
வைத்தியர்கள்தான்செலுத்தும் மருந்துரைகள்நேராததால்
கரைந்துசட்டுருகி காயந்தளர்ச்சிகொண்டு
சரீரத்திலொட்டியநோய் சாவுக்கிரையாகி
திருச்சபைஆசாரம் இறுதிஅவஸ்தைபெற்று
பெருமூச்சுடனிளகி பேதைஅறிவுகுன்றி
சிலேத்மம்மேலெழும்பி சேயிழையும்துஞ்சிவிட்டாள்
புத்திரியும்மெத்தயர்ந்து பொங்கியழுதோலமிட்டு
மருகிமறுதலித்து மாதுயரத்தோடிருந்து
இறைவனும்பாலகியும் ஏங்கியழுதமர்ந்து
மனைவிமடிந்தாளே மகளுக்கார்தஞ்சமென்று
நினைவுநினைத்தேயொரு நேரிழையைத்தாரமிட
பந்துசனத்தோரும் பெருநிலத்திலுற்றோரும்
வந்துசமமொத்திருந்து வதுவையொன்றைநிச்சயித்து
கட்டியணைத்தனுப்பி காரணமெல்லாம்பேசி
திட்டமிட்டசெய்திஒன்றை சேவகனுந்தானுரைக்க
மன்னனும்மந்திரியும் வதுவைமணக்கோலமெடுத்து
அன்னம்சமைத்திறக்கி அசனம்நிறைவேற்றி
போசனமுண்டெழுந்து பொசித்தவர்வாய்கைதுடைத்து
வாசமணம்பூசி வகுப்பாய்சுருளீந்து

முறையதுதவறாமல் மூத்தகுடிபாவனையாய்
சிறப்பாகமன்றல்செய்து செய்முறையெல்லாங்கழித்து
நலமாகமனிதரையும் நடத்திஉபசரித்து
பூலோகமாண்டிருந்து பூவையரோடேயிணங்கி
பார்த்திபனும்தேவியரும் பாலகியும்பாருலகில்
நேர்ச்சிபுரிந்துதினம் நித்தியன்மேல்பத்திவைத்து
காதலிதன்வசமாய் கன்னியரைகையளித்து
பூதலத்தையாண்டு புவிமனுவைதற்காத்து
வேதபத்துகற்பனையை விரிவாய்விரித்துரைத்து
நீதிமறையொழுங்கை நீணிலத்தோர்மாறாமல்
அடக்கியொடுக்கி ஆதரையைஆளுமந்நாள்

## தர்மரிடம் விபசாயிகளின் முறையீடு

சடைந்துழைந்து நாட்டுழவர் சங்கடமாய்கூடிவந்து
அரசர்தர்மராசருடன் அறிவித்தோர்சஞ்சலமாய்
புரவலனே நாங்களுங்கள் புவியிற்குடியானோர்
உலகிற்குடியிருந்து உழுதுபயிர்விதைத்து
நிலத்திருந்துங்களிறை நெறிமுறையாய்த்தந்துவந்தோம்
களைபறித்துவேலிகட்டி காத்துபயிர்தழைத்து
விளைவெடுக்கும்நாளையிலே வெங்கானில்துன்மிருகம்
கரியும்கலைமானும் கரடிமந்திகடாவும்
குரங்குமிளாப்பன்றிகளும் கோவேறுவேசரியும்
குவட்டுவிலங்கத்தனையும் கூட்டமாய்கூடிவந்து
சவட்டியழித்துதின்றுமுப்பி தண்டலையாய்ப்போகுதென்று
கூடிக்குடியானோர் கொற்றவர்க்குகூறலுற்றார்
நாடாளும்தர்மரசர் நாட்டுழவர்க்கேதுரைப்பார்
நாட்டாரேநாட்டிலிட்ட நஞ்சைபுஞ்சைதின்றழித்த
கூட்டவிலங்கத்தனையும் கொலைப்படுத்தநான்போறேன்
இனிநீரிடும்பயிருக் கிடையூறுவாராது
வனவேட்டைபோயிருந்து வாவியிலேதீப்போட்டு
விலங்கென்றவங்கிஷத்தை வேரறுத்துநான்வருவேன்
நிலத்தைகிழித்துநன்றாய் நீங்கள்விதைத்திடுங்கோ
தரிக்காமல்மானிடரை தங்களூர்க்கேகுமென்றார்
உறுதியுள்ளகற்பனைகேட் டுழவரும்ஏகினரே
தேனுலகோர்நாட்டமதாய் தென்னர்தர்மராகுலித்து
மானிடர்க்குசொன்னமொழி மாறாமல்மன்னவனும்
அட்டகிரிவேட்டை ஆடவென்றுயாத்திரைக்கு
கட்டியனைகிட்டழைத்து கனிந்துரைப்பார்காவலனும்
ஒற்றனேநீயோடி உரியோனைசென்றழைத்து
கூட்டிவாவென்று கூறினரேகாவலனும்

ஏவலன்போய்மந்திரியின் இணையடியைதெண்டனிட்டு
கூவியழைத்துவந்து கொற்றவனைகைதொழுதான்
கர்த்தனே நீரழைத்த காரியத்தைக்கூறுமென்றான்
உரியோனே இந்நாட்டில் உழவரிட்டவேளாண்மை
விளையும்பயிரையெல்லாம் விளைவொடுக்கவொட்டாமல்
வாவிக்கரையிலுள்ள வனவிலங்குமொத்தவுமாய்
ஓடியழிக்குதென்று உழவர்வந்தார்சங்கடமாய்
விதைத்தபயிரையெல்லாம் விளைவெடுக்கும்நாளையிலே
உதவாதேநின்றழித்தால் உழவர்நலமாகுவாரோ
தரைபயிர்கையடாமல் தருவாரோபிச்சையிறை
குறைவுநமக்கல்லவோ குடியோர்மெலிந்தாக்கால்
உலகிலுள்ளகேடுநட்டம் உடனுடனேதீராவிடில்
பெலன்குறைந்துமாநிலத்தோர் பிழைப்பிழந்துபோவாரே
குடியோர்வளர்ந்தோங்கிக் குறைவற்றுவாழ்ந்திருக்கில்
படைச்செலவுகாத்துவரும் பணவரவுதாளாது
வேட்டைபோய்துட்ட விலங்கைகுலமறுத்து
நாட்டையும்பார்த்துவர நான்போறேன்மந்திரியே
குருவலனே நீயிருந்து குடியைபராமரித்து
அரண்மனைபொக்கிஷமும் ஆஸ்தியெல்லாம்காத்திடுவாய்
வேட்டைக்குளன்னோடே வீரசூரவேடரையும்
ஈட்டியும்கைச்சவளம் எறிவேல்வில்லம்பரையும்
அட்டகிரிவேட்டை ஆடத்திறமுள்ளவரும்
துட்டமிருகமதை சூட்சமாய்கொல்லுவோரும்
மிருகத்துக்கஞ்சாமல் முன்சென்றுவெட்டுவோரும்
இறைகூலிசம்பளங்கை யேற்றுண்டிருப்போரும்
வலைநாயும்வேடருமாய் வளமாகசேகரித்து
மலைவேட்டையாத்திரைக்கு வல்லோர்யாவரும்
தம்பூருதவில்முரசு தாளம்சரிவரவே
வம்பரைசேகரித்து வருத்திடவேணுமென்றார்
நரபதிகற்பனையால் நாற்றிசைக்கும்சீட்டனுப்பி
விருதுகொலுசுகட்டி வெகுமானம்பெற்றிடும்நல்
வனவேட்டைவீரரையும் வரவழைத்துசேகரமாய்
சனத்திரளைநாளெடுத்தி தர்மர்திருமுன்புவிட்டார்
வேட்டைக்குபோகவந்த வெகுதிரளைகையமர்த்தி
கூட்டியிருத்திமன்னன் கோப்பொதுக்கசட்டமிட்டு
காவலனும் கட்டியனைக் கற்பித் தருகழைத்து
ஏவலனேமாளிகையில் என்னுடையபுத்திரியும்
தேவியையும்தானழைத்து சணத்தில்வரவேணுமென்றார்
சேவகரும்சென்றோடி சொன்னதர்மர் தேவியரை
கண்டுநின்றுகைதொழுது கட்டியனுமென்சொல்வான்
வண்ணணியேஉன்கணவன் வள்ளல்தர்மராசரும்மை

அருமைபுதல்வியையும் அழைத்துவரகட்டளைதான்
கட்டியன்போய்செப்புமுறை கனிமொழியாள்கேட்டுடனே
இட்டபணிகழற்றி ஈடமைந்துவைத்திருந்த
பெட்டகத்தைபூட்டிளக்கி பொற்பணியைதானெடுத்து
கட்டுவம்பொற்பிலி கைவிரலுக்காழியிட்டு
பாடாகத்தண்டைபல பணியெல்லாம்பூட்டி
கூடப்புதல்வியரும் கோதையருமேகொலுவாய்
சவுளியறைதிறந்து தங்கநிறபூந்துகிலை
அவளெடுத்துமேற்சூட்டி அடப்பமிடதோழியரை
பக்கத்திலேநிறுத்தி பல்லாக்கின்மேல்தாண்டி
எக்காளம் கொம்புடனே ஏந்தல்தர்மர்முன்புசென்றாள்
கணவனிடமாககாதலிபோய் சேர்ந்தபின்பு
துணைவிமுகம்நோக்கி சொல்லுவார்காவலனும்
மனைவியரேதேவியரே மலைச்சுற்றுவாரமதில்
சனத்தாரிடும்பயிரை தண்டலையில்வாழ்விலங்கு
கூடிவந்துதின்றழித்து குடியோர்மெலிவாகி
வாடிச்சடைந்துநைந்து வந்துரைத்தார் சஞ்சலமாய்
விளைபயிரைதின்றழித்த விலங்கைகுலமறுக்க
தளமொதுக்கிநான்போறேன் தார்குழலேநீமகளை
அன்பாயணைத்திருந்து ஆசைமொழிபகர்ந்து
முன்நடத்திவருகின்ற முறைகள்தவறாமல்
காலத்தேஎண்ணையிட்டு காப்பிட்டுநீராட்டி
பாலகிக்குபோஜனங்கள் பரிவாகநீசெலுத்தி
புளிப்பேறிக்கொள்ளாமல் போசனமும்சிக்காமல்
இச்சித்துகேட்டவகை ஈந்துவாநீமகட்கு
பயபக்தியாய்வளர்த்து பாலகியைகாத்திடுநீ
தயவுபட்சம்புத்திரிமேல் சார்ந்திருப்பதல்லாமல்
மூத்தகுடிசெல்வியென்று மொய்குழலேநீநினைத்து
உந்தனக்கோர்மதலை உலகறியகாணுதால்
மாற்றம்புரியாதே மனக்கபடுசெய்யாதே
இந்தரோமாபுரிக்கு இவளுமல்லால்வேறுமில்லை
ஆனதினால்தேவியரே யாத்திரைபோய்மீளுமட்டும்
நானுனக்குசொன்னபுத்தி நன்றாயுபசரித்து
அன்பாய்த்தயவாய் அதிகபட்சத்தோடிருந்து
இன்பமாய்பாலகியை இனிதாய்வளர்த்திடென்று
புத்திரியாலேமறுகி புரவலனும்தேவியுடன்
பத்திரமாய்சொன்னபுத்தி பாவையர்கேட்டு சொல்வாள்
பார்த்திபனேஎன்னவா பாலகியால்நீர்சலித்து
யாத்திரைசிக்காமல் ராஜாவேநீர்பயணம்
சந்தேகமில்லாமலைலவனே நீர்போய்வாருமென்றாள்
இந்தமகளானவட்கு ஏதுங்குறைவராமல்

அருமைநடத்திடுவேன் அள்ளாடவேண்டாம்நீர்
புரவலனே நீர்பயணம் போனல்நாள்செல்லாமல்
பாவத்தைநினையாமல் பராபரனே தஞ்சமென்று
தவத்தைமறவாமல் தர்மநிலைதவருமல்
அபத்தமிருகமும்மை அவக்கேடுசெய்யாமல்
தேவபக்தியாய்நடந்து சணம்போய்நீர் வாருமென்ருள்
தேவியருஞ்சற்குணமாய் செப்பக்கேட்டுளமகிழ்ந்து
ஆவிமகளை அணைத்தெடுத்து சென்னிமுத்தி
முத்திமுகந்துமன்னன் முகந்தடவிகண்துடைத்து
புத்திரியே அஞ்சாதே போயுனது தாயுடனே
அரண்மனையில்வீற்றிரென் றத்தனைப்பார்த்தங்கலித்து
அருவிழியுமாருகிஏங்கி அழுவதைக்கண்டு
அத்தன் றுயரடைந்து ஆங்கலித்துகண்கலங்கி
புத்திரியாட்கின்னம் புகலுவார்தந்தையர்தான்
என்மகளே அஞ்சாதே எனைப்போலிளையவனை
அன்பாய்வளர்த்திடுவாள் ஆங்கலியாதென் றமர்த்தி
புத்திரிக்குதந்தையர்தான் போதரவாய்புத்திசொல்லி
கொற்றவனும்தேவியர்க்கு கூறுவாரின்னமுந்தான்
ஏந்திழையேஎன்மகளை எப்படிதற்காப்பா
பாந்தனமில்லாமல் மகள்பயந்தழுதுசோருகிருள்
மகளுக்கோர்வஞ்சகங்கள் மனைவி நீசெய்ததுண்டால்
சபையோர்கள்முன்னேவிட்டு சங்கைகெடுத்திடுவேன்
மதிகெட்டுப்போகாமல் மகளைவைத்துகாத்திடென்று
புதல்விகையைதேவிகையிற் பிடித்துடனேகையளித்தார்
அத்தனுங்கையளிக்க அள்ளாடிஉள்ளயர்ந்து
புத்திரியும்தாயுடனே போனுள்தன்மாளிகைக்கு

## தருமர் வேட்டைக் கேகலும், ஞானம் கரம் கொய்யப்படுதலும்

தேவியரும்பாலகியுஞ் சேர்ந்துமனைக்கேகிபின்
காவலனுந்தண்டிகைமேல் கனவேட்டைக்காரருடன்
நடந்தார்அடவியிலே ராணுவமும்ராசருமாய்
இடந்தனிற்கூடாரமிட்டு வேலிமுள்ளுக்கடுவெட்டி
வாடியைச்சுற்றி வலைகட்டிதீக்கொளுத்தி
காடுவிட்டுபாய்ந்த கரிகடியாளிகளும்
பன்றியினந்துட்ட பலமிருகமானதெல்லாம்
ஒன்றுமில்லாதேயழித்து உண்டைவெடிக்குண்டடித்து
பாடுபடவோடியே பரிகரிவேசரிகள்
காடெல்லாமேசிதறி கலந்தோடிநின்றதையும்
முன்னேடிபின்னேடி முடுகிதுரத்தியங்கே
மன்னரும்மாசனமும் மலைவிலங்கைதீர்த்தறுத்து
தண்டலையைவிட்டு தலத்துள்பதியில்வர

தெண்டித்துநாடுசுற்றி திரும்பியூர்சேருமுன்னே
வேட்டைக்குபோனவந்நாள் வேந்தர்தர்மர்தேவிகையால்
கூட்டுவித்துகையேற்ற குமாரத்தியானவளை
கணவனுரைமீறி காதலிதன்பாலகியை
பிணக்கமாயெந்நாளும் பேசிவைதுசீர்குலைத்து
புத்திரிகேட்டருளும் பொசிப்பன்னமீயாமல்
சத்துருபோலேயிருந்து சவட்டிமிதித்தடிப்பாள்
எட்டிமிதித்திடுவாள் எச்சில்முகத்தெறிவாள்
குட்டுவாள்உச்சியிலே குரவளையைத்தான்நெறிப்பாள்
என்னிடத்தில்நில்லாதே எட்டிப்போசேடியென்பாள்
அன்னம்புசியாமல் அழுகிறகன்னியரை
முன்னேட்டிவைத்திடுவாள் முகத்தில்அடித்திடுவாள்
என்னுடையமாளிகைவிட் டேகிடுவாய்அப்பாலே
பாவித்துஇங்கிருந்தாற் பரிசுகேடுண்டுனக்கு
ஏவலரோடேகூடி எச்சிலுண்டபேடிஎன்பாள்
பங்கப்படுத்திஇந்த பாலகியைமிஞ்சடித்து
அங்கம்அயர்ந்தழுது ஆற்றுமற்கண்ணயரும்
ஆரும்தஞ்சமில்லையென்று அன்னையரைகால்பிடித்து
இருநிலத்திலாருதவி எனக்கிரங்குமன்னையரே
தஞ்சமுன்தஞ்சமல்லால் தாபரிக்கஆருமில்லை
வஞ்சகம்செய்யாதே வைதும்அடியாதே
அன்பாகவேளையும் ஆதரிக்கஉன்னிடத்தில்
என்தந்தைசொன்னதை எள்ளளவும்செய்தாயோ
தாய்இளையாளைப்பார்த்து தன்மானிசொன்னாலும்
நேசம்புரியாமல் நிட்டுரம்செய்திடுவாள்
சீறுதலைமாறுமல் சொல்லிசலித்தழுது
மாருதசஞ்சலத்தால் வானத்தைதகண்ணேக்கி
அன்னைமரிமாதாவே அன்னை இளையவள்தான்
என்னைஅடியாமல் எப்போதும்வையாமல்
துர்க்குணம்நீங்கி அன்னைசுகத்தோடெனையிருத்தி
சற்குணமாய்என்னுடனே தாய்இளையாள்தானிருக்க
நன்மைபுரியும்அம்மா நானெளியாள்பாவியென்று
தன்மானிசொல்லி சௌந்தரியாள்விண்ணேக்கி
எம்மைபிறக்கவைத்த ஏகாஉன்சித்தமென்று
இம்மாநிலத்திருந்து இரங்கியழுதாலும்
ஞானசௌந்தரியாள் நாடெல்லாம்நன்மைபெற
தானுதிநாதனுக்குஇத் தயவுசித்தமானதினுல்
பூவைமனதிளகிப் புதல்விக்கிரங்காமல்
தாபமாயின்னமின்னஞ் சதிகள்செய்யவேணுமென்று
முன்னுள்ளவன்மம் முகியாமல்மென்மேலும்
இன்னமிவளிருந்தால் என்னுடையசந்ததிக்கு

சென்மபகையாகுந் தேசநாளுள்ளதெல்லாம்
தொன்மைபகுந்தெடுப்பாள் தோகைஉயிர்போக்கவென்று
அநீதக்காரிநெஞ்சில் அலகையுமேஉட்புகுந்து
தென்னவன்ஊர்சேருமுன்னே செல்வியரை கொல்லுதற்கு
நாவியைசோற்றிலிட்டு நாரியருக்கேகொடுத்தாள்
சிவன்பிரிவதற்கு தெய்வசித்தமில்லாததால்
மங்கைானதுழைந்து மாறிஉபாயமிட்டு
பொங்கியமாளிகையும் பொன்னுடமைஆஸ்திகளும்
சூட்சமாய்காத்திருக்க துரைவைத்தசேவகரை
ஏத்திஅருகழைத்து இணக்கியேஉட்படுத்தி
மெத்தபுகழ்ந்துகொண்டு வெகுபிரியமுள்ளவள்போல்
பட்சம்பிடித்தவரை இப்பாதகியுமேதுரைப்பாள்
சேவகரேஎன்கணவன் தேவியார்மூத்தகுடி
பூவைஅவள்பயின்ற புதல்வியொருகிட்டுரி
சீறிஅவளென்னோடே தினந்தினமும்சண்டைபகை
பொறுக்கசகிக்குதில்லை பூங்கொடியை நீங்கள்சென்று
பெரியமலைக்கிடங்கிற் பின்னொருவர்காணமல்
சிரசுகரம்ரண்டும்வெட்டி சீக்கிரத்தில்கொண்டுவந்து
என்கண்ணின்முன்னேவைத்தால் ஏற்கநல்லபொன்மணிகள்
பொன்மாலை ஆபரணம் பூட்டுங்கொலுசுடனே
தன்மானம்மெத்த தருவேனொருகோடி
இம்மாத்திரம்முதலும் இப்போகொண்டேகுமென்றூர்
உறவாக்கிசேவகரை உபசரித்தபின்னாலே
நிறைவாகப்பாராவில் நிற்போருமென்சொல்வார்
இராக்கினியேநாங்களெல்லாம் இராவுதான்உண்டெழுந்து
தூக்கியேகொண்டு சொன்னசொற்பிசகாதேவருவோம்
நாங்கள்வருமளவும் இராக்கினியே நீர்விழித்து
தூங்காமல்மாளிகையில் தொன்மையதுகாத்து
சன்னல்கதவடைத்து தாழ்பூட்டவேண்டாமென்று
அந்நேரம்ஆயிழைக்கு ஆணையிட்டுதான்கொடுத்து
எப்போதும்தங்கும் இடமானல்சேவகர்தான்
தப்பாமல்அன்றிரவு சாப்பிட்டவர்கூடி
ஊரெல்லாமுண்டு உறங்குகின்றவேளையிலே
பாதிரவுக்காரரொத்து பாரிருளாஞ்சாமமதில்
காவலன்தேவியரும் கண்விழித்துகாத்திருக்க
சேவகரெல்லாங்கூடி சிறந்தமனைக்குட்புகுந்து
தையலுடன்சேர்ந்து தலையாரிஒத்திருந்து
பைய அறைக்குள்புகுந்து பாலகியாள்கண்துயின்ற
தூங்குமஞ்சந்தன்னை தொடர்ந்தெடுத்து தூக்கிவந்து
நீங்கும்கபாடம்விட்டு நெடுந்தெருவுந்தான்கடந்து
மட்டிட்டகோட்டை மணிவாசல்மேற்றூண்டி

அட்டகிரிநோக்கி அப்பால் கடந்தேகி
அழகுமலைக்குவட்டில் அப்பால்ஒருமடுவில்
குழவியைகொண்டிறக்கி கொலை அரிவாளோங்குமுன்னே
செல்விபுரண்டுருண்டு திகைத்தெழும்பிவாயுளற
கரடிமந்திகாட்டாவுங் கரிவோரிகூக்குரலும்
செந்நாய்மரநாயுந் திரண்டஅநங்கூக்குரலும்
கன்னியுங்கேட்டயர்ந்து கலங்கிஉடல்தத்தளித்து
ஆவோவென்றங்கலித்து அள்ளாடிஉள்ளயர்ந்து
சேவகரைசென்றுவிச் செங்கண்விழிஆருகி
அண்ணவரேஎன்பிறவி அடைக்கலம்நான்உம்பிறவி
புண்ணியமாய்காத்திடுங்கோ பொறுமையுள்ளஎன்பிறவி
தங்கைநான்உங்களுக்கு தமையர்களேஇவ்வேழை
உங்களைச்சார்ந்தேன் என் உயிர்ப்பிச்சைதாருமென
அழுதுஉடலயர்ந்து அங்கம்நடுநடுங்கி
குழந்தைஉரைகேட்டயர்ந்து கொல்லவந்தசேவகர்தான்
தலையறுக்கக்கூடாமல் தங்கள்மனந்தத்தளித்து
மலைத்தவருங்கன்னியுட மருக்கத்தைகண்டிரங்கி
கொல்லக்கைநாடாமல் கூடிதிகைத்தவர்கள்
அல்லற்படநம்மை அலக்காரியேய்த்தாளே
கொலைசெய்துகைரண்டும் கோதையர்கண்காணுட்டால்
நிலையுண்டோநம்மையுந்தான் நிஷ்டூரிகொன்றிடுவாள்
அரசுநிலையழிக்க அகப்படாய்வந்தோமே
துரோகிநம்மையேய்த்தாளே சும்மாவல்லோவந்துவிட்டோம்
குழந்தைபழியேற்க கூடிமதிகெட்டுவந்தோம்
குழப்பமாய்போனோமே கொல்லுமதியேற்றோமே
விலக்கிடுவார்ஒருவர் வெட்டவருவார்ஒருவர்
தலையறுப்போமென்றொருவர் தங்கவைப்போமென்றொருவர்
சேவகருந்தர்க்கமிட்டு சோர்ந்துநிற்கும்வேளையிலே
காவலனோர்சிற்றரசன் கலைவேட்டைஆடிடவே
அரசனும்ஆட்களுமாய் அடவியிலேவந்திருக்கும்
குரலொலியைக்கேட்டே கொல்லவந்தகள்ளரஞ்சி
நிற்கக்கூட்டாமல் நேரிழையாள்கையைவெட்டி
மருண்டோடவோடி மலைகடந்தேநாடுவந்து
தென்னர்தர்மராசருட தேவிஇளையாளிடம்போய்
கன்னியுயிர்போக்கி கரங்கொய்துவந்தோமென்றுர்
தையலுக்கொப்பனையாய் தலையாரிமாருரைத்து
சேயிழையாளொத்தமுதல் சேவகருங்கைவணங்கி

## ஞானசவுந்தரியின் உபாதனைகளும் பசாசுகளின் சோதனையும்

கள்ளர்கடந்திடவே கையைவெட்டிகாட்டிலிட்ட
பிள்ளைதுயர்சாற்ற பேருலகோர்கேட்டருளும்
தாய்மகளைக்கொல்லவிந்த தாரணியில்கண்டதுண்டோ

ஞாயம்புரியாமல் ஞானசௌந்தரியை
வெட்டிமலைக்கெபியில் வேருகவிட்டகன்னி
கொட்டும்ரத்தம்ஆருய் கொடுங்கைதறிபட்டவளாய்
அட்டகிரிகுவட்டில் அங்கேஅலறிஉயிர்துடித்து
மட்டில்லாவேதனையும் மாருதமனத்துயரும்
ஆருந்துணையுமற்று அர்த்தராவானதிலே
போகத்திடனுமற்று பெலன்குன்றந்துபூங்கொடியும்
அள்ளாடிஉள்ளறிவு அயர்ந்துநினைவுதப்பி
உள்ளியகண் இரண்டும் உணர்வற்றவேளையிலே
கூடிக்கடியலகை குலக்கொடியாள்முன்தோன்றி
பேடிவருத்தியிந்த பேதையரைக்கொல்லவென்று
பற்கடித்துதுன்னலகை பயங்காட்டிவந்ததங்கே
செல்வியரைவந்ததட்டி சிக்கெனகோபித்தரற்றி
அலகைஅவலட்சணமாய் அங்கமெலாம்தீயெரிய
சலம்வடியசீக்காது சளுவட்டைவாயுதடு
பொந்திவளைதடியும் பொருந்தியமுச்சூலமுமாய்
உந்தியில்ஊன்வடிய உடம்பெல்லாம்பிணவாடை
காலுங்கொடுவாலுங் கண்டத்தில்ரண்டுகொம்பு
வேலுஞ்சடைமுடியும் வேஷமும்வெவ்வேருய்
குந்தியுந்தேம்பிக் குறுந்தாணிபோல்வயிறும்
மண்டிகுதித்தெழும்பி மாயமலக்கூளிகள்தான்
கிலுக்குத்தடியுடனே கேடயமும்கைவேலும்
வலையுடனேவேதாளம் வந்துநின்றுகொக்கரிக்க
அலகையிதுவென்றுகன்னி அஞ்சாமல்நெஞ்சிலுற்று
சிலுவையிட்டுஅர்ச்சியஷ்ட தேவமாதாமந்திரத்தை
முழுதும்சொல்லிவர மூச்சடங்கிவேதாளம்
கிளம்பிகெடிக்கலங்கி கிட்டநில்லாதோடியதே
வேதாளம்விட்டொழிய வெட்டிவிட்டகைகாயம்
நோவுதான்தாளாமல் நொந்துசட்டமயர்ந்து
மாதாவைதான்நினைத்து மலைமேல்படுத்துருண்டு
ஆதரிப்பாரில்லாமல் அன்றிரவுதான்கழித்தாள்

## பிலேந்திரராஜன் ஞானசவுந்தரியை மீட்டல்

வாட்டமதுதீர்க்கவென்று செங்கதிரோன்தோன்றலுற்றுன்
வேட்டைவந்தளஜித்தூர் வேந்தன்பிலேந்திரரும்
மானுங்கலைத்தடித்து மன்னவனும்ஆசனமும்
தேனுலகளசித்தூருக்கு செல்லவழிகொண்டவர்கள்
திரும்பிவரும்வேளையிலே சிறுகியொருபைங்கிளியாள்
இருகரமுமுட்டில்லாது ரத்தமுங்காயமுமாய்
வஞ்சியுடல்சோர்ந்துமுல வாயில்நுரைகவிழ
பஞ்சுடல்சோர்ந்துவாடி பக்கத்தில்படுத்திருக்க

படையுடனே வந்தமன்னன் பைங்கொடியின் சாயல்கண்டு
அடவிக்கெபியிலிந்த ஆள்ரூபமேதெனவே
மாசனத்தைதான் நிறுத்தி மாதுவைசோதிக்கவே
தேசமதிற்பெரிய செல்வன்மகளென்னவோ
கண்கொள்ளாக் கொடுமைகளுங் கரக் காயச்சோர்வுகளும்
பெண்ணாளுக்காயிரங்கி வேந்தன்பிலேந்திரரும்
தார்குழலை அண்டிமன்னன் சார்த்திபிடித்திருத்தி
கூர்விழியாலஞ்சனமுங் குளிர்ந்தவெள்ளங்கோரிவந்து
பாவைதுயர்மாற்றி பட்சணமும்உட்செலுத்தி
சீவன்திடனாக்கி சேயிழைக்குபோதம்வந்து
மன்னனுடன்படையும் மங்கையையாதரித்து
கண்ணீர்விழிசொரிய காவலன்பார்த்துரைப்பார்
கனிமொழியே நீயார்உன் கரத்தைவெட்டி உன்னை இங்கே
தனித்துன்னை இவ்வனத்தில் தள்ளிவிட்டதாரெனவும்
உன்னூரும்உன் குலமும் உன் தந்தைதாய்பெயரும்
சின்னப்பிராயமதில் தீவினைவந்தெய்தியதும்
உண்மைப்படியாக ஒன்றொன்றாய்சொல்லுமென்றார்
தார்குழலுமந்நேரஞ் சாற்றுவாள்மன்னனுக்கு
அண்ணே உடன்பிறப்பே அரசர்குலக்கோவே
கண்ணான கண்மணியே காவல்துரைமகனே
என்பாடுநானுரைக்க எனக்குமோஓரமில்லை
துன்பமுஞ்சோதனைத் துயர்கஸ்தியானதுவும்
சின்னகுழந்தையிலே தீவினைவந்தெய்ததுவும்
அன்னை இறந்துவிட்டாள் அறிவுதங்குமுன்பாக
அத்தனும் இரண்டாந்தாரம் அரிவைஒன்றை மன்றல்செய்து
புத்திசொல்லிஎன்னை அந்த பூவையிடங்கையளித்து
தந்தையர்வேட்டைபோய் தனதரண்மனைமீளுமுன்னே
நிந்தித்திளைய அன்னை நிஷ்டுரஞ்செய்தென்னையும்
நெடும்பகையாய்த்தானிருந்து நேற்றுநடுச்சாமமதில்
எடுத்தென்னையிம்மலைமேல் இட்டனவும்நானறிவேன்
அடுத்துநிற்கஜந்தாறு ஆள்கொலைஞர்கண்டேன்நான்
கெடுதிவந்ததென்றறிந்து கெஞ்சிஅவர்கால்பிடித்தேன்
கொலைக்கத்திஓங்கியவர் கொல்லவந்த கையமர்த்தி
தலையாரிகண்டிரங்கி தர்க்கமிட்டுநிற்கையிலே
மன்னுநீர்மான்கலைத்த மனுக்குரலைக்கேட்டவர்கள்
என்னுயிரைப்போக்காமல் இருகரங்கொய்தோடிவிட்டார்
இன்றுரா இவ்வனத்தில் இடருல்நிலமுருண்டு
ஒன்றுமறியாதுணர்வுதப்பி நான்படுத்தேன்
என்பிறவிஉம்மாலே ஈடேற்றப்பெற்றேனையா
உன்பாதம்நான்போற்றி உமக்கடிமையாயிருப்பேன்
இப்போதுகாத்ததுபோல் எப்போதும்காத்திடையா

தப்பிப்பிழைத்தேனையா தாயிளையாள்சத்துருநான்
அத்தனையுங்காண்பேனோ அடியாட்கோர்தஞ்சமில்லை
உற்றவர்தானுமில்லை உடன்பிறப்பொன்றுமில்லை
அடியாள் இளமையிலே அத்தலைந்து நின்றதினால்
குடியிருந்த ஊர்பதியுங் குலப்பிதிரும் நானறியேன்
மாதாபிதா நாமம் மனதில்தரிக்கவில்லை
ஆதரிக்கப்பேருமில்லை அடியாளுந்தஞ்சமென்று
இப்படியேகன்னியரும் ஏங்கியழுதழுது
செப்புமுறையானதெல்லாம் தென்னவனுங்கேட்டிரங்கி
குலக்கொடியைகைதூக்கி கூட்டிமெள்ளதான் நடத்தி
மலையுங்கடந்துவந்து மன்னவனுந்தானைகளும்
தளத்திலிறங்கிநின்று தங்களெசித்தார்நோக்கி
குளமும்வயல்வரப்புங் கூர்த்தமுள்ளும்காடுதாண்டி
வேட்டைக்குசூழ்ந்துவந்தோர் வேந்தனுடனாக
வேந்தரவரேகிட வஞ்சகமும்மன்னவனும்
அன்னைமாதாவைத்தொழுது அறிவிப்பார்பாலகனும்
மாதாவேதந்தையரே மலையேறிமானடித்து
மீதாண்டத்தாரேறி மீண்டுவரும்வழியில்
இந்தமடக்கொடியை இருகரமுந்தறித்து
நிந்தித்துதள்ளிவிட்டு நிஷ்டூரர்போய்மறைந்தார்
கையற்றசோகமும் கறைபிடித்தகோரையெல்லாம்
பைங்கொடியாள்பாடுகண்டு பார்த்திரங்கிகூட்டிவந்தேன்
அன்னையரே தந்தையரே அரண்மனையிலோரறையை
கன்னியிவட்கீந்து கைமுட்டுபுண்ணாற்றி
நோதலில்லாமலித்த நுண்ணிடையைதற்காத்து
சாதந்தான் அந்திசந்தி சாப்பாடுமூன்றுதரம்
ஒருநாட்குறையாமல் ஒண்டொடியாட்கெண்ணையிட்டு
அரப்பிட்டுவெந்நீரிட்டு அன்பாய் அமுதூட்டி
கோடித்துயில்சூட்டி கொடித்துகிலைதான்மாற்றி
ஆடைஅழுக்கேறாமல் அடிக்கடிசுத்திசெய்து
ஏவலரிலேசிலரை ஏவலுக்குகையளித்து
பூவையர்க்கெப்போதும் போசனந்தண்ணீர்கொடுத்து
மாற்றுமொழிகூறி மங்கைமனங்கோணாமல்
வார்த்தைஇழுக்குவகை யொருவர்சொல்லாமல்
அன்புபுரிந்திவளை அன்னையரே நல்மனமாய்
துன்பமணுகாமல் தோகையரைகாத்திடென்று
தந்தைதாய்தன்னிடமாய் தையல்கரமில்லாளை
மைந்தனும்கையளித்து மறுகாரியம்பார்த்தார்
பாலன்உரைப்படியே பார்பரம்மாள்பைங்கொடிக்கு
மேலறையிலோரறையை மெல்லியட்குக் கையளித்து
காயதைலம்வைத்து கைமுட்டுபுண்ணாற்றி

போசனம் இராப்பகலாய் பூவையர்க்குதானளித்து
எவ்வெண்ணெயிட்டு இளவெந்நீர் நீராட்டி
வெள்ளைத்துயிலழுக்கு வெளுத்தென்னுஞ்சூட்டி
இணக்கமுள்ளஊழியரை ஏவலுக்குகையளித்து
வணக்கமாய்பார்பரம்மாள் வஞ்சகமற்றேவாழ்ந்தாள்
ஞானசௌந்தரியாள் தேவனுக்குநன்றிசொல்லி
வானுதியைத்தொழுது வளர்ந்தோங்கும்நாளையிலே

## பிலேந்திரர்க்குப் பெண்பேசல்

மன்னன்சிமியோனும் மைந்தர்பிலேந்திரர்க்கு
கன்னியரைத்தேடி கடிமணஞ்செய்வோமென்று
மாதாபிதாமகிழ்ந்து மறுவேந்தன்புத்திரிக்கு
தூதனைத்தானனுப்பி துரிதமாய்பேசிவந்து
பரிசமிட்டுபோகுஞ்செய்தி பாலகனுங்கேட்டறிந்து
அருகேநின்றபுத்திரனும் அத்தனைப்பார்த்தேதுசொல்வார்
அத்தனேஎந்தனுக்கு ஆகமணஞ்செய்யவென்றால்
கொற்றவர்புத்திரியை கூறிடவேதேவையில்லை
வதுவைசெய்யஎந்தனுக்கு வனவேட்டைபோய்வரச்சே
வெய்யகானகத்து வெகுதுயரம்பூண்டவளை
இருகரமுமில்லாளை எனக்குமணஞ்செய்யுமென்றார்
பிலேந்திரர்சொன்னசெய்தி பிதாமாதர்கேட்டயர்ந்து
சலிப்புடன்புத்திரன்மேல் தந்தையர்க்குகோபமதாய்
கோபித்துத்தர்க்கமிட்டு குமாரனைப்பார்த்தென்னசொல்வார்
பூவைக்கரம்ரண்டுமில்லை பூர்வமும்நாமறியோம்
சாதுகுலமரபுந் தையலூர்பேரறியோம்
போதமுள்ளஎன்மகனே புத்திதப்பிபோனதென்ன
இறைவர்குலராசருக்கு ஏற்றிடுமோஇம்மடந்தை
குறைவுநமக்கல்லவோ கொற்றவர்க்கேற்காதுகண்டாய்
சரியொத்தராசாக்கள் தையலைக்கண்டேநகைப்பார்
சிரிப்பார்பழித்துரைப்பார் சிறுமையாய்த்தான்நினைப்பார்
மங்கையரைநீர்விரும்பி மகத்துவத்தைபோக்காதே
சங்கைக்குப்பத்தாத தையலைநீநம்பாதேவேறு
மன்னவர்புத்திரியை மணக்கோலஞ்செய்ததுண்டால்
பொன்னுடைமைராச்சியங்கள் புரவிகரிசீதனங்கள்
தண்டிகைபொன்னாலே தருவார்நிதிகோடி
கண்டுமகிழ்ந்து களிகூர்வாய்நீமகனே
எனக்கொருவன்நீயுமல்லால் இணைதுணைவேறுமில்லை
மனங்கெட்டுகன்னியரை மணஞ்செய்தால்கொள்ளாது
எளியவளோஎங்கிருந்தோ எவ்விடமோகன்னமிட்டு
பிழைகுற்றங்கண்டுடனே பேதைரெண்டுகையைவெட்டி
காட்டில்கிடத்திவிட்ட கள்ளியென்றுசொல்லுவார்கள்

கூட்டிவதுவைசெய்தால் குலத்துக்குமாகாது
அப்படிக்கொத்தவளை ஆர்நம்பிமன்றல்செய்வார்
செப்புமுரைதட்டாதே செல்வனேஎன்றுரைத்தார்

## ஞானசவுந்தரிக்கும் பிலேந்திரருக்கும் திருமணம்

பாலகனைதந்தையர்தான் பகைத்துகோபித்தாலும்
கோலக்கொடிக்கிரங்கி கோமானென்சொல்லுவாராம்
ஐயரேதந்தையரே அகதியைகைசேர்த்தக்கால்
கையேற்றபுண்ணியத்தை கடைத்தலையிற்சேராமல்
இருகரமில்லாளை இடையிலேதள்ளிவிட்டால்
தரையிலொருமனுவோர் தாபரிப்பார்வேறுமுண்டோ
சாகுமட்டும்நம்மையிவர் தற்காப்பார்என்றிருந்து
பூவையரை இப்பொழுது பிடித்தப்பால்தள்ளிவிட்டால்
பாவமில்லாமல்புண்ணியத்தின் பலன்சற்றுங்கிட்டாதே
கையிருந்தால்ஏவலருக்கு காசுமிகச்சேர்த்திடுவார்
ஐயமிரந்தருந்தஅங்கம் இரண்டும்இல்லாததால்
பேதைமாள்வதல்லால் பிழைக்கவழி இல்லைஐயா
மாதுரண்டுகையிழந்த மங்கையர்க்குத்தானிரங்கி
தந்தையரோடேஎதிர்த்து தர்க்கமிட்டுநிற்கையிலே
மைந்தனுக்குஅத்தனுந்தான் மறுத்துமொழிகூறுவாராம்
புத்திரர்கையிழந்த பூவையரைத்தள்ளாமல்
நித்தமும்நேரிழையை நிறுத்தியேநாம்வீட்டில்
சாப்பாடுபுடவை தலைக்கெண்ணைதான்கொடுத்து
காப்பாற்றிஅரவணைத்து கனிமொழியாய்க்காத்திடலாம்
ஆனாலும்என்மகனே அவளைமணஞ்செய்யாதே
மாநிலத்தில்மன்னரின் மகளைமணஞ்செய்யென்று
அத்தனும்மைந்தனுக்கு ஆனவிதஞ்சொன்னாலும்
புத்திரனும்ஐயருடன் புகலுவார்இன்னமொன்று
எனக்கினியதாதாவே இருகரமில்லாதவளை
அனுதினமும்நம்முடைய அரண்மனையிலேயிருத்தி
முப்பொழுதும்சாதம் முடங்காமலேகொடுத்து
நட்பிட்டுக்கொண்டாலும் நாரியருக்கொப்பல்லவே
அங்கமெடுத்தமனு ஆருமோருபேரல்லவோ
மங்கையிவள்மோகமுற்று மனதுக்கமையாமல்
இருந்தேங்கிமூச்சுவிட்டால் எங்கேபோம்அந்நெருப்பு
அரண்மனைசற்றுமில்லா தப்பால்விலகிடுமோ
பூமிபெருங்கடலை போயமிழ்ந்துகண்டாலும்
காமமயக்கட்லை கண்டறிந்ததிட்டமுண்டோ
மனிதருக்குமோகாசை மாருப்பெருமயக்கம்
கனிமொழியாள்தனக்கு யாரேதுணையாவார்

கையில்லாமங்கையரை கலியாணஞ்செய்யாமல்
மெய்யழகுள்ளவனை விவாகம்முடிப்பதில்லை
சாவொருநாள்வாராமல் தட்டிவைப்பார்உண்டானால்
மேவியோர்பெண்வடிவை விவாகம்முடித்திடலாம்
அசுப்பில்வருஞ்சாவை அகற்றிடுவார் இல்லையென்றார்
பாசமுள்ளபெண்ணரசை வதுவைசெய்தால்என்ன
இப்பவென்றும்பின்னையென்றும் என்நெஞ்சில்நாளென்றும்
ஒப்புக்கடங்காதஉயர் நிலையை நம்பியிந்த
பூதலத்தினுசைகளை போதைநினைத்தென்னபலன்
ஆதிசர்வேஸ்பரனார் அருளேநிசமாகும்
மனிதர்ஊர்நிலையும் மணியமும்தோரணியும்
நினைவுக்கமையாது நில்லென்றால்நில்லாது
சேடியழகுள்ளவரும் செல்வமும்பாக்கியமும்
ஓடிஒளிக்குமல்லோ உலகப்பெருவாழ்வு
நம்பியிருந்தவர்க்கு நன்மைபலனில்லைஐயா
தும்பிஅரித்தமலர் தூளல்லோபூலோகம்
ஆதிபிதிர்நன்றாக ஆண்டவனார்முன்வகுத்த
சாதிஆண்பெண்ணுமல்லால் தாழ்ந்துயர்ந்தோர்வேறுமுண்
பாப்பாரில்மூப்பாரும் பலபலகீழ்சாதியெல்லாம் [டோ
தாப்பெல்லாமோர்ப்போலே சலவாடைநாற்றமொன்று
அச்செல்லாமொருப்போலே அவர்வளர்த்தபிள்ளைகளாம்
மிச்சமெங்கேதந்தையரே மேற்சாதிஆவதெங்கே
என்மனதுக்கேற்ற இருகரமில்லாதவள்தான்
பொன்பணம்போதமுள்ள பூங்கொடிமார்தேவையில்லை
கரம்ரண்டில்லாதவளை கலியாணம்செய்யாவிடில்
விரத்தனாய்நானிருப்பேன் விவாகம்விருப்பமில்லை
இந்தமுறைப்படியே இளவரசன்சொன்னவுரை
தந்தைதாயுங்கேட்டு தடுத்தொன்றுஞ்சொல்லாமல்
புத்திரன்சம்மதிபோல் பூவைகரமில்லாளை
அத்தன்உறன்முறையும் அன்னைசுற்றஞ்சம்மதித்து
மன்னன்பிலேந்திரர்க்கு வதுவைமணக்கோப்பொதுக்கி
அந்நாட்டில்உள்ளவருக்கு அசனம்சமைத்தளித்து
பொன்னாபரணமிட்டு பூங்கொடியுங்காந்தனையும்
சன்னியாசிமார்கோவில் தண்டிகையில்கொண்டிறக்கி
சிரேஷ்டர்குருஆலயத்தில் செய்முறையெல்லாம்நடத்தி
பூட்டுந்திருமங்கிலியம் பூவைகழுத்தணிந்து
கர்த்தாவைமன்றாடி கணவனுங்காதலியும்
உற்றவரும்சோபனமாய் உலகம்மனமகிழ்ந்து
பாரவெடிதுவக்கி பலவர்ணபொற்கொடியும்
பீரங்கிவாணம் பலத்தகம்பப்பூவாணம்
கூட்ட்முரசுகளுங் கொண்டாட்டப்பாவனையாய்

சிரேஷ்டர்பதந்தொழுது தேவாலயங்கடந்து
கணவருந்தேவியரும் கரிசிவிகைமீதேறி
சூழ்ந்துசனத்தோடே சோபனங்கண்டேமகிழ்ந்து
ஞானக்கலியாணம் நன்மைபெற்றுவாறவர்கள்
மாநிலத்தோர்சேரடினையால் மாளிகையில்வந்திறங்கி
மாதாவைக்கைதொழுது மணவாளன்தேவியரும்
பூதலத்தில் வீற்றிருந்து பூவைபரோடேமகிழ்ந்து
சந்தோஷங்கொண்டாடி தந்தைதாய்தேவியுடன்
மைந்தனும்தந்தையரும் மாதாவும்தேவியரும்
கூடிமனமகிழ்ந்து குவலயத்தை ஆளுமந்நாள்

## தருமராஜர் வேட்டையாடி திரும்புதலும் மகளைத் தேடுதலும்

வாடியில்துன்புறவே வந்தபயிர்தின்றழித்த
மிருகத்தைசங்கரிக்க முன்வேட்டைபோனமன்னன்
தன்மமகாராசருந்தான் தங்கள்நாடெல்லாம்போய்
விலங்கைகுலமறுத்து விரும்பியவெல்லாம்பார்த்து
தலைவனும்ரோமையிலே தலம்புகுந்தாரம்மானை
வேட்டைக்குச்சென்றமன்னன் வீட்டில்வந்துபுத்திரியை
கேட்டார்மகளை கிட்டநிற்க காணாதால்
அண்ணனுடையதேவி அலங்காரி ஆனவள்தான்
ஒன்றையொன்றுமாறுடி உரைக்கமொழிகேட்டருள்வீர்
கணவனேபாலகியை கையேற்றநாள்முதலாய்
அணைவாய்அருகிருத்தி அன்பாய்வளர்த்துவந்தேன்
இரவுபகலென்னைவிட்டு இளகாதிருந்தமகள்
அருகிற்படுத்தமகள் ஆராட்டக்காணாதால்
பின்னாலேநான்விழித்து பிள்ளைதனைக்காணாமல்
அந்நேரம்நான்பதறி அங்கங்கேபார்ப்பளவில்
சாத்தியசன்னலொன்று தாழுருவிநின்றதினால்
பார்த்தோடிதேடிப் பதறி அலமலைத்து
மாளிகையும்சாவடியும் மண்டபமும்பூமுகப்பும்
ஊழியரும்நானுமாக ஓடியாடிப்பார்த்தோம்
மகளையுங்காணாதால் மாறியே டவிட்டு
ஆகத்தெருத்தேடி அங்காடிஆலயங்கள்
தேடியேகாணாதால் திரும்பமனையில்வந்து
வாடிச்சனைந்திடியாள் வாணாள்மறுதலித்து
பீடைமிகுந்துறைந்து பெருமூச்செறிந்திருந்து
கேடுறைந்துநானடியாள் கிலேசம்மிகப்பூண்டேன்
மன்னனுக்கு தேவியர்தான் மகள்துயரம்சாற்றியதால்
தென்னவனுங்கண்மருண்டு தேகம்விறுவிறுத்து
வெள்ளிசெம்புபித்தளையும் வெண்கலமுந்தானுருக்கி
உள்ளமதில்ஊற்றிவிட்டால் ஊடுருவப்பாய்ந்ததுபோல்

அண்ணல் அயர்ந்துழன்று அலகோடலகுதென்னி
கண்ணிரண்டும் பஞ்சாத்து காதடைத்து மேலிளைத்து
ஏங்கியேங்கி யேக்கமுற்று இருந்துபெருமூச்செறிந்து
தூங்கி இருந்தேங்கி துக்கித்துசங்கடத்தால்
உள்ளங்கலங்கி உடலிருகால்கைஅயர்ந்து
அள்ளாடிஉள்ளமெல்லாம் அயர்ந்துநடுநடுங்கி
இருதயமெல்லாங்குலுங்கி இருவிழியும்ஆறாகி
மருகிகுழறிமன்னன் மனைவியரைப்பார்த்துரைப்பார்
காதலியேபாலகியை கையேற்றுநிஷ்டூரி
சூதுவினைசெய்த துன்மார்க்கம்நானறிவேன்
அன்னைபுதல்வியர்க்கு ஆகடஞ்செய்யாளெனவே
உன்னிடத்தில்கையளித்து ஊர்ப்பயணம்போனேன்நான்
என்னைக்கெடுக்கவல்லோ இளையகுடிசேர்த்தேன்நான்
சின்னக்குழந்தையைநான் சேர்த்தணைப்பாரில்லையென்று
வதுவைசெய்தேன்நானுமுன்னை வஞ்சகிகெடுத்தாயே
சசிசெய்ய என்மகட்கு சத்துருவாய் நீஇருந்தாய்
பகைகாரர் ஆருமுண்டோ பாலகியை நானிழந்தேன்
உவட்டுமொழிசொல்லாமல் உன்னைவிட்டுபோவாளோ
ஆறாத்திபோலே அனல்கொளுத்திவிட்டாய்நீ
மாறாதசூடாக மனைவியரேசுட்டாயே
அடியாமல்வையாமல் அநியாயம் செய்யாமல்
கடினமெத்த செய்யாமல் கடருவாளோஎன்புதல்வி
கிலேசமுடன்போனமகள் கிடங்குக்குழிவிழ்ந்தாளோ
மறைவாகப்போனமகள் மறுதேசம்போனாளோ
புத்திரியைக்கொன்றுமண்ணில் புதைத்தடக்கிப்போட்டாயோ
எத்திமொழிகூறினாளோ ஏதேதோ நானறியேன்
என்மகள்தன்பேரில் இரக்கம்உனக்குண்டானால்
முன்பேஎனதுமகள் மோசமாய்போனசெய்தி
நானறியவேண்டுமென நடந்தசெய்தியானதைநீ
ஆனஆள்விட்டெனக்கு அறிவிக்கவேண்டாமோ
வஞ்சிநீசெய்தஇந்த மாறாட்டமானதெல்லாம்
நெஞ்சிதெளிவாமோ நினைவயருமோஒருநாள்
யாத்திரைபோகுமன்னாள் சலித்தழுதவென்மகளை
தேற்றிமனம் ஆற்றிவிட்டு திரும்பிவந்தேன்காணேனே
அண்ணல்தர்மராசருந்தான் ஆறாமல்தேறாமல்
எண்ணமிகப்பூண்டு ஏங்கியழுமாறுகண்டு
கணவனிடத்தினின்று காதலி கண்ணீர்சொரிந்து
துணைவன்முகம்பார்த்து துக்கித்தழுதுசொல்வாள்
சோதிநிலைதவறாத் துரையரசேஎன்கணவா
நாதருக்கேராதபிழை நானடியாள்செய்வேனோ
போதங்குலைந்தேனோ புத்திகெட்டுப்போனேனோ

வேதத்தின் நீதிவிட்டால் விண்ணடைந்துகொள்வேனே
மக்களுயிர்பிரிக்கமனம் வருமோதாயார்க்கு
இக்கொடுமைநான்புரிந்தால் எரியலகைவிட்டிடுமோ
அறிந்துநஞ்சுதின்பேனே அடியாளை நீர்பார்த்து
புரிந்தமொழிசரியோ பாவிநான் இவ்வளவும்
விண்மொழிதான்கேட்க விதித்திருந்ததென் தலையில்
தாழ்மையாய் இன்னமின்னம் தலைவனுக்கென்சொல்லுவாள்
தென்னவனே நான்உமக்கு செய்தகுறைஒன்றுமில்லை
என்னைவிட்டுபுத்திரியாள் இளகினநாளன்றுமக்கு
ஒருவரைச்சொல்லியங்கே ஓடவிடாதேகுறைதான்
வருவார்வெகுபேர்கள் வந்தறிந்துபோறவர்கள்
தந்தைக்குரைப்பார்கள் தானறிவாரென்றிருந்தேன்
இந்தமட்டும்நீரறியா திருப்பதுவும்நானறியேன்
சஞ்சலத்தால்வாடி சலித்திருந்தேன்பெண்மதியாள்
வஞ்சகங்கள்எள்ளளவும் மனதிலில்லைமன்னவரே
கன்னெஞ்சியானவஞ்சி கண்ணீருகுத்தழுது
மன்னனுக்குசாற்றியதால் மனைவிமேலுள்ளபகை
பார்த்திபனும்விட்டுடனே பாலகிமேலுள்ளகவை
பிடைமிகுந்தாவி போசனமுங்கொள்ளாமல்
மேடையில்தாழடைத்து வெளியில்முகங்காட்டாமல்
அழுதுஅமர்ந்துமன்னன் அறைஅடைத்துதாழ்பூட்டி
இமைஒருநாள்மூடாமல் ஏக்கந்தெளியாமல்
எண்ணம்மிகப்பூண்டு இதயங்கசிந்துருகி
அண்ணல்துயருற்றசெய்தி அந்நாட்டினுத்தியோகர்
கேட்டறிந்தோடிவந்து கிலேசம்விடச்சொன்னமொழி
தாட்டிகனுங்கேளாததால் தன்னாட்டுர்ஏகிவிட்டார்
இஸ்பாஞ்யாராசருமே ஏந்தல்மனந்தேற்றுதற்கு
பொற்சிவிகைமீதுவந்து புரவலற்குசொன்னபுத்தி
தர்மமனந்தேருமல் தார்வேந்தன்சஞ்சலமாய்
மறுதேசம்இஸ்பாஞ்யா மன்னருஆரேகலுற்றார்
செருசலேம்ராசரிந்தச் செய்தியறிந்தவுடன்
இறைவனெழுந்தருளி ஏந்தல்தர்மர்முன்புவந்து
தனமானியுங்கூட சலித்துமுகங்கவிழ்ந்து
தர்மமனந்தேற சாற்றுவார்ஒப்புரைகள்
புரவலனே இப்புவியில் பிறப்பவரெல்லாம்இறப்பார்
தரையில்பிறந்தமனு சாகாதொருவரில்லை
பொய்வாழ்வுபூலோகம் போனரைவெல்வதில்லை
கைகடந்துபோனமகள் கடவுள்கிருபையினல்
வந்திடுவார்உம்மிடமாய் வானவரைக்கைதொழுவீர்
இந்தரோமாபுரியை ஆண்டமதுரேந்திரமன்னன்
தம்பிசந்திரவாலிபனர் தான்செய்ததீவினையால்

வம்பால்தமையனுட மனைவிகனிகொந்தாளை
காமவெறியால்மயக்கி கனமுடிவுஉண்டாக்கி
பூமியாள்வேந்தனுக்கு பொய்யையும்மெய்யாயுரைத்து
குரலறுக்கக்கையளித்து கொலைக்களத்தில்சென்றவளை
பரகதியோர்தானிரங்கி பாவைஉயிரைப்போக்காமல்
காட்டிருந்துநாட்டில்வந்து கனதுயரம்கையேற்று
கூட்டிச்சந்தியோகுமன்னன் குழந்தைவளர்த்திருந்து
அத்தாலேமங்கையரும் அநேகவிதகஸ்தியுற்று
வற்ருச்சமுத்திரத்தில் வள்ளம்கடத்திவிட்டு
வானவர்வந்துதவி வணிகனுருவேறி
தீனத்தைமாற்றியவள் திரும்பியூர்சேர்ந்ததுபோல்
சர்வேஸ்பரன்புதுமை சாற்றமுடியாது
திரையானுதேவியெனற சிநேகப்புராக்கினியை
பத்திலாருங்கற்பனையின் பாவவழிக்காசைவைத்து
கொற்றவனுந்தேவியரை கொலுவேந்தன்மந்திரிதான்
சிநேகப்புபாலனையும் சிரசுவெட்டவிட்டவரை
மனதிரங்கிசேவகர்நான் மலையில்விட்டுவந்திடவும்
அட்டகிரிக்குவட்டில் அங்கேபோய்சேர்ந்திடவும்
பட்டினியால்வாடாமல் பரகதிமான்பால்கொடுத்து
கலையுந்துயிலிழந்து கற்குகையில்வாழ்ந்தவரை
மலைவேட்டைசென்றமன்னன் மைந்தனையும்தேவியையும்
கண்டழுதுவிண்டழைத்து காவலன் தாய்மகளை
தண்டிகையிலேற்றிவந்து தன்பதியூர்சேர்த்ததுபோல்
தென்னவனேஉன்புதல்வி தேவன்கிருபையினால்
உன்னிடத்தில்வந்திடுவாள் உற்றதுயர் மாற்றுமென்று
புவியில்செருசலையார் போர்வேந்தன்செப்புமுரை
கவனமுற்றதர்மர்சற்றுங் கேளாதவாறுகண்டு
செருசலைராசருமே திரும்பியவர்ஊர்சேர்ந்தார்
தர்மர்மகட்கிரங்கி தனியாய்துயரமெல்லாம்
பேரெசித்துர் ஆண்டிருக்கும் பிலேந்திரரும்கேட்டயர்ந்து
ஊருக்குமூத்தமன்னன் உற்றதுயர்கேட்டுமவர்
அன்னைபிதாதேவியரை அனுப்பிவழிகொண்டிளகி
பொன்னிலங்கும்ரோமையிலே போர்வேந்தன்தன்னிடமாய்
அண்ணலைக்கைதொழுது ஆவிசடந்தழுவி
கண்ணீர்சொரிந்துமன்னன் கர்த்தனுக்கொப்பாயிருந்து
அரசரிருபேரும் ஆறுத்துயரடக்கி
பெரியதுரைராசனுட பேதலிப்புமாற்றுதற்காய்
கூராகச்சாற்றுமுறை குவலயத்தோர்கேட்டருள்வீர்
பேரானமன்னவனே பெரியதுரைராசாவே
தாரணியில்ராசருக்கு தலையானதர்மரசே
நீரறியஞானம் நிலத்தோர்அறிவாரோ

ஏரியின் நீர்போலே எங்கள்புத்திஞாயமெல்லாம்
வாரிக்குநீர்சரியாய் வற்றாசமுத்திரம்போல்
தாரணிக்கெல்லாம்பெரிய தலைவன்சலித்திருந்தால்
ஊரிற்பறந்தோடும் உலகபஞ்சுநாங்களல்லோ
பார்வேந்தர் நம்முடைய பாக்கியமெல்லாம்நிலையோ
ஆரெவர்க்குமிந்த அவப்பாடுஉண்டலவோ
மன்னவனே நம்மையிந்த மண்ணில்படைத்தகர்த்தன்
பன்னிரண்டாம்வயதில் பார்த்திருக்ககாணாதால்
அன்னைமரிமாதாவும் அழுதழுதுமூன்றாம்நாள்
கன்னிமரிஆலயத்தில் கண்டுகளிகூரலையோ
அர்ச்சியசிஷ்ட அந்தோனி அத்தனும்வேதியனும்
தர்க்கமிட்டுவாதெழும்பி தானும்தன்பாலகனை
தலையறுத்தர்ச்சிஷ்டோர் தந்தையுடையதோட்டமதில்
நிலத்தில்புதைத்துவைத்து நெடுங்குரல்கொண்டோலமிட்டு
அங்கங்கேதேடி அழுதவனும்மீண்டுவந்து
இங்கேபுதைத்துவைத்த இளம்பாலனைபெடுத்து
அலங்கரித்துவேதியனும் அரண்மனையிற்கொண்டுவந்தான்
தலையாரிகண்டறிந்து தவர்ச்சிஷ்டோன்தந்தையரை
மறித்துச்சிறையில்வைத்து மற்றும்நாட்கொல்லுதற்கு
இறைவனுத்தாரமிட்டு இடர்செய்துகொன்றவரை
கொலைக்களத்தில்செல்லுகையிலேகுமாரனையுந்தான் நினைத் [தார்
மலங்கிஅழுதுதந்தை மன்றாட்டைகேட்டுமைந்தன்
ஐஞ்ஞாற்றாங்காதவழிக்கப்பாலிருந்தர்ச்சிஷ்டோன்
மெய்ஞ்ஞானஅந்தோனி மெய்தவத்தோன் ஓர்நொடியில்
வந்தெழுப்பிதந்தையுட மலக்கத்தைதத்தான்மாற்றி
அந்தக்ஷணத்தில் அரண்மனையார்முன்தோன்றி
தாதன்புதல்வனையும் தரத்தைபொருத்திவைத்து
வேதாவைக்கைதொழுதார் வேதியனும்அவ்வேளை
உறங்கிவிழித்தாப்போல் உடனெழுந்துபாலகனும்
என்கழுத்தைஎன்தகப்பன் இரக்கமில்லாதேயறுத்தான்
வன்புத்தணல்மூழ்கி வாணாள்மருகையிலே
இந்தமுனிமன்றாட்டால் நான்வந்தேனென்றுரைத்தான்
அந்தமொழிகேட்டு அரண்மனையார்தானயர்ந்து
தவர்ச்சிஷ்டோன்அந்தோனி தாயாரைபோகவிட்டு
பகைமுடித்தபாப்பானை பழிக்குச்சதிபோக்கி
அத்தனைபுத்திரன்தான் ஆபத்தில்தற்காத்து
நித்தம்பதிமூன்று நிசபுதுமைசெய்தவர்தான்
கர்த்தனேஉம்மகனை காணவருத்திடுவார்
ஏதேதோஉம்முடைய ஏகனைமன்றாடுமென்று
சன்னியாசிஅர்ச்சியசிஷ்ட சவரியார்செய்புதுமை

தென்னவர்க்கு அந்நேரம் செப்புவார் அம்மானை
தலைவனே இப்புவியில் சவேரியார் நாளையிலே
அலகைபிடித்தவரும் அருங்கிணற்றில்வீழ்ந்தவரும்
கொலையாககுத்திவெட்டி குழியிலடக்கினவரும்
மலையில்கடுவாயால் மாண்டவரைத்தானெழுப்பி
நாலாயிரம்பிணிநீக்கிய நாட்டில்சிறந்தவரை
பூலோகமீதெழுப்பி புதுவேதமாக்குமந்நாள்
கோதையொருபெண்கொடியாள் கோடிநிதிஉள்ளவள்தான்
மாதாமகவில்லாமல் மலடாய்தவசுபண்ணி
பெற்ருள்ஒருமதலை பெண்ணென்றுசலித்து
சுத்தவந்தோன்செய்புதுமை தோகையர்கேட்டங்குசென்று
தையலுரைத்திடுவாள் சபையோர்திருப்பாதமுத்தி
ஐயனே எந்தனுக்கு ஆஸ்திமிகுதியுண்டு
ஆஸ்தியெடுத்தாளுதற்கு ஆண்மகவொன்றில்லாமல்
சோத்தியமாய்என்னுடைய குலமழிந்துபோகுதென்று
அரிவையரும்அர்ச்சியசிஷ்ட அருந்தவத்தோனோடுரைக்க
இரங்கிசவேரிஐயா ஏந்திழையாள்பெற்றெடுத்த
சிறுபுதல்வியைவருத்தி திரைச்சீலையால்மறைத்து
சர்வேசுரனுடனே சவேரியார்மன்ருடி
பேதைநிறமாறி பெண்மறைந்தாணுகி
மாதுமனமகிழ்ந்து மாதவத்தோன்பாதமுத்தி
தாய்மகனைச் சென்றெடுத்து தங்கள்பதிக்கேகினளே
நேசமுள்ளோன்செய்ததவம் நிகழ்த்தஉவமையுண்டோ
புரவலனே அர்ச்சிஷ்ட புகழ்சவரியார்புண்ணியத்தால்
வருவார்உமதுமகள் வானபரன்அருளால்
இந்நாட்டைஆண்டிருந்த எம்பரதோர்வாசனுக்கு
மன்னனுக்குமந்திரியாய் வருமெஸ்தாக்கியென்போன்
கரைகாணுதனமிழத்து காதலியும்பாலருமாய்
இருந்தபதியைவிட்டு ஏகாந்தம்போகையிலே
வாவிகுறுக்கிடவே வருந்தோணிமீதேறி
ஆவலுடன்நடந்து அக்கரையிற்சென்றிறங்கி
நடக்கும்வழிநோக்கி நால்பேரும்போகையிலே
தொடர்ந்துவள்ளக்கூலிதந்து நீபோவெனமறிக்க
தீங்குமெத்தகையேற்று தேவியரையிடுவைத்து
தாங்கிரண்டுபாலரையும் தந்தையர்கொண்டேகையிலே
போகும்வழிக்கெதிரே புனலாறுதோன்றியதே
ஏகும்எஸ்தாக்கியரும் ஏந்திரண்டுபாலரையும்
இக்கரையிலொன்றைவிட்டு எடுத்தொருவனைக்கட்டித்தி
அக்கரையில்வைத்துநடு ஆற்றில்வருகையிலே
கடுவாயும்ஓநாயும் எடுத்திரண்டுபாலரையும்

எடுத்தோட்டக்காட்டில் நிறைஇடையர்உழவர்கண்டு
ஓடிப்பறித்தரெண்டில் ஒருவன்உழவரிடம்
ஆடுகள்மேய்த்திடையர் அவர்களிடமொருவன்
இடையருழவருமாய் இவரைவளர்க்கையிலே
படையோடேசேர்த்தரெண்டு பாலரையும்தந்தையர்தான்
சாயல்குலங்கேட்டு தன்புதல்வரென்றறிந்து
தாயோடேபாலருமாய் தந்தையரொன்றாய்ச்சேர்ந்து
மாயப்புவிவாழ்வைமறந்து நால்பேருமொன்றாய்
தீவிணையிலிருந்தெட்டாநாள் சேர்ந்தார்பரலோகம்
எல்லார்க்கும்வல்லவர்தான் ஏகசர்வேஸ்பரனார்
தொல்லுலகில்மானிடர்க்கு துக்கமுஞ்சோபனமும்
தருதிடுவார்மாற்றிடுவார் தருவார்வெகுநிதிகள்
இந்தபுவிவாழ்வும் ஏற்றபலஆஸ்திகளும்
நெறிமுறையாநின்றிடுமோ நிலையோமனுவுயிர்தான்
சர்வேஸ்பரன்பேரில்தயவாக நீரிருந்தால்
வருவாள்உமதுமகள் வானுடர்புண்ணியத்தால்
இருந்தின்னமிரண்டுநவம் இன்பமாய்கேளுமென்று
சேசுமரிகுலத்தில் செதேயுமைந்தனுக்கு
வாசமணம்புரிய வந்தசனங்களுக்கு
உதவவைத்தமுந்திரிகை ஒன்றுகுறைவானதினால்
மதிமறந்துநிற்கையிலே மரியம்மாள்பாலகனும்
ஆறுகுடந்தண்ணீரை அரியரசமாக்கிவைத்தோன்
தேறிநீர்கண்டிருக்க திரும்பவருத்திடுவார்
மாதாதிருச்சுதனும் மாநிலத்தில்செய்தநவம்
ஆதரையிலார்க்கும் அமைத்தெழுதக்கூடாது
வேதமுனிஅர்ச்சியசிஷ்ட வின்சேந்தியார்செய்புதுமை
பூதலத்தில்மெத்தவுண்டு புதுமைஒன்றைகேட்டருளும்
காலத்தேவின்சேந்தியப்பர் கல்விகற்கபள்ளியிலே
பாலரொடுசேகரமாய்ப் படிக்கஅவர்செல்கையிலே
கழுதைரண்டுஓரிடத்தில் காரிநிறம்வெள்ளைமுகம்
வெளுத்தநிறங்காரிமுகம் வேசரிதான்ரண்டுநிற்க
பார்த்துசிறுவருந்தான் பலநிறமாகாதெனவும்
சேர்த்திறுக்கிவேசரியை சிரசுரண்டும்கத்தரித்து
மாறிப்பொருத்திவைத்து மறுத்தெழுப்பிமேயவிட்டு
தேறிச்சிறுவரெல்லாம் சென்றார்கள்பள்ளியிலே
கழுதைஉடையவனும் காணமலேதிகைத்து
பார்த்தெங்கும்தேடிஅவன் பாலருடபள்ளியில்போய்
காணையரேநீங்கள்ரண்டு கழுதைகண்டால்சொல்லுமென்
வெள்ளைமுகம்காரிநிறம் வெள்ளைநிறங்காரிமுகம்
உள்ளநிறமாகாதால் ஒன்றாயிருக்கவென்று

கழுதைகழுத்தைரண்டும் கத்தரித்துமாற்றிவைத்து
எழுப்பியேமேயவிட்டு இங்கேவந்தோமென்றுரைத்தார்
விள்ளுமுரைஅண்ணவி விபரமாய்கேட்டுடனே
பள்ளியிற்பாலரைத்தான் பார்த்தவருமென்சொல்வார்
காளையரேஉங்களுரை கனக்கண்டாப்போலிருக்கு
ஆளுகிறவஸ்துக்களை அப்படிநீர்செய்ததுண்டால்
உடையவர்க்குநேராமோ உங்களுரைநம்புவரோ
திடமறியநீங்கள்சென்று திரும்பகழுதைதலை
கண்டித்துமாற்றிகழுத்தை பொருத்திவைத்து
பண்டுநிறமாக்கிவிட்டு பள்ளியிலேவாருமென்றார்
கழுதையுடையவனும்காளையரும் போயுடனே
விழத்தாட்டிவேசரியை வெட்டிக்கழித்தறுத்து
கழுத்தறுத்துமாற்றிவைத்து கழுதைஉடையவனை
பற்றியேபோமென்று பள்ளியில்வந்தார்படிக்க
அளவிட்க்கூடாதஆச்சரியம் செய்தவர்கள்
இளங்கொடியைஉம்மிடமாய் எப்படியுஞ்சேர்த்திடுவார்
விண்ணேரைஎப்பொழுதும் விரும்பிமன்றாடுமென்று
அண்ணல்தர்மராசருக்கு அருகிருந்துசொன்னவுரை
இன்பமாய்கேட்டு இருதயமெல்லாமுருகி
அன்பாய்பிலேந்திரரை ஆவிசடந்தழுவி
எனக்கினியநேசமுள்ள எஜிப்தூர்பிலேந்திரரே
உனைப்போலெனக்கொருவர் உலகினிற்காணுதால்
அறிவுதங்கநீர்எனக்கு அதிகநவஆச்சரியம்
பிரிவுபிரிவாயுரைத்தீர் பிரியமுள்ளஎன்பிறவி
மனப்பிரியமுள்ளதம்பி மறப்பேனேநானுமுன்னை
உனைப்போலேவேறே உரித்துள்ளோரில்லையென்று
மன்னர்பிலேந்திரர்மேல் மாபிரியங்கொண்டாடி
புரவலனெஜிப்தரசன் போகவிடைகேட்டார்
இன்னஞ்சிலநாளைக் கெனதருகில்நீயிருந்து
பின்னுலேஉன்னூர்க்கு புறப்பட்டுப்போகுமென்றார்
இவ்வுரைதான்கேட்ட எஜிப்தரசனேதுரைப்பார்
இன்னஞ்சிலநாளைக் கிருக்கவேணுமென்றால்
அன்னைபிதாதேவியர்க்கும் அறிவித்துமாறிவந்து
ஏதுஞ்சிலநாட்கழித்து யான்போவேனென்றுரைத்தார்
ஓதுமொழிகேட்டுடனே ஒற்றனையுங்கூடவிட்டு
ஏந்தல்பிலேந்திரரும் ஏவலனும்எஜிப்தூர்போய்
கர்த்தனும்அன்னையரை கைதொழுதுஎன்னசொல்வார்
மாதாவேதந்தையரே மன்னர்தர்மர்க்குற்றகவலை
போதந்தெளிந்தவரை போசனமுந்தானருந்தி
நம்மூர்க்குநான்வரவே நான்நினைக்கும்வேளையிலே
சம்மதமில்லாமல் தர்மரசர்தன்னிடத்து

இன்னுஞ்சில்நாளிருந்து எஜிப்துரர்போமென்றுரைத்தார்
அங்கலித்துசொன்னமன்னன் அருகேகொஞ்சநாளிருந்து
இங்கேவருவேனென்று ஈன்றதந்தைதாய்க்குரைத்து
அன்னைபிதாதேவியரை வழியனுப்பிரோமையிலே
மன்னர்தர்மராசரிடம் வந்தமர்ந்தாரம்மானை

## ரோமைமீது வேற்றரசன் படையெடுத்தல்

ஏந்தலுரைத்தகவலை எஜிப்கரசன்மாற்றிவைத்து
வேந்தர் இருவருமாய் வீற்றிருக்கும் நாளையிலே
பகையுற்றமாற்றானும் படைமிகுதிசேகரமாய்
உகந்தரோமாபுரியில் ஒருநாட்டைச்சூழ்ந்துகொண்டார்
அந்ததுரைஎழுதி அஞ்சல்விடக்கண்டுதர்மர்
சிந்தைஅயர்ந்துருகி தேகமும்புண்பாடாய்
கைக்கமைக்கக்கூடாத கசடர்பெரும்படையை
செயிக்கப்படாதெனவுந் தென்னர் தர்மர்எண்ணமுற்று
நெஞ்சுகலங்கி நினைவுந்தடுமாறி
அஞ்சிமனம்பதறி அருகிருந்தமன்னனுக்கு
சொன்னார்படைச்செய்தி துரையும்துயரமுற்று
என்னசெய்வேனென்பார் இருந்தேசலித்திடுவார்
முன்பின்னே நாமறியா முடைஞ்சலிடைஞ்சலுமாய்
என்புறமாய்வந்ததிப்போ ஏதுமதிசெய்வோமென்று
படைபொருதக்கேட்டிருப்போம் பார்த்துநின்றேயறியோம்
சடைத்திருந்தால்நம்முடைய தலையளவும்வந்திடுமே
நம்மளவும்போகாதே நாடிழந்தும்போய்விடுமே
செம்மலாய்வந்தபடை செல்லம்மெத்தசெய்வாரோ
பிரதாபத்தோடுமன்னன் பிலேந்திரரோடுரைக்க
தர்மர்முகம்நோக்கி சாற்றுவார்எஜிப்தரசன்
படைமிகுதிவந்தாலும் பட்டணத்தைசூழ்ந்தாலும்
சடையாதேமன்னவனே தற்காப்பார்ஆண்டவர்தான்
உடையகர்த்தன்சித்தமுண்டால் ரோமைஆழியாது
திடங்கொண்டிருப்பதல்லால் திடமயரவேண்டாம்நீர்
மாற்றானைப்போக்கடிக்க மந்திரியை நிரமையும்
ஆற்றல்விடுவார்நமக்கு ஆண்டவர்தானெப்படியும்
தென்னர்தர்மராசருக்கு தேறுதலாய்எஜிப்தரசன்
சொன்னவுரைகேட்டு தோன்றல்தர்மர்மந்திரிக்கு
ஊழியனைவிட்டே உபாயகனைகூட்டிவந்தார்
தாள்பணிந்துமந்திரிதான் தலைவனைப்பார்த்தென்சொல்வார்
தென்னவனே நானடியேன் செய்யும்பணிவிடைதான்
இன்னதென்றுநானறிய இயம்பிடவேணுமென்றார்
மந்திரியேநம்முடைய வளர்ரோமாபுரிமுதல்
சேர்ந்ததளங்களெல்லாம் சூழ்ந்துகொண்டான்மாற்றானும்

மாற்றான் மிருதியென்றும் வெண்ணலெட்சம் மாபுரவி
ஆற்றப்படாதெனவும் அஞ்சல்வந்துகண்டறிந்தேன்
சீர்மையில் வந்தபடை சீர்குலைவுசெய்யுமுன்னே
மார்தட்டிநிற்கும் மாற்றானைப் போக்கடிக்க
உத்தமனே நாமுமினி உபாயமென்னசெய்வோமென்று
தேற்றரவாய் நீயுனக்க திடனுரைக்கவேணுமென்றார்
தென்னன்உரைகேட்டுச் செப்புவர்மந்திரியும்
மன்னவனேமாற்றானை வைத்திருந்தால்ஈனமுண்டாம்
சின்னம்வருத்திடுவான் சிறைபிடிப்பான்கற்பழிப்பான்
பின்னையுமென்னசெய்வான் பேயைவணங்கவைப்பான்
கொள்ளையிட்டுராச்சியத்தில் குடியைகெடுத்திடுவான்
பிள்ளைகளை தான்பிடித்து பேய்க்குப்பலியிடுவான்
மாற்றானுக்காற்றாமல் மலங்கிஅஞ்சி நாமிருந்தால்
பார்த்திருக்கநாட்டையெல்லாம் பலவாறாய்வளைந்திடுவான்
தோற்றோம்நாமென்றவர்க்கும் சொல்லிநகைத்திடுவான்
சேர்த்திடுவான்ராஜியத்தை சினங்கொண்டழித்திடுவான்
படையிலிழந்தாலும் பங்கமெத்தபட்டாலும்
சடைந்தயர்ந்துநாமிருந்தால் சதிகள்வரும்மன்னவனே
ஏகபரன்நம்மையுந்தான் எப்படியுந்தற்காப்பார்
சாவொருநாள்உண்டுமன்னசண்டையிடப்போவோமென்றான்
தருமருடன்பிலேந்திரர் சண்டைக்கேகல்என்றால்
கொற்றவனும்மந்திரியும் கூடப்பிலேந்திரரும்
கர்த்தாவைமன்றாடி கடுதாசிதானெழுதி
ஒற்றனுடகைக்கொடுத்து ரோமைமற்றநாட்டில்விட்டு
ஈட்டிஅம்புவில்லரையும் எறிகவணுக்காரரையும்
கன்னடியர்காப்பிரியர் கவண்டரிடும்பர்களும்
மன்னர்கையிற்பணங்கள் வாங்கிவரிசைபெற்ற
மறவர்மராட்டியரை மலுக்கர்துலுக்கரையும்
பறையர்புலையரோடு பட்டாணிராவுத்தர்
கடையன்களவாணி கைக்கோளன்சக்கிலியன்
இடையன்வலையனுடன் ஈழுவன்சத்திரியன்
சவளவலையனையும் தலைப்பாகைதுடிக்கரையும்
கவணுமெறிகோலும் கைவெடிவல்லயமும்
வில்லரும்வேடருமாய் வெடிதோக்குபீரங்கி
மல்லரிடம்மானம் மத்தாப்புக்கைத்தாளம்
சிங்காரரோமையிலும் சேர்ந்தநாடெங்குமுள்ள
தங்கள்படையானதெல்லாம் சடுதியிலேசேகரித்து
சேகரித்துவந்தபடைதென்னர்தர்மரைத்தொழவே
ஆகமுடிவேந்தன் அவர்சனத்தைதகையமர்த்தி
கொற்றவன் தன்படைக்கு கோப்புகொடுத்திருத்தி

உற்றபிலேந்திரற்கு உயர்வேந்தர்எதுரைப்பார்
எனக்கு சிநேகமுள்ள எசித்தூர்இறைறவனே நீர்
விளைத்தலத்தில்என்கூட விரும்பிவரவேணுமென்ருர்
மன்னனுரைகேட்டயர்ந்து மறுத்துரைப்பாரெஜிப்தரசன்
தென்னவனேஉம்மூடனே சேர்ந்துவழிகொண்டிருந்தால்
தந்தைதாய்தேவியர்தான் சலித்துதுயருறுவார்
இந்தவளமையெல்லாம் என்னூர்போய்என்னுடைய
அன்னைபிதாதேவி அவர்மனதைதேறவைத்து
உன்னுடனேகூடி உதவிக்குவாறேனென்ருர்
பிலேந்திரர்வாசகத்தை பெரியதுரைகேட்டயர்ந்து
தலைவன்நிசங்கொள்ளாமல் தன்னேவல்பேர்சிலரை
இறைவன்வரவழைத்து எசித்தூர்க்குகூடவிட்டார்
உறுதிசொல்லிமன்னவனை ஊருக்கனுப்பிவிட்டார்
தென்னவனுங்கட்டியனுஞ் சேர்ந்தொன்ருய்எசித்தூர்போய்
அன்னைபிதாவைத்தொழுது அறிவிப்பார்புத்திரனும்
அத்தனேரோமையிலே அண்ணல்தர்மராசரின்மேல்
மெத்தவேமாற்ருனும் வெகுதிரளாய்கூடிவந்து
நாட்டைவளைந்துகொண்டார் ராசனும்ராணுவமும்
கூட்டப்படையோடே கொற்றவனுஞ்சண்டையிட
போகவழிகொண்டிருந்து போர்க்குதவஎன்னைவர
தாகமாய்சொல்லுகிருர் தந்தையரேபோய்வாறேன்
யாத்திரையாய்ச்சொல்லி அனுப்பிவிடுமென்றுரைத்தார்
பார்த்திபனும்பாலர்முகம் பார்த்தழுதங்கென்னசெல்வார்
அருமைக்கொருமகனே அன்பனேஎன்சுதனே
பொருதுகளமானதிலே புத்திரனே ஆர்போவார்
எதிராளிசண்டையிலே இறக்கநீபோருயோ
ஒருமகனே நீயுமுண்டு உலகமுண்டுநாங்களுண்டு
அன்னைபிதாவானவர்க்கு ஆர்உதவி ஆர்மகனே
உன்னோடேத்தான்பிறந்து உடன்பிறப்புயாருமில்லை
சத்துருக்களோடேசமரிடப்போறவரை
குத்திடுவார்வெட்டிடுவார் குண்டாலேசுட்டிடுவார்
சண்டைக்குநீபோனுல் தரிப்போமோநாங்களிங்கே
உண்டைக்கருமருந்து உன்னைக்கண்டஞ்சிடுமோ
மாற்ருன்கைவெற்றியென்ருல் மகனேவருவாயோ
முகத்தாட்சிபார்ப்பாரோமுனைந்து வெட்டுஞ்சண்டையிலே
நல்லாய்குபொல்லாங்கு நன்மைதீமையாரறிவார்
செல்லாதசண்டையிலே சென்றதுண்டால்தீங்குவரும்
மன்னன்பகைத்தாலும் மாநிலந்தான்போனுலும்
பொன்னுடைமைராச்சியங்கள் போருலும்புத்திரனே
வம்பாய்ச்சமர்முனையில் மாளவிடமாட்டோம்

நம்பியிருந்தோரை நடுவேசதிசெய்தது போல்
அன்னைபிதாவானவரும் அம்புவியில்மானிடரும்
உன்னை நம்பித்தானிருக்க ஒருவனும்போனுக்கால்
தஞ்சமொருவரில்லை தனித்திருக்கமாட்டோமென்று
அஞ்சிபயந்தழுது அத்தனென்னசொன்னாலும்
கொற்றவர் தர்மராசருக்கு கூறிவந்தவாக்குரைதான்
புத்திரன்நெஞ்சைவிட்டு போகாதேநிற்பதனால்
தந்தைமனஞ்சலித்து தடையொன்றும்சொல்லாமல்
மைந்தனேயாத்திரைபோய் வருவாயெனவுரைத்தால்
அத்தனிடம்பிரிந்து அன்னையரைபோய்த்தொழுது
புத்திரனும்போரளப்பு புகலுவார் தாயுடனே
மாதாவேதாயாரே மன்னர் தர்மர்ராச்சியத்தில்
வாதுகூறிகள்ளர்படை வண்ணலெட்சம்மாபுரவி
தேசம்ரோமாபுரியைசேர்ந்து வளைந்துகொண்டார்
ராசதர்மர்போர்பொருத ராணுவத்தோடேபோனார்
என்னைத்துணைக்குதவ இறைவன்வரச்சொல்லுகிறார்
அன்னையரேபோய்வாறேன் அனுப்பிவிடுமென்றுரைத்தார்
மைந்தனுரைகேட்டு மாதாசலித்தழுது
எந்தனிளவரசே என்சுதனேபாலகனே
பாலகனே நீயுமுண்டு பாருலகில் நாங்களுண்டு
பூலோகம்ஆளமறு புத்திரருண்டோஎமக்கு
அம்புவிக்குமெங்களுக்கும் அபூர்வம் நீயுமல்லால்
தம்பிதமையருண்டோ சகோதரங்கள்வேறுமுண்டோ
படைபொருத நீபோனால் பாலகனே நாங்களிங்கே
உடலோடுசீவனுமாய் உலகில்தரிப்போமோ
சண்டைக்குப்போய்ச்சாக சதிமுறையாய்வந்தாயோ
உண்டோமனுக்குலத்தில் உனைப்போல்பயித்தியர்கள்
பொருதுஜெயமாவதும் போரிலிறப்பதும்
தெரியுமோவெங்களுக்கு செய்திசொல்லஆர்வருவார்
தர்மர்சினத்தாலும் தலமிழந்து போனாலும்
வன்மருட்சண்டையிலே மகனே நீபோகாதே
தாயார்சலிப்படைந்து தடைபண்ணிக்கொண்டாலும்
வாய்ச்சொல்லுமன்னனுக்கு வழுவினாற்சின்னமென்று
மறுத்துபுதல்வனுந்தான் மாதாவுக்கென்சொல்வார்
இறைவன் நமக்கெப்போதும் இடுக்கணிற்காத்தமன்னன்
தமக்குதவிசெய்தவர்க்கு நாமுதவாதேயிருந்தார்
நமக்கோரிடுக்கண்வந்தால் தர்மரல்லால்வேறுமுண்டோ
தாபமாய்சங்கடமாய் தாற்பரியமயுரைத்தால்
ஆபத்திற்குதவாவிடில் அவர்மனதுக்கெப்படியாம்
ஏகபரன் நம்மையுந்தான் இறக்குநாளுண்டொருநாள்
சாகாமல்தட்டிவைக்கதாயே ஒருவருண்டோ

மிகுந்தபுழுநாற்றம் மெய்யெலும்புதுஞ்சுசட்டம்
பரத்தைபுறக்கணித்து பார்த்துநானிங்கிருந்தால்
மன்னருக்குசொன்னசொல்லு மாறினுல்வேருச்சு
இந்நிலத்திலேபிறந்தார் இறவாதிருப்பதில்லை
சண்டைக்குப்போனுலும் தலத்திலிருந்தாலும்
உண்டாக்கிவைத்த கர்த்தன்உத்தாரமில்லாமல்
மனிதர்நினைத்தபடி வாழ்வாரோபூதலத்தில்
அனுப்பிவிடுந்தாயாரே யாத்திரைபோய்வாறேனென்று
மாதாவைத்தான்பணிந்து மைந்தன்தொழுதபின்
காதலியாள்தன்னிடம்போய் கணவனுமென்னசொல்வார்
மனைவியரேதேவியரே மன்னர்தர்மர்மாண்பழிக்க
சனத்திரளாய்மாற்ருனும் தாங்காபடையெழுப்பி
நாடுரோமாபுரியை நடுவாய்வளைந்துகொண்டார்
கூடிப்படைபொருதகொற்றவர் தர்மர்யாத்திரையாய்
வழிகொண்டிருந்தேஎன்னை வரவுரைத்தார்துணையாக
தெளிவாய்க்கிளிமொழியே தேவனைமன்ருடியிங்கே
துணைவியரேமாளிகையில் சுகமாகவீற்றிரென்று
கணவனுரைமொழியை காதலியாள்கேட்டயர்ந்து
அணைவாகஇந்நாளும் அடியாளைக்காத்தமன்னு
நாயகனே நீர்போனுல் நானெருநாளுந்தரியேன்
தாய்தமரும்போதாது தமியாளைத்தற்காக்க
தலம்விட்டுநீர்போனுல் தாபரிப்பார்ஆருமில்லை
உலகறிய வென்னுதிரம் உடல்தங்கிமூன்றுதிங்கள்
காலயர்ந்துகையர்ந்தால் காத்தணைப்பார்யாருமில்லை
பூலோகம்மாய்கைஅல்லோ பொய்யானகாயமிது
உதவிக்கொருவரில்லை உற்றவர்கள்யாருமில்லை
மதலைபிறந்ததென்ருல் மாறிவைக்ககையுமில்லை
பக்கத்திலேமனிதரில்லை பராமரிப்பார்யாருமில்லை
தற்காத்தரவணைக்க தந்தையாய்தானுமில்லை
காலங்கடவாமல்கணவனே நீரிங்கிருந்தால்
பாரமாய்ஏவலரும் பக்கத்தில்காத்திருப்பார்
காவலனே நீரும் கடக்கபிரிந்ததுண்டால்
ஏவலர்களெனைவந்து ஏறிட்டும்பாரார்கள்
வேளைக்குஊழியர்கள் வெந்நீருந்தரார்கள்
ஆளிழந்துகையிழந்து அரவணைக்கபேரிழந்து
சீரிழந்துமும்முடைய சிநேகத்தால்தான்தரித்தேன்
இப்படியேதேவியரும் இருவிழியால்நீர்சொரிய
செப்புமுறைகேட்டுமன்னன் சிந்தைகசிந்துருகி
காதலியாள்தம்மைவிட்டு கடக்கக்காலேகாமல்
இதுவரைக்கென்னசெய்வேன் என்மரியமாதாவே

சொல்வாக்குமன்னனுக்கு சோர்வாச்சுதென்றயர்ந்து
நல்வாக்குசொல்வாராம் நாயகனும்தேவியர்க்கு
தேவியரேஅஞ்சாதே தேவமாதா உண்டுனக்கு
காவலாஞ்சம்மனசு காத்திடுவா ரெப்போதும்
மலங்காதேமாநிலத்தில் மனுவுறவில்லாதவர்க்கு
நலஞ்செய்வார் அர்ச்சியசிஷ்ட ஞானப்பிரகாசியார்தான்
தனித்தவர்க்காங்காவல் சம்மனசுதானுமுண்டு
வனிதையயே நீ அஞ்சாதே மாமரியாள்தஞ்சமுண்டு
கல்லுக்குள் தேரைகளை கால்முடவர் ஊமைகளை
எல்லாத்தையுங்காத்து ரெட்சிப்பாருண்டொருவர்
ஆனாலும்தேவியரே ஆண்டவரை நம்புவோர்க்கு
நானாவிதங்களொன்றும் நாடாதுமாநிலத்தில்
காதலியேஉந்தனுக்கு கஸ்திஒன்றும்வராமல்
ஆதரித்துகாத்திடுவா ளென்னையுமே முன்போலே
தேவிமனந்தேற்றி திரும்பிப்போய்தாயாரை
ஆவிக்கரந்தொழுது அன்னையிடம்கூட்டிவிட்டு
மனைவியரைமுன்போலே மாதாவேகாத்திடென்றும்
இனிநான்பயணமென்றும் எல்லாரையுமனுப்பி
கர்த்தன்பிலேந்திரனும் கட்டியனும்ஏவலனும்
சற்றுந்தரியாமல் யாத்திரைகொண்டேநடந்து
எசித்தூர்பதியைவிட்டு இடைக்காடுஊர்கடந்து
உயர்ந்தபதிரோமைபுக்கு உயர்வேந்தனைத்தொழவே
இறைவரிருபேரும் இருந்தபடைத்தலமும்
அரிசிபொதிஎருது ஆனைபடைகாலாளும்
கருவிகருமருந்து கைவெடி பீராங்கிகளும்
விருதுகளும்செங்கோலும் விதவிதமாய்ஆயுதங்களும்
பதறிநடந்தாரேதர்மர் பரலோகம்பார்த்தகண்ணாய்
உதவிக்குவந்ததொரு உற்றபிலேந்திரரும்
இடைஞ்சல்முடைஞ்சலுடன் இருபேருந்தான்நடந்தார்
அடைக்கலமாய் கையளித்தோம் ஆண்டவரேகாருமென்றார்
தயங்கிவருமளவும் தத்தளித்துமெத்தயர்ந்து
மயங்கிமனந்தேறி மாற்றான்திசைநோக்கி
அஞ்சிஒஞ்சி அந்திசந்தி அசனம் சமைத்தருந்தி
நெஞ்சுதிடுக்கிட்டாலும் நினைவுதளம்பாமல்
நடந்துமன்னர்பாளையமும் நாடுகளெல்லாங்கடந்து
கடந்தேறிமாற்றானை கண்டிவருங்கண்மருண்டு
கண்டுவுடல்நடுங்கி கர்த்தாவைகைகுவித்து
சண்டைதொடுத்ததென்றால் தரிக்கப்பட்டாதெனவும்
மாற்றான்வலுவறிந்து மார்புதட்டி வீரமிஞ்சி
பார்த்துஒருதலத்தில் பாளையங்கள்கூடாரமிட்டு

அஞ்சிதர்மர் பாளையங்கள் அமர்ந்திருக்கும்வேளையிலே
வஞ்சர்மனம் நஞ்சுறைந்து வலியவந்துதான்பொருத
மாற்ருன் துணிந்தேறி மார்புதட்டிவீரமுற்று
பார்த்துபடைதெரிந்து பக்கத்திலேநிறுத்தி
சத்தியவில்பூட்டி சாத்திரமாய்கச்சைகட்டி
வார்த்த வெடிகுண்டுமிட்டு வடமேற்குநாற்புறமும்
ஆனைபரி சேனைகூடி ஆயுதமுந்தான்நிறுத்தி
தீனும்பொசித்தெழுந்து சென்றதர்மர் பாளையத்தில்
கத்திஉறைவிடுத்து கைசெலுத்தும்வேளையிலே
சத்தியரோமையர்க்கு சர்வேஸ்பரனிரங்கி
விண்ணிலிருந்தாஞ்சல்களை விரிநிலத்திலேயனுப்பி
மண்ணில்நின்று சம்மனசு மாற்ருனுடனேபொருத
சத்துருவுங்கண்மருண்டு தரையில்உருண்டோட
ஓடவேசம்மனசு ஓடவிட்டு தான்துரத்தி
மாகொடியமாற்ருனும் வந்தபெரும்படையும்
ஆகாமல்தோற்றதுவும் ஆள்படைகள்மாண்டதுவும்
மாறிப்போய் செய்திசொல்ல மனுவொன்றில்லாமல்
வேறுகூறாக்கிவிட்டார் விண்ணுஞ்சல்மார்கூடி
தர்மர்படைசாகாமல் சம்மனசோர்வந்துதவி
வன்மரைதீர்த்தறுத்து வானுஞ்சுமார் மறைந்தார்
ரோமைக்கும்ராயனுக்கும் ஒருதீங்குமில்லாமல்
சர்வேஸ்பரனிரங்கித் தற்காத்தாரம்மானை
அண்ணல்தர்மர் பாளையந்தான் அதிகமனமகிழ்ந்து
விண்ணோரைவாழியென்று வேண்டிநமஸ்கரித்து
உத்தமமனஸ்தாபம் ஓயாமல்தோத்தரித்து
பத்திநெறியோடே பார்வேந்தனும்படையும்
வெற்றிகொண்டாண்டவரை வேண்டிநமஸ்கரித்து
கொற்றவனும்பாளையமும் கூட இளைப்பாறி
தேசம்ரோமாபுரியும் சேர்ந்தசீர்நாடுகளும்
மாசனத்துக்கானவெற்றி வாழ்த்துச்செய்திசொல்வதற்கு
ஆலோசனைபுரிந்து ஆங்கவர்நிற்கையிலே

## ஞானசவுந்தரி இரண்டு ஆண் மகவைப் பெற்றெடுத்தலும் மாற்ருந்தாய் வஞ்சனையால் வனந்தரம் அனுப்பப்படுதலும்

பூலோக மெசித்தூரில் போர்வேந்தன்புத்திரனும்
பிலேந்திரர்போர்படைக்கு போனநாள்தேவியர்க்கு
நலமுற்றகெர்ப்பமது நாள்கடந்து மூன்றுதிங்கள்
மறுத்தாராத்திங்களிலே மங்கையவள்தன்வளமை
குறையாதெடுத்துரைக்க குவலயத்தோர்கேட்டருளும்

தலைவன்பிலேந்திரர்தான் தர்மமகாராசருடன்
கலகத்திற்போகும்நாள் காதலியுமாதமூன்றில்
கோதைஒருசூலில் குழந்தைரண்டாண்மதலை
பெற்றுள்பிரபலமாய் பிரியமுடன்பாலகரை
பட்சமுட்னெடுத்துப் பாலகரைநீராட்டி
முத்திமுகந்தடவி முகம்பார்த்துதாலாட்டி
உற்றூர்மகிழ்ந்துவந்து ஓராட்டிசீராட்டி
கொற்றவர்கள்கூடிநின்று கொண்டாடிஊர்போக
முற்றவெளியும் முகப்பெல்லாங்கோலமிட்டு
மாதாமனமகிழ்ந்து மைந்தருக்குபாலளித்து
ஆதரவுபுரிந்தவரை ஆராட்டிசொல்வாளாம்
சீராரும்எஜிப்துநகர் தென்னல்மணிவாசனுக்கு
பாரிலங்க வந்துதிந்த பாலகரே தாராரோ
இத்தவரசர்குல எழுதிசையுமேயாள
வந்தரண்டுகண்ணொளியே வடிவழகேநித்திரைபோம்
வச்சிரமேதெள்ளமுதே வயிரவைடூரியமே
உச்சிதமாய்வந்ததம்பி ஓவியமேநித்திரைபோம்
மானுர்பரனேந்தும் மாமன்மனமகிழ
வானுதிதந்தரெண்டு வங்கணமேநித்திரைபோம்
திரவியம்போல்வந்துதித்த சிறுவரேகண்வளரீர்
மன்னர்குலம்பெருக மாதாபிதாதழைக்க
முன்னேமுனைவளர முத்தர்வந்துமுன்னுதிக்க
அன்னைகலிதீர்த்து ஆசேந்திரகாலம்
இந்நிலத்தை நீராண்டு இருப்பவரேதாராரோ
தாராரோ ராராரோ தாதைமுகம் பாரீரோ
பாராரோ பாலர்முகம் பார்த்திருந்து காராரோ
ஆராரோ வென்னுடைய அத்தனென்னை காணரோ
தீராரோவென்துயரை தேவனுக்குதோஸ்திரமே
குழந்தைமுகங்காணத கொற்றவர்சிமியோன்மனைவி
இளமதலைரண்டுகண்டு எண்ணடங்காசோபனமாய்
சந்தோஷங்கொண்டாடி தர்மதானம்வழங்கி
சிந்தைகுழைவாகி சிமியோனும்தேவியரும்
குமாரன்பிலேந்திரர்க்கு குழந்தைரண்டுபிறசேதி
சமர்முனைக்காளனுப்ப தந்தைதாயுளமகிழ்ந்து
மைந்தனுக்கோர்நிருபம் மாபிரியத்தோடெழுதி
வந்துநின்றுகட்டியனை வருத்தியென்னசொல்வாராம்
ஒற்றனே ஓட்டுமஞ்சல் ஓடிரோமாபுரிபோய்
நீட்டிப்புதல்வனுக்கு நீகொடுத்துமாறியொரு
திருபம்கைவாங்கி நிமிஷம்வா வென்றுரைத்தார்
பிலேந்திரராசனுக்கு பிதாவிட்ட அஞ்சல்கொண்டு

ஒற்றனும்சுற்றூர்கடந்து ஓடை இடைக்காடும்விட்டு
காட்டைவிட்டுநாட்டைவிட்டு கனமலையின்சேரலைவிட்டு
ஊரும்பதிகடந்து ரோமாபுரிசேர்ந்து
தேரோடும்வீதி தெருவும்பலகடந்து
நாட்டுப்பலதெருவின் நடுத்தெருவேபோகையிலே
இட்டசன்னல்தான்திறந்து இளைப்பாறிநிற்கையிலே
ஒற்றனஞ்சல் ஓட்டனவன் ஓடும்விரைவுகண்டு
இறைவர்தர்மர்தேவி இனையவள்ஆள்விட்டுடனே
செறுத்சுந்த ஒற்றனையும் திரும்பிநங்கை முன்வருத்தி
அரிவையர்முன்வந்த அஞ்சலனைபார்த்துரைப்பாள்
இருக்கும்பதிஎவ்விடம் ஏவலனே போறதெங்கே
ஓட்டவஞ்சல்விட்டவரார் ஒற்றனேஎன்றனக்கு
திட்டமாய் செப்புமென்று சேயிழையுங்கூறிடவே
இராக்கினியேஎன்னூரோ நாடெஜித்தூர்ராச்சியந்தான்
போர்க்குடையமன்னன் புவியிற்சிமியோன்புதல்வன்
உங்கள்துரைகூட உதவிக்குபோனமன்னன்
மங்களமாய் மன்றல்செய்த மனைவியருமோர்சூலில்
புத்திரர்ரண் டாண்குழந்தை பூங்கொடியாள் ஈன்றசெய்தி
அத்தனும்புத்திரர்க்கு அறியவிட்டஅஞ்சலென்றான்
ஏவலன்செப்புமுரை ஏந்திழைகேட் டென்னசொல்வாள்
காவலனேபுத்திரனர் கலியாணஞ்செய்தவட்கு
எவ்வூர்வழியிருப்பு ராசர்பேர்இன்னதென்றும்
அவ்வூரும்நானறிய அஞ்சலனேசொல்லுமென்றாள்
கோதைஉரைகேட்டு கூறுவான்கட்டியனும்
மாதரசேஎங்கள்துரை முன்னமொருதிங்கள்தனில்
மலையிலேசென்றுதங்கி மான்வேட்டை ஆடிடுவார்
குலக்கொடியே எம்மரசன் குவடேறிமானடித்து
திரியவழி கொள்கையில் செல்விசிறுமாதுஒன்று
கரமிரண்டுமில்லாமல் கரம்ரத்தச்சோரையுமாய்
மயங்கிதரைகிடந்த மடக்கொடியைமன்னர்கண்டு
உயர்த்திபிடித்திருத்தி உணவூட்டிஆதரித்து
எங்களெசித்தூர்சேர்த்து இளங்கொடியைதான்வளர்த்து
மங்கைகரமில்லாளை மணஞ்செய்தார்எங்கள்மன்னன்
இப்போதொருசூலில் ஈன்றாளிரண்டாண்குழவி
அப்படியோராசாவும் ஆகமணஞ்செய்தாரே
அம்மட்டும்நானறிவேன் ஆதரையிலென்றுரைத்தான்
ஒற்றனுரைத்ததெல்லாம் ஒண்ணுதல்கேட்டுள்ளயர்ந்து
சேட்டங்கலந்துடனே செப்புவாளொற்றனுக்கு
கட்டியனே இன்னுமொரு காரியந்தானென்னுடனே
திட்டமாய்நீயுரைத்து தீவிரமாய்போய்விடென்றாள்

பின்னைவேறென்றுமில்லை பிலேந்திரன்தேவியர்தான்
இன்னின்ன நாமமென்று இவ்வளவும்சாற்றுமென்றாள்
கனிமொழியாள்நெஞ்சிலுள்ள கபடமறியாதன்
மனதில்அறிந்ததெல்லாம மறையாதேதானுரைத்தான்
இராக்கினியே எங்களுடராசனின்தேவியர்பேர்
சூட்சமாய் சொல்லுகிறேன் தோகையரேகேளுமென்று
ஞானசௌந்தரியாம் ராக்கினிபேர் நாயகமே
நானுரைத்ததிவ்வளவும் நடந்தசெய்திஉண்மையென்றான்
பேருங்கரமுறிவும் பேதையர்தானின்றதுவும்
கூர்விழியை கொல்லுதற்கு குவட்டில்விட்டநாட்கணக்கும்
நின்றுநினைத்துநினைவில் வைத்துக்கொண்டுமங்கை
கொன்றுவிடவேறுவகைக் கொள்ளநமக்கில்லையென்று
நின்றஒற்றனைப்பார்த்து நேரிழையுமேதுசொல்வாள்
ஒற்றனே நீ நிரூபம் உனதுரைக்குகையளித்து
மீட்டுமறுத்துரைகள் வாங்கிமீளுகையில்
போர்பொருதப் போனமன்னன்போயும்வெகுநாளாச்சு
ஆற்றுமல்தோற்றவர்கள் ஆரார்கைவெற்றியென்றும்
மன்னர்கைவெற்றியென்றும் மாற்றான்கைவெற்றியென்
தென்னனுடற்சுகமுதிரும்ப நாட்செல்லுமோவென்றும் [றும்
இன்ன பிரகாரமென்று இவ்வளவும்அராய்ந்து
என்னுடனேசொல்லிசித்தார்க்குநீபோனால்
கண்ணுறக்கமற்று வைபூண்டிருக்கிறநான்
எண்ணந்தவிர்த்திருப்பேன் ஏவலனேஎன்றுரைத்தாள்
தையலுரைகேட்டு சற்றுவான்ஒற்றனுந்தான்
சேயிழையே இவ்வு செய்திநான்கேட்டுவந்து
உன்னோடேசொல்லிங்கள் ஊர்போவேனென்றுரைத்தான்
அந்நேசவாய்மொழிக் கங்கானவுண்மைகொண்டு
அஞ்சலனை ஆதரித்து அடிசில் கட்டிபோகவிட்டாள்
வஞ்சியிடங்கடந்துவழிமேல்விரைந்தோடி
படையொழிந்துமன்னர்தங்கும் பாளையத்தை தேடியாவன்
கடந்திருந்தவூர்சேந்து கர்த்தன்பிலேந்திரர்க்கு
காகிதத்தைகையத்தான் கட்டவிழ்த்துமன்னவனும்
வாசித்துக்கண்டறிந்து மகிழ்ந்துடனச்சோபனமாய்
சௌரியமாய்மன்னவனும் சந்தோஷங்கொண்டாடி
அகதிக்கானம்வைத்து ஆடைதுயில்தானமிட்டு
போய்நின்றஒற்றனுக்கு பொன்னுற்கொலுசுமிட்டு
தாயார்க்கும்தந்தையார்க்கும் சந்தோஷமாகமைந்தன்
சன்னதுமொன்று தனைஎழுதும்வாசகங்கள்
அன்னைபிதாவானவரே அடியேனுடையதேவியர்க்கு
கையுமேரண்டில்லை காலையிரண்டானதினால்
தையலையும்மைதரையும் தற்காத்துக்கொள்வீரே

இருபாலரைஎடுத்து ஏந்திவைத்துபால்கொடுத்து
உரிமையுள்ளஊழியரை உதவிசெய்யவைத்திருங்கோ
பாலருக்கும்தேவியர்க்கும் பழுதுபிழைவராமல்
நலமாகக்காத்திடுங்கோ நானுஞ்சிலநாட்கழித்து
நம்மூர்க்குநான்வருவேன் நாங்கள்வந்தகாரியத்தை
சம்மனசோர்வந்துதவிதற் காத்தாரெங்களையும்
இங்கேசுகமாயிருக்கிறோம் எல்லாவரும்
அங்கிருந்ததாய்மகவை ஆதரித்துங்கொள்ளுமென்று
காதலியாள்பாலகர்மேல் கணவன்கருணையதாய்
மாதாபிதாவறியமைந்தன் மகிழ்ந்தெழுதி
கட்டியக்காரனிடம் கடுதாசிகையளித்து
ஓட்டவஞ்சல்காரனே நீஓடிஎசித்தூசேர்ந்து
நிருபத்தைததந்தைகையில் நீகொடுக்கவேணுமென்று
பிலேந்திரர்கட்டியனை பிரியமாய்போவிட்டார்
கடுதாசிகைவாங்கி காவலனைக்கைதொழுது
உடன்மாறி ஒற்றனவன்ஒரு நொடியிற்றானேகி
நட்ந்தோடிச்செல்கையிலே நாரிதர்ப்தேவியவள்
படையளப்பும்மற்றுமுள்ள பற்பலசெய்திகளும்
வந்துரைத்துஊர்போவாயென்றதினு
நாட்டிலேவந்து ஒற்றன் நாரியுடமேடைக்கு
ஏவலஞ்சற்காரனைத்தான் எதிர்நோக்கிநிற்கும்
காவலன்தேவியரைகட்டியன் போய்த்தொழவே
ஒற்றனைக்காணுமட்டும் உண்ணுதிருந்தமங்கை
பாட்டைநினைந்திருந்து பகல்நேரம்பேங்கிவிட்டு
ராவுதங்கிஒற்றுநீ நாளைபோவென்றுரைத்து
பூவையரும் ஒற்றனுக்கு பிரியமுள்ளபோசனங்கள்
கஞ்சாஅபின்அரக்கு கள்ளோடேதான்கலந்து
வஞ்சியரும்ஒற்றனுக்கு வயிறுமுட்டத்தனூற்றி
பாயுந்தலையணையும் படுத்துறங்கவேகொடுத்து
உபாயமாய்வஞ்சியரும் உற்றிருந்துபார்பளவில்
கட்டியனும்போதமற்று கண்ணயர்ந்ததனையிலே
கொட்டாரத்துள்ளிருந்த கோதைபுறம்பகவந்து
அஞ்சல்ஒற்றக்காரனுட அருகேநின்றுஅயிழையும்
நெஞ்சுகலங்கி அவள்நினைவுந்தடுமாறி
வஞ்சிமனந்துணிந்து அஞ்சிஒருபுறத்தில்
ஒஞ்சிஒளித்திருந்து ஒற்றன்உடைகுலைத்து
சட்டைஅங்கிகுல்லா தலைப்பாகையுங்கழற்றி
ஒட்டவஞ்சற்காரனுடைக்குள் மறைந்திருந்த
புரவலன்காகிதத்தை பூவையருங்கண்டெடுத்து
அரண்மனைக்குள்புகுந்து அறையடைத்துதாழ்பூட்டி
மன்னனுட காகிதத்தை மாருடிமங்கையரும்

இன்னுமொருநிரூபம் எழுதுமுறைநகேட்டருள்வீர்
அத்தனேஎன்தேவி ஆணிருவர்பெற்றசெய்தி
புத்திரன்வாசித்தறிந்தேன் மோர்முனைக்குவந்தவர்கள்
காதலியாள்பூர்வத்தை கண்டுரைத்தார்கேட்டறிந்தேன்
மாதவள்மனக்குறத்தி மருந்துதொழிலறிந்து
நானிலத்தில்கன்னமிட்டு நாட்டார்பிடித்தடித்து
மாநிலத்தோர்கைமுறித்து மலைக்காட்டில்தள்ளிவிட்ட
கள்ளியவள்எந்தனையும் கைமயக்கிமாற்றமிட்டு
உள்ளாக்கிக்கொண்டவள்தான் உரிமைப்படுத்திஎன்னை
மாளிகையில்நிற்கையிலே மங்கையிட்டகைமருந்தால்
ஆளிழந்தமங்கையரை ஆகமணஞ்செய்துகொண்டேன்
வதுவைசெய்ததேவியினல் வகைகேடுகூடுதில்லை
புதல்வரிருவரையும் பூவைஎந்தன்தேவியையும்
தாயோடேமைந்தரையும் தலையறுத்துக்கொன்றசெய்தி
எழுதியபின்னர்அல்லால் எசித்தூர்க்குநான்வரேன்
குழவியர்தாய்மூவரையும் கொல்லாதிருந்தாக்கால்
மாதாபிதாமறந்து மடிந்திடுவேன் இவ்விடத்தே
இரங்கிவிடாதபடி எப்படியும்தாய்மகவை
குரலறுத்துக்கொல்லுமென்று கொலைநிரூபந்தானெழுதி
இறைவன்பிலேந்திரர் கையெழுத்துப்பார்த்தொப்பமிட்டு
அறைதிறந்தொற்றனுட ஆடையிலேமுன்னிருந்த
உடுப்பில்மறைத்துவைத்து ஒண்ணுதலும்மாறிவந்து
படுத்திருந்தாள்மாளிகையில் பகலோனுதயமதில்
ஒற்றன்வெறிதீர்ந்து உதயனைகண்டெழுந்து
நாட்டெல்லைவாரமிட்டு நகருந்தெருகடந்து
எசித்தூர்பதிநோக்கி ஏவலனுமோட்டமுடன்
விசைகொண்டவனேடி வெகுதலங்கள்தான்கடந்து
நடந்தோடிப்போயவனும் நாடுமெசித்தூரடைந்து
அடக்கமுள்ளகோட்டைவிட்டு அரண்மனைசேர்ந்துட்புகுந்து
கர்த்தன்சிமியோனைக் கட்டியனுங்கைதொழுது
கொற்றவனேஉம்முடைய குமாரன்பிலேந்திரர்தான்
தந்துவிட்டஅஞ்சலென்று தலைவனுடகைகொடுத்தார்
மைந்தன்நிரூபமென்று மாபிரியமாய்வாங்கி
கடுதாசிமன்னவனுங் கண்டுவாசித்தவுடன்
உடலுந்தலையயர்ந்து உள்ளம்நடுநடுங்கி
ஞானசவுந்தரிபோல் நல்லொழுக்கமுள்ளவள்தான்
மாநிலத்திலுள்ள மானிடருள்மனுவொன்றுங்காணேம்
ஆனலொருஞாயம் அம்புவியோர்மாறுட்டம்
நானுவிதமாக நடத்துவோர்மெத்தவுண்டு
வதுவைசெய்யும்நாளிலே வனிதைவேண்டாமெனவும்
புதல்வனைநான்விலக்க புத்திசற்றுங்கேளாமல்

மன்றல்செய்து இப்போ இரண்டுமைந்தரையுங்கண்டபின்பு
கொன்றுவிட அஞ்சல்விட்டான் குணங்கூருரைதெனவோ
தலைவன்விருப்பமுற்று தையல்கரமில்லாளை
கலியாணஞ்செய்யவென்ருல் கைமயக்கமானதுதான்
களவாண்டபேரையல்லோ கரம்ரெண்டும்வெட்டிடுவார்
பிழைகுற்றமில்லாத பெண்கையை ஆர்தறிப்பார்
இருகரமுட்டில்லாத ஏதுமற்ற ஏந்திழையை
விரும்பியேஎங்கள்மகன் விவாகம்முடித்ததினல்
மருந்துமயக்கமல்லால் மைந்தனுட இச்சையல்ல
கைதொழிற்காரியென்றும் கன்னமிட்டகள்ளியென்றும்
மைந்தனெழுதிவிட்ட வாசகந்தானேதெனவும்
சிந்தைதெளிந்துகொண்டார் சிமியோனும் அம்மானை
கர்த்தன்சிமியோனும் கடுதாசிவாசகத்தை
புத்தியால்கண்டதல்லால் பூராயங்காணமல்
மங்கைபுதல்வருக்காய் மனமிரங்கிநின்ருலும்
எங்கும்நிறைந்திருப்பார் இரக்கத்தைஆரறிவார்
ஞானசவுந்தரியாள் நாட்டில்துயர்படவே
வானவர்சித்தமுண்டால் வாரவினைமாறிவிடும்
மன்னன்சிமியோனும் மனதுபுத்திமாருடி
சன்னதத்திலுள்ளபடி தாயையும்பாலரையும்
கொலைசெய்யாதிருந்தால் குமாரனிங்கேவாரானே
குற்றமுள்ளகோதையரை கொன்ருலும்பாவமில்லை
புத்திரர்ரெண்டாண்குழந்தை பிழைகளென்னசெய்தவர்கள்
குறையுள்ளகோதையுடன் குற்றமில்லாபாலரையும்
மிருகமுள்ளகாட்டிலிந்த மூவரையுந்தள்ளிவிட்டால்
பழிநமக்குச்சாராது பாவமில்லையென்றுசொல்லி
கொலைபுரியுமூழியரை கூவிவிட்டங்கென்னசொல்வார்
சேவகரேஎன்புதல்வன் தேவியர்மேல்குற்றம்வைத்து
கோலமாய்மூவரையும் கொல்லவெழுதிவிட்டான்
பழிகொலைகள்நான்புரிந்தால் பத்திலைந்தாங்குற்றமல்லோ
குழந்தைகள்தாய்மூவரையும் கூட்டிக்குவட்டில்விட்டு
மறுத்துநீரென்னேடே வந்துசெய்திசொல்லுமென்ருர்
இறைவனுரைகேட்டு ஏவல்ர்கள்சென்ருேடி
அறைக்குள்மகிழ்ந்திருந்த ஆயிழையைக்கைநீண்டி
சிறுகுழந்தைரெண்டையுந்தான் சேவகர்கள்கைதூக்கி
தாயோடேபாலரையுந் தள்ளிவெளியாக்கி
வாசல்கடந்து வழிகொண்டவேளையிலே
ஆமானையாள்ஞானம் அழன்றுகிலேசித்து
மாமனைப்பார்த்தழுது மருமகளுமென்சொல்வாள்
தென்னவரேஎங்களுடைய சிங்காசனத்துரையே
மன்னவரேஉம்முடைய மைந்தன்அஞ்சல்விட்டபடி

உம்முடையகைவாளால் உயிர்பிரிந்தால்எங்களுக்கு
தன்மானந்தந்ததுபோல் சலிப்பெனக்குசற்றுமில்லை
மலைகடுவாய்முன்புவிட்டால் மைந்தரென்கண்ணெதிரே
நிலத்தில்வதைத்திழுத்தால் நினைவுமனஞ்சோராதோ
என்பாலரைப்பார்த்து ஏங்கிமனம்நோகாமல்
உங்கள்கைவாளாலே ஓங்கிவெட்டிக்கொல்லுமென்றாள்
மருமகள்தான்பதறிமாமனுக்குச்சொன்னாலும்
அரசர்மன்னுளருமல் ஆயிழையைப்பார்த்துரைப்பார்
பாவையரேஉங்களுட பழியைநான்கையேறேன்
பூவையரேஅஞ்சாதே போனாலமைத்தபடி
சாவுவந்துசம்பவிக்கும் சலியாதேபோவுமென்றார்
சேவகருங்கொக்கரித்து சேயிழையைத்தானிழுத்து
மூவரையுந்துஷ்டமிருகமுள்ளகாட்டில்விட
பிடரியிலேகைகொடுத்து போவென்றுமுன்னேதள்ளி
அடியால்அடித்துதைத்து அடவிக்குசெல்லுகையில்
சேயிழையைசேவகர்தான் சிரித்துநகைத்திடுவார்
தையலேகைமயக்கி தாரணியிற்கன்னமிட்டு
கரத்தைஇழந்தாயே காவலனைஏய்த்தாயே
புரவலனைநீமயக்கி பெண்டிருக்கநீதமுண்டோ
நீமருந்துவித்தைதனை நேரிழையேஏன்படித்தாய்
தோஷம்பலியாதோ துரோகமுன்னைவிட்டிடுமோ
எங்குள்ளகள்ளியிவள்தான் எங்கள்துரைமைந்தனையும்
மங்கைஅழகுள்ளவளை மணஞ்செய்யவொட்டாமல்
குலத்தில்எளியவளே கொடுங்கரமில்லாதவளே
பிலேந்திரரைநீமயக்கி பெண்டிருக்கவந்தாயோ
அரசர்குலமைந்தனுக்கு ஆயிழையும்நீதானோ
மருந்துதொழிலறிந்தால் மானிடர்கள்வேறிலையோ
கைமயக்கவித்தை கற்றகள்ளியேநிஷ்டுரி
மைவிழியேஉன்மருந்து மலைக்கடுவாய்க்கேறுது
மானிடரைஏய்த்திடவோ மருந்துதொழிலறிந்தாய்
மாநிலத்தில்செய்தவினை மாறிஉன்னைச்சூழ்ந்ததென்று
ஒச்சியங்கள்சொல்லியந்த ஊழியருமேபழித்து
வாடிமலைக்கெபியில் வரிக்கடுவாய்நின்றிடத்தே
மதலைஇருவரையும் மலைக்கல்லின்மேற்கிடத்தி
விதமாய்உடைகழற்றி வேறுதுயில்கொடுத்து
காரிகையாளிட்டபணி கையாற்கழற்றிவிட்டு
கூர்விழியும் பாலரையும் குவட்டில்தனியேவிட்டு
ஊழியர்அஞ்சிஒஞ்சி ஓடிமலைதான்கடந்து
வாழும்எஜிப்தூரில்வந்துவிட்டாரம்மானை

## ஞானசவுந்தரிக்கு தேவமாதா காட்சி கொடுத்ததும் கைகள் வளர்ந்ததும்

அட்டகிரிகுவட்டில் அங்கேமுடுக்கிவிட்ட
மட்டாரும்பூங்கூந்தல் மன்னர்தர்மபுத்திரியாள்
பண்டுதொட்டுவாழ்ந்த பதியுந்தான் நீங்கி
தண்டலைமேலிரைந்து தயங்கிஉடல்நடுங்கி
வாடிச்சடமொடுங்கி வயறொட்டிமூச்சடங்கி
நாடிஅயர்ந்தொதுங்கி நடுநடுங்கிநாவுலர்ந்து
அங்கம்விறுவிறுத்து அயர்ந்துரெண்டுகண்மருண்டு
மங்கையர்க்குணர்வுதப்பி மனதுதடுமாறி
சத்தத்தொனிமழுங்கித் தள்ளாடிஉள்ளயர்ந்து
புத்திமணந்தத்தளித்து புலங்குறைந்துபோதமற்று
அறிவயர்ந்தவேளையிலே அலகைவந்துதோன்றியதே
சர்வேஸ்பரனிரங்கி தையல்மனங்கல்லாக்கி
கண்தாங்கிக்கொண்டாலும் கடிஅலகைக்கஞ்சாமல்
விண்பார்த்துமாதாவை வேளையிதுகாருமென்று
நெஞ்சில்நினைத்த நினைவுதளம்பாமல்
அஞ்சாதவளிருக்க அலகைவந்துகூத்தாடி
எங்களுக்காளநல்ல இதுவேளைவாய்த்ததென்று
சங்கைகெட்டதுன்னலகை சளுவட்டைசீயுதரம்
அங்கமுடல்அக்கினியாய் அலகைவாய்தீயெரிய
வங்குசொறிந்தலகை வாயில்நுரைகவிழ
பண்டியுந்தொண்டியுமாய் பருத்தபுயமொடிந்து
சுண்டுரெண்டும்வீங்கி சூலமும்கைவேலும்
விரித்தசடைமுடியும் விதவிதமாய்பல்லுகளும்
சிரசிலேரெண்டுகொம்பும் தீயெரியவாயதனுள்
நாக்கில்அனலெரிய நடுக்கமும்வேஷமுமாய்
தாக்கும்புலிநகமும் சளுவாயுதடுபல்லும்
வந்தாடியேஅலகை வாதுசொல்லிதானுறுக்கி
பந்தயமிட்டலகை பற்கடித்துகொக்கரிக்க
பைங்கொடியாள்தேவபரனை துதித்தல்கண்டு
கைதீண்டமாட்டாமல் கண்மருண்டுபோனதுவே
கோதையரைஏய்க்கவந்த கூளிகளேகியபின்
மாதுமனம்வருந்தி மலைக்கல்லின்மேலிரண்டு
குழந்தையுந்தானழுது குரலடைத்துக்கொண்டாலும்
அழுதேங்கிஅன்னைசென்று ஆவலாய்கைவிரித்து
கூவிஅணைத்தேந்த குழந்தைகையில்வராததால்
நீண்டகரமில்லாமல் நின்றேங்கிபார்த்தழுது
பாலர்படுமிடுக்கண் பரிதாபங்கண்டுமங்கை

காலுந்தலையுருண்டு கல்லழுந்திசோரைசிந்தி
ஐயையோரெண்டு அழுகுழந்தைகூக்குரலும்
தையல்புலம்பியழும் சத்தமுந்தான்கேட்டு
சிங்கமும்கடுவாயும் சிறுபுலிகளும்கூடி
அங்கேவெகுதிரளாய் அவரைவந்துசூழ்ந்ததுவே
சாவுநாள்வந்ததென்று தத்தளித்துதார்குழலும்
ஆவியொடுங்கி அவளிருக்கும்வேளையிலே
சூழ்ந்துவந்த துன்மிருகம் தொடப்பயந்துபின்வாங்கி
சேர்ந்துவளைந்திருக்க தெளிவாய்க்கிளிமொழியாள்
ஆண்டவர்சித்தம் அமைத்தபடிஅகுமென்று
கூண்டமிருகத்தோடே கூறுவாள்செய்தியொன்று
எசித்தூர் இறையவனார் எங்களையுமெங்களுக்கு
பசிக்கருந்தகொண்டுவிட்டால் பார்த்துதவிப்பானேன்
ஆனலொருசெய்தி ஆண்டவர்தாமெங்களையும்
ஒநாயேஉங்களுக்கு ஒப்புக்கொடுத்ததென்றால்
பதறிநின்றேங்குவதேன் பசிக்குவந்தருந்திடுங்கோ
சர்வேஸ்பரனுங்களுக்கு தரவில்லையென்றிருந்தால்
துட்டமிருகங்களே நீர் தூரப்போமென்றுரைத்தாள்
கட்டுரைஅவ்வளவும் கடுவாய்ப்புலிகேட்டு
அடுக்கநில்லாதபடி அவ்வனத்தேஏகியதே
வந்தஇடுக்கணெல்லாம் வானவர்தற்காத்துவிட்டார்
இந்தத்தறுவாயில் இரக்கமுள்ள ஆண்டவரே
அடியாட்குவந்தபொல்லா வடங்காகஸ்தியெல்லாம்
கடவுளே நீரகற்றி காப்பாற்றிக்கொள்ளுமென்று
மன்றாடிக்கொண்டாலும் மைந்தர்குரல்மாறாததால்
சென்றோடிநிறையர்ந்த சிறுவரைக்கண்டங்கலித்தும்
மருகிப்புலம்புவதும் மைந்தர்குரலோசைகளும்
அத்தனெருரிஷிதான் அம்புவியிலாசைவிட்டு
வாடிமலைக்குகையில் வந்துநெடுநாளாக
நாடித்தவசிருந்த நற்றவத்தோன்கேட்டுடனே
ஆட்சத்தங்கேளாத அந்தடவியானதிலே
கோ..க்குர..ரசை கிட்டவந்துகேட்டுமுனி
ஆரெவரோவென்று அறிந்திடவேவேணுமென்று
தூரநின்றுகிட்டேவந்து தோகைரெண்டுபாலரையும்
முனிரிஷிகண்டஞ்சி ஒஞ்சிமுகத்தில்சிலுவையிட்டு
மனிதரோ நீராரோ மாயச்சொரூபமதோ
இன்னகுலம் இன்னரென்றினம் பிரியவென்னோடே
சொன்னால்தெளிவேனென்று துறவோனுரைத்திடவே
மாதவத்தோன்சொல்லுரையை மங்கையர்கேட்டாவலுடன்
வேதரிஷிமுனியே விமலனே நாயகமே
ஐயரே நாங்கள் அடியாள்மனுக்குலந்தான்

மெய்யானகர்த்தருட் வேதவழி நாங்களையா
நாதமற்றோம் நாங்களையா நாம்செய்தபாவமதால்
ஏதுமொருதுன்பமில்லை இடவைதப்பிவந்தோமையா
கடுவாய்புலியுடைய கண்காணப்போனதென்ன
ஆயிழையே நீயுமொரு அதிசயமுள்ளவள்தான்
தாயொன்றுபிள்ளைரெண்டு தையலே நீகையிழந்து
மட்டற்றகோடி மலைகடுவாய்வாழுகின்ற
அட்டகிரியிதுதான் ஆள்மூச்சுக்காணாத
இந்தக்கொடுமலையில் எவ்விதமாய்வந்தாய்
வந்தவரலாறும் வனிதையேஉன்னூரும்
காளையரைக்கைதூக்கி கடத்திவிட்டதாரெனவும்
ஏழையரேஉன்பேரும் என்னோடுரையுமென்றார்
ஞானியரேஎங்களுட நாடு ரோமாபுரிதான்
நானிலத்தில் நான்பிறந்து நடனம்விளையாடுமந்நாள்
பெற்றஅன்னைதானிறந்தாள் பிதாவேறேமன்றல்செய்தார்
அத்தனும்பிந்தினதாய் அன்னையிடமென்னைவிட்டு
தங்களூர்க்கு யாத்திரையாய்த் தந்தையரும்போகலுற்றார்
மங்கை இளையவன்னை மாறுத்தினமடித்து
ஒருநாளமுதருந்தி உறங்குகின்றமஞ்சமதில்
இருளும்நடுச்சாமமதில் எனை எடுத்துவன்காட்டில்
கொன்றுவிடச்சொல்லிக் கொலைக்காரர்தங்கள்வசம்
அன்றுஎன்தாயுரைக்க அவர்களென்னைக்கொண்டேகி
தண்டலையிலென்கழுத்தைத்தறிக்க அவரோங்குகையில்
சென்றாவிநின்றடியாள் சேவகரைகால்பிடித்து
அண்ணேஉடன்பிறப்பே அடைக்கலமென்றழுதேன்
மண்ணிலெனக்கிரங்கி மலைத்தவர்கள் நிற்கையிலே
மன்னன்எஜிப்தரசன் மலைவேட்டைஆடவந்தார்
அந்நேரம் என்கழுத்தை அறுக்கக்கைநாடாமல்
அன்போடெனையிழுத்து மழுவர்தம்வாளோங்கி
சின்னபிராயமதிற் சிறுகரங்கொய்தோடிடவே
என்னுணர்வுதப்பி இருநிலத்திலேயுருண்டேன்
மானடிக்கவந்த மன்னன் மாறியூர்போகையிலே
நானடியாள்பட்டதுயர் நரபாலன்கண்டிரங்கி
தாபரித்துத்தன்னூரில் தாயிடத்தில்கையளித்து
சோபனத்தோடேயிருந்தேன் துரைபுதல்வன்புண்ணியத்தால்
வாழ்ந்தபிராயமதில் மாதாபிதாவோடே
இளவரசர்தர்க்கமிட்டு என்னைமணஞ்செய்துகொண்டார்
மணஞ்செய்தமன்னருடன் வாழ்ந்திருக்கும்நாளையிலே
கணவனும்ரோமையிலே கர்த்தர்தர்மர்பேரில்வந்த
மாற்றானைபோக்கடிக்க மன்னர்அவரேகுமந்நாள்
பூத்தமதலைதங்கி புவியறியமூன்றுதிங்கள்
போர்க்குதவப்போனமன்னன் போர்ஜெயித்துமீளுமுன்னே

ஓர்சூலில்ரெண்டுமைந்தர் ஒருமிக்கப்பெற்றேன் நான்
பெற்றபிரபலத்தை பிதாமாதாவானவரும்
புத்திரர்க்குசோபனமாய் போகவிட்டார்செய்திகளும்
மைந்தனும்தந்தையர்க்கு மாறிவிட்டார்காகிதந்தான்
இந்தரெண்டுபாலரையும் என்னையுங்கொல்லுதற்கு
நிருபமெழுதிவந்த நிஷ்டுரம்நானறியேன்
அரசனும்எங்களைத்தான் அன்றுயிர்கொன்றதென்றால்
பழிதமக்குசூழுமென்றும் பத்திமைந்தாம்பாவமென்றும்
தெளிவாகஎன்மாமன் சேவகரைத்தான்வருத்தி
தண்டலையிலெங்களையுந் தள்ளிவிட்டுவாருமென்றார்
கொண்டாடிக்கொண்டிருவர் குழந்தைரெண்டைகைதூக்கி
கடுவாய்க்கிரையாகக் கடத்திவிட்டுப்போனார்கள்
அடியாளுணர்வுதப்பி அயர்ந்திருக்கும்வேளையிலே
வேதாளம்வந்தெதிர்த்து வெகுகோட்டிகொண்டுநிற்க
மாதாவைத்தான்நினைந்து மன்றாடிக்கொண்டிருந்தேன்
கடியலகைபோனபின்பு கடுவாய்புலிதிரளாய்
அடுக்கவருகையிலே ஆண்டவரைப்பார்த்தழுதேன்
பிடிக்கவந்ததுன்மிருகம் பேசாமல்தான்போச்சு
அடியாட்குதவியதாய் அத்தனே நீரிங்குவர
இறைவர்சர்வேஸ்பரனார் இதயத்திரங்கிவிட்டார்
சிறுப்பத்தில்நானடியாள் சேர்ந்துதுயர்பட்டதினால்
மாதாப்பிதாநாமம் மறதியாப்போச்சுதையா
ஞானியரேஎன்நாமம் ஞானசௌந்தரிதான்
தினில்லைஎந்தனுக்குச் சிறுவருக்கோபாலுமில்லை
அழுதபிள்ளை தானெடுக்க அடியாட்குகையுமில்லை
குழந்தைகுடல்சுருண்டு குரலோசைதானுமில்லை
எங்களுக்கோர்தஞ்சமில்லை இரங்கிடவும்யாருமில்லை
உண்ணபொசிப்புமில்லை உபசரிக்கயாருமில்லை
நாவும்வறளுதையோ நடுங்கிஉடல்சோருதையோ
ஆவலாய்மங்கையரும் அறத்தோன்முகம்பார்த்து
தாபமாய்ச்சொன்னாலும் தவசிஎன்னசொல்லுவாராம்
நங்கையரே தங்கையரே ஞானசவுந்தரியே
உங்களுக்கென்னாலே ஒருநன்றிகாணேனே
நானுமோர்ஆண்பிள்ளை நங்கையரே நீஒருபெண்
தினில்லை இவ்வனத்தே சேர்ந்திருக்ககாவுமில்லை
காட்டிலிருந்தாலும் கனிகாய் இலைகுழைகள்
நீட்டிப்பறித்தருந்த நேரிழையேகையுமில்லை
உன்னோடேநான்கூடி உபசாரஞ்செய்திருந்தால்
என்னுடையகற்புக் கிடருண்டாமேந்திழையே
பாவத்தைப்பார்த்திரங்கிப் பாலரையும்நான்தூக்கி
போவேனென்றாலோரிடத்தில் பூவுலகோரென்னசொல்வார்

போகுங்குகைகளிலே போயிருந்தால்உங்களுக்கு
நிவனம்யார்தருவார் சேதமில்லாலாபமில்லை
தாங்காப்பெரும்பாரந் தலைகொடுக்கஆர்வருவார்
நீங்கள் நிற்கும்சாயல்கண்டால் நிலைதான் பிரியுதில்லை
ஆனலொருசெய்தி ஆயிழையேசொல்லுகிறேன்
நானேவெகுநாளாய் ஞானதவஞ்செய்திருந்த
வனத்திலுறுபெரிய வன்குன்றுகற்குகைதான்
தனித்துநீர்அங்கிருக்க சம்மதமோசொல்லுமென்றுர்
அறத்தினுரை இத்தனையும் ஆயிழைகேட்டகங்களித்து
துறவோன்முகம்பார்த்துத் தோகையருமென்னசொல்வாள்
பண்ணவனேமாதவனே பாலருடன் நானடியாள்
கண்ணீருடனிருந்தால் காப்பாற்றயார்வருவார்
பகலோன்கதிரெரித்து பாரையின்மேல்சூடெழும்பி
மகவரிநுபேரும் மாளுகிறுர்பாவமிதோ
இந்தக்காண்டாவனத்தில் இருந்தடியோர்மாளாமல்
தன்தலமாயுள்ளவொரு தலத்திலேஎங்களையும்
கட்த்திவிட்டுநீர்போனல் கர்த்தர்சித்தமானபடி
உடையவனைமன்றுடி ஒதுங்கியிருந்திடுவோம்
உம்மாலியன் றமட்டும் உபசீரம்செய்யுமென்று
தன்மானங்கொண்டுரைத்த தையலரைக்கேட்டுமுனி
காளையிருவரையுங் கையாலெடுத்தணைத்து
தாழ்ந்துநடந்துவந்த தையலையுங்கையணைவாய்
மூவரையுந்தான்கடத்தி முனியிருந்தகற்குகையில்
பாவையிருபாலரையும் பண்ணவருங்கொண்டிருத்தி
தவசிதமக்காக சேகரித்துவைத்திருந்த
பசிக்குள்ளபட்சணங்கள் பலகனிகள்கொண்டுவந்து
அடுக்கவுள்ள நற்சுனையில் அண்டிபுனல்கோரிவந்து
கொடுத்தார்அவள்வாங்கிக் குடித்துக்களைதீர்ந்து
பாலருக்குபோசனமுமாய் பால்கொடுத்துச்சீராட்டி
ஏவலாய்க்கைமாற்றி ரிஷிஅவர்க்கின்னமுந்தான்
தின்மாவுரொட்டிகளும் தேன்பால்பழமுடனே
கனியோட்றுசுவையும் கலந்தெடுத்துமாதவத்தோன்
குறையாதருந்திடவே கோதையர்க்குக்கையளித்து
அறத்தார்மறுகுகைக்கு யாத்திரைகொண்டேயுரைப்பார்
ஏந்திழையே இக்குகையில் இருந்திடுங்கோவுங்களுக்கு
சார்ந்துதவிசெய்திடுவார் சாகாமல்காத்திடுவார்
மலங்காதிருங்களென்று மாதவத்தோன்தான்பிரிந்து
தலந்தேடிபோகலுற்றுர் தவத்தோனுமம்மானை
ஆவிதுணையாயிருந்த அத்தன்முன்னேகையளித்த
போஜனந்தான்செலவாகி போனபின்புகன்னியவள்
கரமுண்டேகாட்டில் கனிகாய்பறித்தருந்த

0-787, M, 9
N56
111854

அருந்தபுசிப்புமற்று ஆதரிக்கபேருமற்று
பகலிரவுபட்டினியாய் பாலர்படுந்துயரை
மகவுமுகம்பார்த்து மாதாமனஞ்சலித்து
ஓயாதழுது உடலுங்கரைந்துருகி
காயமுலர்ந்துவற்றிக் கைகால்நரம்பொடுங்கி
பாறைமேலேவுருண்டு பாலருடதோலுரிந்து
கிறிட்டசத்தம்மங்கிக் கேள்விக்கருவியற்று
தூரநாள்செல்லாது துஞ்சிடநாள்வந்ததென்று
பாரிற்பவிசுபெற்ருல் பரலோகவாழ்வுகுறை
கர்த்தர்சித்தமெப்படியோ கதிர்வானடைந்திடவே
உத்தரவுவந்து உயிர்பிரியவேளையென்று
இவ்வேளை ஆண்டவரை வேண்டிமன்ருடிநின்று
கூளிவந்தாத்துமத்தை குழப்பம்பண்ணுதெனவே
அறிவுநினைவுகொண்டு அண்ணுந்துவிண்ணேக்கி
நீதிக்கடவுளரே நித்தியனேகர்த்தாவே
சோதிச்சுடரொளியே துவக்கமுடிவில்லானே
மூவுலகோர்பொருளாய் முகியாதிருப்பவனே
பாரில்அடியார்தனக்கும் பாலர் இருபேர்க்கும்
ஆவிதுணையாருமில்லை அருந்தஆகாரமில்லை
சீவன்பிரியுமிப்போ தேவனே ஆத்துமத்தை
கடிகுழப்பஞ்செய்யாமல் கையேருமாண்டவனே
அடியாள்புதல்வருட ஆத்துமத்தைஅங்கழைக்க
தேவனேஉம்முடைய சித்தமிப்போவில்லையென்ருல்
பாவிஅடியாட்கு பட்சணமுந்தண்ணீரும்
நித்தங்குறையாது நீரெனக்குத்தாருமையா
அத்தனேஆண்டவனே அன்றன்றுள்ளஅப்பம்
கல்லுக்குள்தேரைகட்கும் கால்முடவரூமைநொண்டி
எல்லாரையும்படைத்து இரைகொடுக்குமாண்டவனே
காரணமாமரியே கன்னிமரிமாதாவே
பூரணமாய்நேசம் புரிந்தருளுந்தாயாரே
பாவியடியாளும் பாலர் இருபேரும்
சாவுவரும்வேளையிது சற்றுநேரஞ்சொல்லாது
மூவருட்ஆத்துமத்தை முகியாதமோட்சந்தில்
ஆவிசடத்தைவிட்டு அழைத்திருத்திகொள்ளுமம்மா
இங்கேஅடியாரை இருத்திவைக்கசித்தமுண்டால்
தின்கப்புசிப்புந் தினமருளும்மாதாவே
திறையானுந்தேவி சிநேகப்பூமைந்தனுக்கு
சர்வேசுரனுட்னே தாயேநீர்மன்ருடி
பரலோகபூமானை பால்கொடுத்துநீர்வளர்த்தீர்
திரைகடல்சூழ்ந்தடிக்கும் தீவிலுன்னுலயத்தில்
ஆண்டுதிருநாளை ஆசரிக்கவந்தவர்தான்

கூட்ச்சனத்தோடே குழந்தைவிட்டேகனுற்ருர்
முந்நூற்றறுபதுநாள் மூவேளைதினளித்த
பின்னுல்மறுவாண்டு பெற்றவட்குகையளித்த
அன்னைமரிமாதாவே ஆண்டவளே நீயுமல்லோ
இந்நாட்டுரோமையிலே எஸ்தாக்கிபாலகரை
ஒன்றைக்கடுவாயும் ஓநாயொருவனையும்
கொண்டருந்தவந்தெடுத்து கோனுருழவர்கண்டு
ஓடிதுரத்தியுயிர் அழியாமல்காத்ததுவும்
ஈடுவருத்திவைத்து இறைவர்பால்கையளித்து
மாதாவேநீருமல்லோ மாபாவிளங்களையும்
ஆதரித்துக்கொள்ளுமம்மா அரசர்குலகன்னிகையே
குலோனியாமாநகரில் கொன்றபழிகாரனையும்
நிலைநிறுத்திகாத்ததுவும் நீரல்லோதாயாரே
ஆண்டுசனிக்கிழமை ஐம்பத்திரெண்டிலுமே
வேண்டியகோடி வெகுபுதுமைசெய்தீரே
அத்தப்படியாக ஆடியாள்புதல்வர்க்கும்
வந்துதவிளங்கள் வயிற்றுப்பசிஆற்றும்
இப்படியேஏந்திழையும் இரங்கிஅழுதகுரல்
தப்பாமல்விண்ணுலகம் சர்வேசுரனிடம்போய்
பார்த்திரங்கிமாதாவும் பாலன்திருச்சுதனும்
சேர்ந்திரங்கிஆஞ்சுகளும் சிறந்தஅப்போஸ்தலரும்
கன்னிமரிபொன்னுநவாய் கதிரோன்உடுப்பாக
பன்னிரண்டுவானுடுவும் பாதத்தில்சந்திரனும்
வானக்கதிரொளியும் வாத்தியமுங்கிண்ணரமும்
ஞானப்பிரகாச நட்சேத்திரஒளியும்
பரிமளவாசனையும் பாராஞ்சுபாடல்களும்
சுருதிசுடரொளியும் தூய்யார்ச்சிஷ்டோர்பாவனையும்
பகல்வெற்றிநின்றிலங்க பரகதியைவிட்டிறங்கி
குகைதோன்றவிண்ணவர்கள் கூடிபிரபலமாய்
அன்னையர்க்கும் பாலருக்கும்ஆசீர்வாதம்கொடுத்து
என்னைநினைத்தழுத ஏந்திழையே அஞ்சாதே
அஞ்சாதேஎன்றுரைத்த அரியதிருவாசகத்தை
கிஞ்சுகமும்கேட்டுடனே கதிவந்துடல்மகிழ்த்து
ஆவலுடன்முத்தி அன்னைதிருப்பாதம்முத்தி
தேவமாதாவின்திருப்பாதம் சென்ருவி
ஓயாமல்கொக்கரித்து உடலெங்கும்முத்திசெய்து
வாய்திறந்துமங்கையரும் மாதாவைப்பார்த்தழுவாள்
மாதாவேதாயாரே மாற்றதிகரெத்தினமே
ஆதரிக்கவந்தீரோ அன்னையேகண்ணொளியே
கண்டேன்மோட்சத்தின் கண்கொள்ளாக்காட்சிகளை
உண்டேன்பரிமளத்தை ஒளிவிளங்கும்காட்சிகண்டேன்

இந்தவலங்காரச்சிறப்பை ஏற்கநான்பாத்திரமோ
வந்தபெரியோரே வடிவுள்ளவானேரே
காணக்கிடையாத கதிராயிரமொளியே
நாணயமேநானடியாள் நன்றியற்ருள் நானன்ருே
சாகுமுன்னேமோட்சத்தின் தாற்பரியங்கண்டேனே
சாகத்தெளிந்தேனே தாய்மரியேதஞ்சமென்று
சாற்றுமுரையானதெல்லாம் தாயும்திருச்சுதனும்
பார்த்திரங்கிநேசமுடன் பைங்கொடிக்குத்தானுரைப்பார்
இத்துயரம் அத்தனைநாள் இடர்பூண்டாய்என்மகளே
உற்றகஸ்திகையேற்று ஊண்புசிப்பொன்றில்லாமல்
தாயிளையாள்உன்கரத்தை தறித்ததினுலன்றுமுதல்
ஓயாதகஸ்தியெல்லாம் உள்ளடக்கிக்கொண்டாயே
இத்துயரம்நீபூண்டு என்பேரில்வைத்தபக்தி
சற்றும்மறவேன்ஞான சவுந்தரியேதார்குழலே
நீங்காதகஸ்தியெல்லாம் நெடுநாளாய்நீபொறுத்தாய்
நீங்கானஉன்கரத்தை செவ்வைபண்ணவந்தோமென்று
உன்கரத்தைஎன்கரம்மேல் உயர்த்தித்தாவென்றுரைத்து
முன்போலமுறிகரத்தை முழுக்கரமாய்த்தான்வளர்த்து
அதிசயமாகக்கையிரண்டும் அன்னைமரிதான்வளர்த்து
கதிர்வானகத்திருந்து கையோடேகொண்டுவந்த
அருந்தக்குறையாத அப்பமொன்றுகையளித்து
பரகதிநன்மையிது பசிக்கருந்திகொண்டிருங்கள்
உண்டால்குறையாத ஒப்பில்லாஅப்பமிது
தின்றுசெழித்திருங்கோ தீங்கொன்றுமில்லையினி
ஏந்திழையேஉன்கணவன் உனக்குப்பிரியமுள்ளான்
வேந்தனின்னமுங்களுக்காய் வெகுதுயரமாகிடுவான்
தனித்துதுயரோடே தண்டலையெல்லாம்தேடி
கனிவாகஉங்களையுங் கண்டுமனைசேர்த்திடுவான்
சேர்த்திடுவான்உன்னுடைய தேசத்தைஅளுகையில்
பார்த்திடுவான் உன்தகப்பன் பரிதாபம்தீர்த்திடுவான்
குறித்தநாளாகுமட்டுங் குவலயத்தைஆண்டிருந்து
தர்மம்வளர்த்திடுநீ சம்மனசைவிட்டிடுவேன்
அப்போதுஆஞ்சுகளோடம்பரத்தில்வந்திடுவாய்
செப்புமுரைஎல்லாமொழிந்து தேவமாதாசுதனும்
ஆஞ்சுகளர்ச்சியசிஷ்டோரு மாசீர்வாதங்கொடுத்து
வாஞ்சையாய்காட்சி வரிசைவரங்கையளித்து
மாதாதிருச்சுதனும் மற்ருேரும்விண்போனுர்காண்
வாகாய்வனத்திருந்து மங்கையரும்பாலர்களும்
அப்பந்தினமருந்தி அண்ணுந்துவிண்ணேக்கி
எப்போதும்நெஞ்சி லிறைவனைமன்ருடியங்கே
சோபனமுற்றேமகிழ்ந்து தூய்யவரைத்தான்வாழ்த்தி

திவனங்கைகொடுத்த தேவமாதாமேல்நினைவாய்
குழந்தைகள்தாய் மூவருமாய் குகைக்குள்ளிருக்கையிலே
அளப்பென்னசொல்லுவாளாம் ஐயையோஎன்கணவன்
போருக்குபோனதுரை பொருதுசெயங்கொண்டாரோ
ஊருக்குச்சேர்ந்தாரோ உற்றசெய்திகேட்டாரோ
இடர்படைக்குப்போனதினால் இடுக்கண்களுண்டாச்சோ
கடுதாசிஅஞ்சல்விட்டு கழுத்தறுக்கச்செய்தாலும்
எங்களையும் இந்தமட்டும் ரெட்சித்தஆண்டவரே
சங்கடம்நேராமல் தலைவனையும்காத்தருளும்
அத்தனென்னைக்காணுமல் அயராத்துயரமதை
கர்த்தாவேநீரிரங்கி காப்பாற்றிக்கொள்ளுமென்று
மங்கைகுகையிருந்து மணவாளன்தன்னுயிர்க்காய்
சங்கடப்பட்டாலும் சாப்பாடுகைக்கொடுத்த
மறைபொருளைமன்ருடி மலைக்குகையில்வாழ்கையிலே
அறத்திமுன்னேமூவரையும் ஆதரித்துகாத்தரிஷி
குழந்தைரெண்டுதாயொருத்தி குகைக்குள்ளிருந்தாரே
பிழைத்தங்கிருப்பாரோ பிறவூர்போய்ச்சேர்ந்தாரோ
இறந்துமடிந்தாரோ ஏதென்றறியவென்று
அருந்தகொஞ்சம்தீஞெதுக்கி ஆவலாய்தேடவந்து
குகைமுகத்தில்நின்றுரிஷி கோதையரைநோக்கலும்
திகைத்துநின்றுமாதுறவோன் சேயிழையைப்பார்த்துரைப் [பார்
ஏந்திழையேநீயாரோ ஏலவேஇக்குகையில்
கூந்தலிருகையிழந்தாள் குழந்தைரெண்டாண்மதலை
முன்னிருந்தமூவரையும் மொய்குழலேகண்டதுண்டோ
என்றுரிஷி கூறுமுறை நேரிழைகேட்டோடிவந்து
துறவோன்பதம்பணிந்து தோகையருமென்சொல்வாள்
அறத்தோனேநீர்கேட்ட அடியாளும்பிள்ளைகளும்
காண்டாவனக்கெபியில் கண்ணயர்ந்துநிற்கையிலே
தாண்டிவந்தெங்களையும் தற்காத்தரவணைத்து
குழந்தைரெண்டைகையேந்தி கூட்டிகுகையிருத்தி
இளைப்பாற்றிஎங்களுக்கு இரைதந்தநீரல்லவோ
மனக்கற்புக்கினமென்று மாதவனேஎங்களையும்
தனித்துவிட்டுப்போனீரே தவசியரேயென்றுரைத்தாள்
பைங்கொடியேஇப்போது பகர்குறியெல்லாம்சரிதான்
மொய்குழலேமுன்னுக்கு முழங்கைரெண்டுமில்லாததால்
மங்கைஉன்மைந்தரையும் மலைக்கெபியிற்றாக்கிவிட்ட
தங்கையரேநானலவோ சாயல்வேருனதென்ன
எனக்குறுதிகொள்ளுதில்லை இரவுகனுக்கண்டதுபோல்
உனக்குகையீந்ததுவும் ஊண்புசிப்பானதுவுங்
வகைவிபரமாயெனக்கு வழுத்துவாயென்றுரைத்தார்
புகலுகிறேன்மாமுனியே புதுமைநவம்மெத்தவுண்டு

என்னைரெண்டுபாலரையும் இக்குகையிற்கூட்டிவிட்டு
அன்னமும்தண்ணீரும் அடியாட்குநீர்அருளி
தீவனம்நீர்தந்ததுவும் தின்றுசெலவானதினல்
ஆவலாய்த்தீனுக் கயர்ந்துஉடலொடுங்கி
அள்ளாடிபிள்ளைரெண்டும் அடியாளும்பட்டினியால்
தள்ளாடிவிண்ணேக்கி சர்வேஸ்பரன்பேரில்
மன்ருடிக்கொண்டிருந்தேன் மரியம்மாள்ஆண்டவரும்
ஒன்ருயப்போஸ்தலரும் உயர்வானசம்மனசும்
மதிக்கடங்காவிண்ணெளியும் மாதாமுகத்தொளியும்
கதிரோன்மதியொளிபோல் கண்கொள்ளாகாட்சிகளும்
வானத்திறங்கி வந்தெனக்குகைவளர்த்து
தீனுக்கொருவகைநற் றீபனமுங்கொண்டுவந்தார்
அருந்தக்குறையாத அப்பமொன்றுகையளித்தார்
பரகதியோர்செய்தநவம் பண்ணவனேபாருமென்ருள்
பாருமென்றசொற்கேட்டுப் பண்ணவனுமேதுசொல்வான்
தார்குழலேஞான சௌந்தரியேதங்கையரே
நானேவெகுகாலம் நானிலத்திலாசைவிட்டு
ஆனலிதுவரையில் ஆஞ்சுகளர்ச்சிஷ்டவர்கள்
வானத்திருந்தெவரும் வரப்பேர்ககாணேன்
கோதையரேநீயுமுந்தன் குழந்தைரெண்டுமிங்குவந்து
அர்ச்சிஷ்டோர்ஆண்டவரும் அன்னைமரிஆஞ்சுகளும்
உச்சிதமாய்கைவளர்த்து ஊண்புசிப்புந்தந்தாரே
இந்தநவஆச்சரியம் எனக்குநிசமாகவில்லை
வந்துனக்குகாட்சிதந்த வானோர்வடிவழகும்
தாய்மரிதன்சுதனும் சர்வேஸ்பரன்வடிவும்
தூயார்ச்சிஷ்டோராஞ்சுகளின் சொரூபமும்சொல்லுமென்ருர்
பண்ணவனேமாதவனே பரகதியோர்வர்ணங்கள்
கண்ணுக்கடங்கிலேயே கதிர்வடிவைஆருரைப்பார்
மாதாச்சுதனழகும் மனதுபுத்திக்கெட்டிடுமோ
தூதருட்வடிவும் சொல்லுக்கமைந்திடுமோ
என்கண்ணிற்கண்டபடி ஏதும்சிலகாரணததை
உன்முன்னேஒப்புவிப்பேன் உற்றிருந்துகேளுமென்ருர்
கன்னிமரிஅடையாளம் கதிரோனைசட்டையிட்டு
சென்னியிலேவானுடுவும் திருத்தாளிற்சந்திரனும்
ஆச்சரியமானதுயில் அதிலேசிவப்புவர்ணம்
புள்ளியுண்டுநீலமுண்டு பொன்னலரும்புமுண்டு
மெல்லியதங்க இழை மேலானஆடையது
மாதாமுகந்துடைக்க மாற்றதிகமானதுயில்
பாதிச்சிவப்பு பலபலவர்ணமுமாய்
தங்கத்தாலிழையிட்ட தாமரைப்பூச்சாயல்வ.ணம்
மங்காத்துயிலுமொன்று மாதாகரத்திலுண்டு

அன்னைமரிநெய்துடுத்த ஆடைஅலங்காரம்
பொன்னுலிழைபோட்டு பொருந்தநெய்தபொற்றுகில்தான்
விரிவுள்ள ஆடையிலே விளும்பெல்லாம் நீலப்பச்சை
நேராகநெய்ததுயில் நிறஞ்சிவப்புகங்குவர்ணம்
சேலைகரைவிளிம்பில் சிவப்புவயிரமிட்டு
வேலைபலகோடி விலைமதிக்கக்கூடாது
கன்னிமரிதாய்வடிவு கதிரொளியும்பற்றாது
மின்னொளியும்பற்றாது மெய்யொளிவுக்கொப்பாக
அந்தம்அலங்காரம் அழகுபிரகாசம்
சந்திரனுஞ்சூரியனுஞ் சரியிடவுங்கூட்டாது
அம்மையுட்ல்தாழ்வுமில்லை அகலமுயரவில்லை
சம்மனசோர்ராக்கினியாள் சரீரம்சமவளர்த்தி
கன்னிமரிஏந்திவந்த கர்த்தர்திருக்கரத்தில்
பொன்னாலேஉண்டையொன்றுபிடித்திருக்கக்கண்டேன்நான்
சிரசிலொருசின்னமுடி சேர்ந்தமுத்துநின்றிலங்க
மரகதநீலப்பச்சை வைடூரியமிலங்க
கர்த்தர்முகத்தொளியும் கண்ணொளியுங்காதொளியும்
நெற்றிவாய்மூக்கொளியும் நிமலனுடலொளியும்
கண்ணொளியும்மின்னொளியும் கதிரோன்சுடரொளியும்
பொன்னால்திறவுமுண்டு பிடித்தசோடங்கியுண்டு
கையிற்சிலுவையுண்டு கடுதாசிதூவலுண்டு
மெய்யிலங்கசல்லடங்கள் விதவிதமாய்பூண்டதுண்டு
கர்த்தருடதூதர்கதிராஞ்சுமார்களுண்டு
நெற்றியிலேதொப்பியுண்டுநிறைந்தமுத்துக்கோர்த்ததுண்டு
சடத்திற்சகலாத்துச் சட்டைகள் சப்பாத்துமுண்டு
முடியுஞ்சிரசிலுண்டு முதுகிற்சிறகுமுண்டு
பறக்கத்திறமுமுண்டு பாதக்குறடுமுண்டு
சிறக்கப்பலபணிகள் சிங்காரமாகவுண்டு
வந்தபெரியோர்கள் வடிவுசரியாயுரைக்க
இந்தவுலகி லிருப்போர்க்குமேலாது
என்கண்ணுக்குள்ளமைந்த திவ்வளவும்நானுரைத்தேன்
உன்சித்தமெப்படியோ வுண்மையென்றுளம்மானை
ஞானசவுந்தரியாள் நடந்தநவஞ்சாற்றியபின்
வானத்தைநோக்கி வணங்கிநின்றமாதுறவோன்
உரைத்தசெய்தி உண்மைஎன்றே உகந்துமனமகிழ்ந்து
பரத்தைப்பார்த்தங்கலிந்து பண்ணவனுங்கையேந்தி
நின்றுமனஞ்சோபனமாய் நேரிழையைபார்த்துரைப்பார்
நன்றியுள்ளதங்கையரே ஞானசவுந்தரியே
எத்தனையோகஸ்திஇடர் பூண்டுநீ அழுதாய்
அத்தனையும்ஆண்டவர்பார்த் தன்புகொண்டாருன்பேரில்
உனக்குமுன்பாலருக்கும் ஒருகுறையுமில்லையினி

எனக்குநன்மைகிட்டிடுமோ எப்படியோநானறியேன்
அறத்துமுனிஇப்படியே அதிசயித்துக்கொண்டெழுந்து
மறுத்துமவர்கெபிக்கு மாதவத்தோன்போகலுற்றார்
மாதுறவோன்முன்மறந்து மாறியவர்ஏகிடவே
கோதைரெண்டுபாலருமாய் கும்பிட்டேஆண்டவரை
குறையாத அப்பமுண்டு குகைக்குள்ளிருக்கையிலே

## பிலேந்திரர் வந்து மனைவி மக்களைத் தேடல்

தர்மர்மகாராசருட யாத்திரைக்கேதுணையாய்
போருக்குதவிசெய்ய போனபிலேந்திரர்தான்
தார்குழலாள்ஞான சவுந்தரியாள்தன்கணவன்
போனபயணமதில் போர்பொருதுவெற்றிகொண்டு
ஆனைபரிசிவிகை ஆயுதமெல்லாவகையும்
மாநலமாய் மாநிதியும் மாற்றானுடைமையெல்லாம்
ஆகப்பிலேந்திரர்க்கு அண்ணல்தர்மர்கையளித்து
மன்னர்தர்மராசனையும் மாளிகையில்கொண்டுவிட்டு
தென்னன்பிலேந்திரரும் சேர்ந்தபலசேனைகளும்
தன்னூர்பதிநோக்கித் தான்செயசோபனமாய்
இருபாலர்தேவியர்மேல் எண்ணடங்காதாபங்கொண்டு
நரபதியோடேவலரும் நடந்துவருகையிலே
மன்னன்பிலேந்திரரை மாதாபிதாநினைத்து
இன்னம்வரக்காணாததால் ஏதிடுக்கமுண்டாச்சு
தென்னர்தர்மராசருந்தான் சேர்த்திருத்திக்கொண்டாரோ
சன்னதம்முன்விட்டதிலே தாயுடனேபாலரையும்
கொலைசெய்துமூவரையும் கொன்றசெய்திநானறிய
நிருபமெழுதிவிட்டால் நிசமாய்வருவேனென்று
மைந்தன்விட்டஅஞ்சலுக்கு மறுநிருபம்போகாததால்
தந்தையைமறந்து தானிருந்துகொண்டானோ
ஏதோதெரியாதோ என்மகனைக்காணோமென்று
மாதாபிதாசலித்து மைந்தனுக்குமோர்நிருபம்
நிருபமெழுதும்முறை நினைவாகக்கேட்டருளும்
பிலேந்திரா போர்க்களம்போய்ப் பிரிந்துவெகுநாளாச்சே
தனித்துநீ அங்கிருந்தால் தந்தைதாய்க்காருதவி
பொருதுகளம்பிரிந்தால் புத்திரனேவாராயோ
இன்னம்வரக்காணாததால் எங்கள்மனஞ்சோருதையோ
உன்னுடையதேவிமுன்னே ஒருசூலில்ரெண்டுமைந்தர்
ஈன்றசெய்திநீயறிய எழுதிஅஞ்சல்விட்டதற்கு
நீண்டாதசாதியைநான் திருமணஞ்செய்ததினால்
இறைவர்குறைசொல்லுகிறார் இழுக்குவசைஆகுமென்று
சிறுவரிருபாலரையும் தேவியுடன்மூவரையும்
கொன்றுவுயிர்போக்குமென்று கொடுத்துவிட்டஅஞ்சலுக்கு

அன்றுடனேதேவியையும் ஆண்குழந்தைரெண்டையுமே
கொலைப்படுத்திகொன்றசெய்தி குலயத்திற்ருனெழுதி
தலையறுத்துக்கொன்றசெய்திசன்னதமுன்னேவிடவும்
நினைவில்லையப்போது நிருபமிப்போகண்டவுடன்
இனித்தாமதியாமல் எசித்தூர்க்குவாவெனவும்
காகிதம்ஒன்றெழுதி கட்டியன்கைக்கொடுத்து
போகவிட்டார்ரோமையிலே புத்திரன்தன்சமூகம்
ஒற்றனொருநொடியில் ஓடிஎசித்தூர்தாண்டி
நாட்டைக்கடந்தோடி நடுவழிசெல்லுகையில்
எதிராய்பிலேந்திரரா மிறைவன்வருகைக்கண்டு
அதிபதியைகைதொழுது அத்தனன்னைதந்துவிட்ட
திருபமிதென்றுரைத்து நீட்டிக்கரங்கொடுத்தான்
அரசனுங்காகிதத்தை ஆவலுடன்கைவாங்கி
கட்டுமுத்திரைஅவிழ்த்து கர்த்தன்வாசித்தவுடன்
தட்டுக்கொண்டுமன்னவனுந் தலைமேலேகையைவைத்து
நினைவுபுத்திதப்புவதாய் நிலத்திலயர்ந்துருண்டு
சனங்களலைமலைத்து தலைவனையுஞ்சேர்ந்தாவி
காலுந்தலைமாடாய்க் காவலனைகைதாங்கி
ஆலோலமாயூர்போய் அன்னைபிதாமுன்பாக
கொற்றவனைக்கொண்டிறக்க குமாரனைப்பார்த்தேயழுவார்
புத்திராபோர்பொருத போகாதேஎன்றேமே
சண்டைக்குப்போனதினல் சதிமானமாச்சுதென்று
கொண்டுவிட்டோரைப்பார்த்து கூறுவாரன்னைபிதா
இன்பமுள்ளசேவகரே ஏவலரேஊழியரே
துன்பம்புதல்வனுக்கு தொடுத்தவிதஞ்சொல்லுமென்றூர்
கூறுமுரைகேட்டு கூடவந்தோரே துரைப்பார்
வேறென்றும்நாமறியோம் வேந்தனே நாங்களொன்றாய்
பொருதுகளம்பிரிந்து புத்திரரோடேமகிழ்ந்து
வரும்வழியிலோர்தூதன் வந்துமதுபாலர்கையில்
காகிதம்கைக்கொடுத்தான் காவலன்வாசித்தவுடன்
வாயோடலகுதெனனி மறுத்துரைக்கக்கூடாமல்
அங்கம்வெதும்பி அறிவயர்ந்தபோதுடனே
எங்களிருதயமும் இளகிபயந்தேயுருகி
தலைவனைச்சென்றூவி தாங்கியெடுத்தோடிவந்தோம்
உலகிலொருவிக்கினங்கள் உடல்பிணிஒன்றில்லைஐயா
ஏதுமயக்கமென்று இருவிழிக்குள்ளஞ்சனமும்
ஊதினூரேநசியம் உடனேஅறிவுவர
புத்திரற்குமந்நேரம் போதந்தெளிந்திட்டவே
அத்தன்முகம்பார்த்து அழுதழுதென்சொல்வாராம்
பாதகரேநிஷ்டூர பஞ்சமாபாவிகளே
என்காதலியாள்பாலரை கழுத்தறுத்துக்கொன்றேமென்று

இந்தவகைககாகிதந்தான் எழுதிவிட்க்காரியமேன்
என்-மைந்தரெங்கேதேவிஎங்கே மாதாவேதந்தையரே
புத்திரன்புத்தியிப்போ போதமில்லையென்றுரைத்து
அத்தனுக்குமுன்னேவந்த அஞ்சலைப்போய்சென்றெடுத்து
மைந்தன்கரங்கொடுத்து வாசித்தறிந்திடென்றார்
முந்தினகாகிதத்தை முழுதும்வாசித்தவுடன்
கையைக்கடித்துமன்னன் கண்ணீரார்ருயுதிர்த்து
ஐயையோவிந்த அருங்கொலையார்செய்ததென்றார்
என்மைந்தர்தேவியரை இழந்தேனேயென்றழுவார்
துன்மார்க்கமாச்சுதையோ துரோகமேஎன்றழுவார்
தேடக்கிடையாதஎன் தேவியைபாலகரை
சூடிப்பாய்கொன்றவரைத் தலத்திலறியேனே
என்றிருபம்மாருடி ஏற்காவிதமெழுதி
சின்னக்குழந்தைரெண்டு தேவியையுங்கொன்றாரோ
மைந்தர்பிறந்தசெய்தி மாதாபிதாவெனக்கு
சந்தோஷமாகவிட்ட சன்னதம்வாசித்தறிந்து
தோன்றலிருபாலரையும் துணைவியையுமாதரிக்க
வேண்டிப்பிரபலமாய் விட்டஅஞ்சலிதுவல்லவே
நல்லாங்குபொல்லாங்காய் நாட்டைக்கெடுத்தவரை
எல்லாமறிந்துகொள்ள ஏவல்கொண்டஅஞ்சலனை
தேடியேபார்த்தழைத்துச் க்ஷணத்தில்வரவேணுமென்றார்
ஓடியேகட்டியனும் ஒருநொடியிலஞ்சலனை
கண்டழைத்துகூட்டிவந்து காவலன்முன்னேவிட்டான்
பண்டுள்ளஒற்றனைத்தான் பார்த்துரைப்பார்பார்வேந்தன்
ஒற்றனேஉன்கையில் ரோமாபுரியில்நின்று
நீட்டிநான்தந்த நிருபமிதுதானோ
கடுதாசிஆரிடமும் கைக்கொடுத்துக்கொண்டதுண்டோ
தொடர்ந்துவழிவந்தேநீ தூங்கினவேளையிலே
அடுக்கப்படுத்தவரை ஆரென்றுகூறிடென்றார்
அஞ்சலனுமொஞ்சியஞ்சி அயர்ந்துஉடல்நடுங்கி
கெஞ்சிஉரைத்திடுவான் கிட்டநின்றவேந்தனுக்கு
ஏந்தலேஎங்கள் . இறைவனேசிங்காசனரே
வேந்தன்துரைமகனே விள்ளுவேன்விண்ணப்பமொன்று
தலைவனேஉம்முடைய தந்தைதாய்கைகொடுக்க
நிருபமொன்றுதானெழுதி நீரெனதுகையீந்திர்
கடுதாசிஇன்னமொரு காகுப்பைக்குள்நான்மறைத்து
நடந்துவருகையிலே நானுமொருவர்கையில்
நிருபங்காண்பிக்கவில்லை நீட்டிநான்வாங்கவில்லை
துலைவழிக்காய்வேண்டித் துணைகூட்டிப்போகவில்லை
அடுக்கப்படுத்திருந்த ஆளொருவர்தானுமில்லை
இடுக்கண்கள்நேராமல் இடைவழியில்நில்லாமல்

விரைந்துவருகையிலே வெங்கதிரோன் தான்மறைய
அரசர்தர்மர்மேடையிலே அன்னம்பசிக்கருந்தி
படுத்துநான்கண் துயின்று பகலோனுதயமதில்
நடந்துளசித்தூரில் நான்வந்ததல்லாமல்
மனதுநினைவறிய மாருட்டங்காணவில்லை
எனதிறைவர்க்கிடர்நேர்ந்தால் ஏகபரன்சாட்சியென்றார்
மட்டிட்டகோட்டை மணிவாசல்பிலேந்திரனார்
ஒற்றனவனைக்கொல்ல ஒருகுற்றங்காணோமென்றார்
தென்னன்பிலேந்திரர்தான் தேவியையும்பாலரையும்
அன்னைபிதாபுண்ணியமாய் ஆதரித்துக்கொள்ளுமென்று
எழுதிவிட்டகாகிதத்தை இடையிலுள்ளோர்மாருடி
குழந்தைதாய்மூவரையும் கொலைசெய்தசஞ்சலத்தால்
மன்னன்மனத்துயரம் மாருமல்தேருமல்
அன்னப்புசிப்புமுதல் அருந்தாமலேவெறுத்து
வெள்ளைஉடுத்தறியார் வெந்நீர்குளித்தறியார்
எள்ளெண்ணெய்தான்மறந்து இரவுறக்கமில்லாமல்
ஏக்கந்தணியாமல் இருந்தேங்கிமூச்சுவிட்டு
ஆக்கமுள்ளமைந்தனுமோ அபத்தமாய்த்தானிருந்தார்
மனைவியரைக்கொன்றுவிட்டோர் மாநிலத்தில்வாழ்வுமுண்டோ
தனமிருந்தென்ன நலம் தாரணியாண்டென்னபலன்
பல்லக்கேறி பாராண்டுமென்னசுகம்
அல்லலுற்றவாழ்வுக் கடிநரகபாதையென்று
வனமதிலேசென்றிருந்து வானவரைமன்றாடி
முனிவேஷங்கொண்டிருந்தால் மோட்சநன்மைபெற்றிடலாம்
தந்தைதாயைமறந்து தவசுநிலையாயிருக்க
மைந்தனும்போக வழிகொண்டவேளையிலே
அன்னைபிதாவறிந்து அங்கலித்துசொல்லுவாராம்
உன்னைநம்பிநாங்களிந்த உலகத்திலேயிருக்க
எல்லாத்தையும்மறந்து ஏகாந்தம்நீபோனல்
அல்லலுற்றநாங்க ளடியலைந்துபோனுக்கால்
தேவிமைந்தர்மாண்டோர் திரும்பவருவாரோ
பூவுலகிலின்னமொரு பூவையரைமன்றல்செய்தால்
பாலகரைப்பெற்றிடுவாள் பரிதாபமேதுக்கு
பூலோகமீதினிலே பிறந்தவரெல்லாமிறப்பார்
தேவிமைந்தர்தானிழந்தும் தேறலையோநாட்டிலுள்ளோர்
ஆவல்தெளியால் அங்கம்கசிந்துருகி
பட்சித்தநாளறியோம் பட்டினிநாளெத்தனையோ
அச்சிருக்கவூன்போச்சே ஐயையோவென்மகனே
சலிப்பைவிடுமென்மகனே சரீரபெலனுமில்லை
பெலனில்லைசக்தியில்லை பிலேந்திரனின்சாயலில்லை
அமர்கள்வந்ததென்றால் ஆர்தஞ்சமெங்களுக்கு

எமக்குதவியாருமில்லை இட்றுண்டால்ஆற்றுகைக்கு
என்மகனேஎன்சுதனே இருவிழியேகண்மணியே
உன் துயரமுன்மனதால் உறுதிகொண்டுதிராவிடின்
என்னசெய்வோம்நாங்களினி இத்துயரம்பூண்டிருந்தால்
மன்னர்தர்மராசர் மகள் துயரந்திராமல்
ஆறுமல்தேறுமல் அண்ணலுற்றசஞ்சலத்தை
மாருத்துயர்திர்த்த மைந்தனுர்நீரல்லவோ
எல்லார்க்கும்புத்திசொல்லும் என்மகனே நீயுமிப்போ
நில்லாக்கவனமுற்று நெடுநாள் துயராச்சே
அன்புதனைஅறிவு ஆனமனப்பொறுதி
உள்புறமாய்நின்றசெல்லா முன்னைவிட்டுப்போனதுவோ
உற்றதுயர்திராமல் ஊண்மறந்து நீயிருந்தால்
அத்தனன்னையானவர்க்கு ஆளொருவர்வேறுமுண்டோ
புத்திராஈதுவிட்டு போசனங்கொள்ளுமென்ருர்
எத்தனைசொன்னலு மேக்கந்தணியாமல்
பிலேந்திரரைப்பார்த்தேயின்னும் பிதாமாதாவென்சொல்வார்
நிருபத்தின்வாசகத்தை நிசமென்று நாங்கள் நம்பி
ஒருவர்க்கிடர்நினைப்ப துதவாதென நினைத்தும்
கொலைசெய்தால்பத்திலைந்தாங் குற்றமுறுமென்றறிந்து
புலிகடுவாய்மூவரையும் பிடித்தருந்திகொள்ளுமென்று
தலையறுத்துக்கொல்லாமல் தண்டலையில்தள்ளிவிட்டோம்
நிலையுள்ளபேரானல் நிமலன்கிருபையினல்
மிருகங்கள் திண்டாது மேதினியில்மூவரையும்
உறுதிகெட்டபேரானல் ஒநாய்க்கிரையாவார்
இறந்தாரோவின்னம் இருப்பாரோஎப்படியோ
சர்வேஸ்பரன்புதுமை சாற்றமுடியாதேயென்று
அத்தனுமன்னையரும் அறிக்கையிட்டஅவ்வுரையை
புத்திரனுங்கேட்டுடனே பிரியமனம்சோபனமாய்
தந்தையரேஉங்கள்கையால் தலையறுக்கவில்லையென்ருல்
அந்தரச்சாவொருநாள் அண்டர்தவர்களையும்
ஏகன் நமக்கிரங்கி எப்படியுந்தற்காப்பார்
சாகவில்லைதேவிமைந்தர் தண்டலைபோய்த்தேடவென்று
மன்னன்பிலேந்திரர்தான் மனத்துயரமெல்லாமகற்றி
அந்நேரங்கட்டியனை அழைத்தவனேடேதுரைப்பார்
ஏவலனே நம்முடைய எசித்தூர்மனுப்படையை
சேவகரைசேர்த்தழைத்து சணத்தில்வரவேணுமென
ஒற்றன்விரைந்தோடி உள்ளபடைசேனைகளை
கூட்டிஒன்ருய்திரட்டி கொற்றவனுர்முன்னேவிட்டான்
தன்னுட்டுச்சேவகர்கள் தலைவனையுமேபணிந்து
தென்னவனே நாங்களிங்கே செய்யும்பணிவிடைதான்
இன்னதென்றெங்களுக்கு மியம்பிடவேவேணுமென்ருர்

என்னுடையதேவியையும் ஈன்றரெண்டுபாலரையும்
மாதாபிதாசினந்து மலைக்குவட்டிலாக்கிவிட்டார்
காதலிபாலரையும் காட்டில்போய்தேடுதற்கு
வருத்திவிட்டேனுங்களையும் வாருமென்றுமன்னவனும்
அரிசிசுமையேற்றி ஆயுதமெல்லாமெடுத்து
தம்பட்டம்பல்லாரி தாளம்மிகமுழங்க
கொம்புகுழல்பலதும் கொற்றவனோடுற்றோரும்
காலாளும்சேவகரும் கர்த்தனுமொன்றாய்க்கூடி
சோலைவனந்தேடி துலங்குமெசித்தூர்கடந்து
நாடும்பதிகடந்து நகருந்தெருத்தாண்டி
ஓடைச்சலக்காடு ஊற்றுச்சுனைகடந்து
அட்டகிரிகடந்து அண்ணாந்துமேற்பார்த்து
வட்டவட்டஊறணியும் வனத்திற்பூஞ்சோலைகளும்
கவனித்திவர்தேடிக் கற்புடையெலாம்பார்த்து
காவுங்கல்குகையுங் கல்லூறணிக்கரையும்
நாவல்மரத்தோப்பும் மாதாளம்பூசோலைகளும்
சேர்ந்துபோய்தேடித் திரிந்தலைந்துங்காணாமல்
மந்திகுரங்கோநாய் மரநாய்புலிகரடி
வந்தடையுங்கற்கெபியும் வன்குகையெல்லாம்பார்த்து
கடுவாய்புடைகளிலும் கழிந்தமனுரோமம்
முடைகள்முதுகெலும்பு மூட்டெலும்புபார்த்தாலும்
பிள்ளைசிறுவெலும்பு பெரியாள்பருமெலும்பு
உள்ளபடிக்குள்ளலெக்கு ஒருரூபங்காணாததால்
தண்டலைவாடிகளும் தாங்காப்பெருக்கெபியும்
வண்டுகள்தான்மொய்க்கும் வாடாப்பூஞ்சோலைகளும்
சிறுவர்தாய்மூவரையுந் தேடிவந்தோர்காணாமல்
மருகித்துயர்பூண்டு மன்னன்பிலேந்திரனும்
நடந்துவந்தோர்காலயர்ந்து நாவும்வறண்டுலர்ந்து
உடலயர்ந்துமன்னவனும் உள்ளந்தளர்ச்சிகொண்டு
சடைந்துபடைமனுவுந் தயங்கிமயங்கியங்கே
அடவியிற்கூடிநின்று அரசனும்மாசனமும்
முட்டிட்டுவிண்ணோக்கி முதலோனைமன்றாடி
அட்டகிரிஆழிகடல் ஆதரையும்பல்லுயிரும்
படைத்தேபராமரிக்கும் பரனே பரம்பொருளே
அடியேனுடதேவியையும் ஆண்குழந்தைரெண்டையுமே
தண்டலையில்தேடிவந்து தத்தளித்துவாடுகிறோம்
அண்டர்பிரானே ஆண்டவரே நீர்இரங்கி
என்தேவிபாலரின்னம் இருந்துபிழைக்கிறதும்
முன்வந்தமூவரையும் மிருகந்தான்தின்றாலும்
மலைகடந்துவேறே மறுதேசம்போனாலும்
புலிகடுவாய்க்கெட்டாமல் போய்குகையிற்சேர்ந்தாலும்

அடியேன் நிசமறிய ஆண்டவரேஎன் மனதில்
திடம்வருத்தவேணுமென்று தென்னவனுஞ்சேவகரும்
மரியம்மாள்மைந்தனையும் மன்ருடிக்கொண்டெழும்பி
திரும்பக்காலேகுதில்லை தேடியெங்கேபோவேனென்று
அலைமலைத்துச்சேனைகளும் அண்ணல்பிலேந்திரரும்
மலையில்நின்றுகொம்பூதி மறுமலைக்குபோகையிலே
மோசம்போகாமல்முன்னே மூவரையும்தாபரித்த
தேசம்மறந்தரிஷி சேனையைக்கண்டஞ்சியொஞ்சி
மனுமூச்சுக்காணுத மாபெரிய பர்வதத்தில்
சனத்திரளேதெனவும் தவசிமனந்தேருமல்
ஆறிஅமர்ந்துமுனி ஆரென்றறியவென்று
தேறியேமாதுறவோன் திரள்மனுவோர்தம்மிடம்போய்
மானிடரே நீரெவ்விடம் மலையில்வந்தவாறேது
ஏனிப்போதிங்கேவந்தீர் எண்ணடங்காதுன்மிருகம்
கரியுங்கலைமானும் கடுவாய்புலிகரடி
ஒருதிரளாய்வந்ததென்ருல் உங்களைவிடாதுகண்டீர்
வந்தகவைபார்த்துமிப்போ மாறியூர்ஓடுமென்ருர்
அந்தமுனிபாதத்தை அரசன்வந்தாசரித்து
ஐயாரிஷிமுனியே அடியோர்கள்வந்தகவ்வை
சேயிழைகைரெண்டுமில்லாள் சிறுவரெண்டாண்குழந்தை
சண்டையிலேகொண்டுஇந்த தண்டலையில்தள்ளிவிட்டார்
கண்டதுண்டால்சொல்லுமென்று காவலனுமாவல்கொண்டு
ஆங்கலித்துசொல்லுமுரை அறத்தோனுமுள்ளடக்கி
அரசன்நேருள்ளவனே ஆகபடஞ்செய்பவனே
நரபதிதிட்டமின்னம் நாமறியுமுன்பாக
உள்ளகதையொன்றும் உரைக்கப்படாதெனவும்
பிள்ளைரெண்டுதாயுடனே புரவலனே இவ்வனத்தில்
குறுக்கேவரப்போகக் கொற்றவனேகாணேமென்ருர்
மறுக்கமுற்றுமன்னவனும் மாமுனியோடேதுரைப்பார்
தவசியரேஎன்னுடைய தையலிருபாலரையும்
செய்யமுனியேகண்டதுண்டால்திரும்பியென்னூர்சேர்வேன்
காட்டுமலைக்குவட்டில் காணுதேபோனுக்கால்
நாட்டுக்குப்போவேனே நானிலத்தைஆள்வேனே
எங்களுடையஆஸ்தி நிதிஎல்லாமினியெனக்கேன்
தங்கினுலும்மோடே தபசுசெய்துகொண்டிருப்பேன்
நானுந்துணையாச்சு நவமுனியேஎன்றமொழி
ஞானியருங்கேட்டிரங்கி நரபதிக்கேதுரைப்பார்
கொற்றவனேகுற்றமுள்ள கோதையரைமன்றல்செய்து
வைத்திருந்துரெண்டுமைந்தரையுங்கண்டபின்பு
மூவரையுங்காட்டில் முடுக்கிவிட்டகாரியமும்
காவலனே நீதிரும்ப கவலைகொண்டுதேடுவதும்

முன்னேரெண்டுகையிழந்த மொய்குழலை நீவிரும்பி
மன்னவனே நீயும் மணஞ்செய்த அவ்வாறும்
பண்டுநடந்த பலமாற்றமானதெல்லாம்
விண்டுசரியாக விரித்துரைக்கவேணுமென்றார்
மாதவனே பூருவத்தில் மலைவேட்டைபோனேன் நான்
கோதைதசிறுமாதின் கொடுங்கரம்ரெண்டும்வெட்டி
தண்டலையிலாரோ தள்ளிவிட்டார்பைங்கொடியை
கண்டுநான்கொண்டேகிக் கலியாணஞ்செய்துகொண்டேன்
மன்றல்புரிந்து மகிழ்ந்திருக்கும் நாளையிலே
சண்டைக்காய்ரோமைநகர் தலைவனேடேகலுற்றேன்
இந்தரெண்டுபாலரையு மீன்றெடுத்தாளோர்சூலில்
மைந்தர்பிறந்தசெய்தி மாதாபிதாவெனக்கு
காகிதஅஞ்சல்விட்டார் கண்டுமகிழ்ந்தந்நேரம்
தாயும்பாலரையுந் தாபரித்துக்கொள்ளுமென்று
மாதாபிதாவறிய மாறிவிட்டசன்னதந்தான்
ஏதொன்றும்நானறியேன் இடையிலுள்ளோர்மாருடி
தாயும்புதல்வரையுந் தலையறுத்துக்கொல்லுமென்று
காகிதம்போய்ச்சேர்ந்து காதலியும்பாலரையும்
கைவாளாற் கொல்லாமற் கடுவாய்ப்புலிவதைக்க
தையலிருபாலரையுந் தண்டலையிற்றள்ளிவிட்டார்
இந்தநடத்தையெல்லாம் யானறியாதிருந்து
வந்தேனேஎன்னூர்க்கு வழிமேல்வருகையிலே
ஏவலுக்குபோனமகன் இன்னம்வரக்காணேமென்று
தாபமாயோர்நிருபந் தந்தையார்விட்டாரெனக்கு
இடைவழியில்நான்வரவே ஏவலன்கொண்டுவந்த
கடுதாசிகாட்டியபின் கண்டறிந்தேன்காரியத்தை
எண்ணடங்காசஞ்சலத்தா லிருந்தழுதேருமல்
கண்ணுறக்கமற்று கவைபூண்டிருக்கையிலே
அத்தனன்னை எந்தனுக்கு ஆனபுத்திசொன்னதெல்லாம்
சற்றும்மனந்தேருமல் சஞ்சலமுற்றேயிருந்தேன்
மாறியவரெந்தனுக்கு மனைவிமைந்தர்மூவரையும்
வேறிட்டவர்கழுத்தை வெட்டாமல்கொய்யாமல்
குவட்டிற்புலிக்கிரையாக் கொண்டுவிட்டோமென்றுரைத்தார்
ஆகபடம்வாராது ஆண்டவர்காப்பாரெனவே
தேடிவந்தேன் தண்டலையில் தேவியையும்பாலரையும்
நாடிஇங்கேகண்டாக்கால் நானபோவேன் ஊர்நோக்கி
காதலியும்பாலரையுங் காணுதேபோனுக்கால்
மாதவனேஎந்தனுக்கு மலைக்குகைதான்தஞ்சமென்று
அண்ணல்பிலேந்திரர்தான் அழுதழுதுசொன்னவுரை
பண்ணவனுங்கேட்டிரங்கி பார்த்திபனைக்கண்துடைத்து
மங்கைசவுந்தரியாள் மாமுனிக்குமுன்னுரைத்த
சங்கடத்துக்கொப்பாக தலைவனுரைத்ததினுல்

மன்னன்மனதிலொரு வஞ்சகங்களில்லையென்று
தென்னன்முகம்நோக்கிச் செப்புவார்மாதுறவோன்
மூவரையுங்கொல்லுதற்குமுன்னே வந்தசன்னதந்தான்
காவலனே நீயுரைத்த காரியங்களென்றெண்ணி
மன்னவனேஉன்னுடனே மறைவாகச்சொன்னேன்நான்
உன்னுடையதேவிமைந்தர்க் கொருதீங்குமில்லாமல்
கற்குகையில்வாழுகிறார் கண்டுவந்தேனென்றுரைத்த
சொற்கேட்டுமன்னவனும் துறவோனைசென்றுவி
ஆவலுடன்அங்கலிப்பாய் அறத்தோன்கைமுத்திசெய்து
தாவிமுனிசடத்தை தாங்கிடுவார்நேர்ந்திடுவார்
கேட்டுமகிழ்ந்திடுவார் கிலேசம்மெத்த பூண்டிடுவார்
காட்டில்தவத்தோனை கனமுடனேதான்வாழ்த்தி
மாதவனேமன்னவனே மனத்துயரந்தீர்த்தவனே
காதலிபாலரையுங் கண்டுவெகுநாளாச்சே
இன்னம்இருப்பாரோ என்கண்ணினுற்காண்பேனே
முன்னமேகண்டீரோ முடுகஇப்போகண்டீரோ
அன்னப்புசிப்பவர்க்கு ஆர்கொடுப்பார்மன்னவனே
தினுண்டிருப்பாரோ தின்குறைகளேதுமுண்டோ
பண்ணவனேநானடியேன் பாலரையுந்தேவியையும்
கண்ணிலேகண்டுகொள்ள கற்குகையைக்காட்டீரோ
ஆவலாயங்கலிப்பாய் அதிகபெருந்தாபமுமாய்
காவலன்பாலரையுங் காதலியையுங்காணவென்று
தாபமாய்கேட்டாலும் சவுந்தரியாள்பாலர்பட்ட
நாவுக்கடங்காமல் நடந்தநவஞ்சாற்றுமல்
ஏந்தலும்நம்புவனே ரிஷியுரைக்கும்வாசகங்கள்
கர்த்தனேஉன்னுடைய காதலியும்பாலரையும்
மெத்தஇடராக்கி மேதினியில்மானிடர்கள்
தண்டலையிற்கூட்டித் தள்ளிவிட்டநாள்முதலாய்
உண்டிருக்கநீனுமற்று ஒதுங்கத்தலமுமற்று
அள்ளாடும்வேளையிலே அலகைவந்தெழும்புகையில்
உள்ளமதுசோராது உடையகர்த்தன்தன்காத்தார்
கடிக்கவேஓடிவந்த கடுவாய்புலிமிருகம்
அடுக்கவராதபடி அகற்றிவிட்டாராண்டவனர்
கூடிக்குழந்தைரெண்டும் குவட்டுக்கல்மேலுருண்டு
கேடுற்றமங்கையரும் கெபியில்நின்றுதத்தளிக்க
கோதைபுலம்புவதும் குழந்தைஅழுகுரலும்
காதலாய்கேட்டுவந்தே கனிமொழியாள்பாலரையும்
பார்த்தேமனமிரங்கி பாலர்தாய்தன்துயரை
காத்தேநான்இந்தமட்டும் கானைரெண்டுந்தாயுடனே
கூட்டிக்குகைசேர்த்துக் கும்பிக்கிரைகொடுத்து
காட்டில்துணையிருந்தால் கற்புநிலைக்கினமென்று
மறுகுகையில்நான்போனேன் மாதர்புதல்வர்க்கும்

பொறுக்கப்பட்டாத்துயரால் பொன்னுலகைத்தானேக்கி
அழுதுமன்ருடிநின்ருள் அன்னைமரியுஞ்சுதனும்
முழங்கியவாச்சரியம் மோட்சத்தின்பாவனையும்
கூடிஅப்போஸ்தலரும் குலவானேர்சம்மனசும்
வாடிமலைக்குகையில் வந்திறங்கிமூவருக்கும்
அருந்தக்குறையாத அப்பமொன்றுகையளித்து
தெரிவையற்குரெண்டுகையும் தேவமாதாதான்வளர்த்து
மூவர்சலிப்பகற்றி மோட்சத்தேரேகியபின்
ஆவலாய்நானவரை ஐந்தாறுநாட்கழித்து
காணப்பிரியமுற்று கற்குகையிற்போய்ப்பார்த்தேன்
ஆணிருவருந்தழைத்து ஆயிழைக்குங்கைவளர்ந்து
சாயலுருமாறித் தாய்மகவங்கிருந்தார்
ஞாயமறியாமல் நான்திகைத்தவேளையிலே
ஏந்திழையாளோடிவந்து என்னிருபாதந்தொழவே
சாந்தகுணமுடைய தையல்நீயாரென்றேன்
அறத்தோனே நாங்கள்முன்னே அந்தவனக்கெபியில்
முறையிட்டுநிற்கையிலேமூவரையும்நீர்கடத்தி
இக்குகையிற்கூட்டிவிட்டு எங்கள்பசிஆற்றி
மிக்கஉதவிசெய்த விமலனேநீருமென்ருள்
உள்ளகதைசரிதான் உனக்குமேகைவளர்த்துப்
பிள்ளைகளும்வளரப் பெலனூர்கொடுத்ததென்றேன்
என்னையும்பாலரையும் இக்குகையில்கூட்டிவைத்தீர்
அந்நாள்முதலடியாள் அருந்தவொருவழியுமற்று
பாலரும்நானும் பசிபொறுக்கமாட்டாமல்
மேலோகம்பார்த்தடியாள் வேண்டிநமஸ்கரித்தேன்
கன்னிமரிஆஞ்சுகளும் கர்த்தர்அப்போஸ்தலரும்
எனக்குஇருகைவளர்த்து இரைதந்தாரென்றுரைத்தாள்
புசிப்பிந்துகைவளர்த்த பொன்னுலகோர்வர்ணியத்தை
நிசமாகச்சொல்லுமென்றேன் நேரிழையெல்லாமுரைத்தாள்
அன்னைமரிசேகரத்தோர் அடையாளம்நான்கேட்டு
இந்நிலத்திலுங்களுக்கு மினிக்குறையொன்றில்லையென்று
பிரிந்துகொஞ்சநாளாச்சு பிலேந்திரனேஉன்னுடைய
சிறுபுதல்வர்தேவியரும் சேர்ந்தகுகைகாணவென்ருல்
மன்னவனேவாருமென்று மாதவத்தோன்முன்னடக்க
தென்னவனுஞ்சேவகரும் சேர்ந்துரிஷியோடே
கூடத்தொடர்ந்தோடி குவட்டிலொருமறைவில்
வாடியும்மேடைகளும் வளர்ந்தமுள்ளுக்காடுவிட்டு
முனிரிஷிமுன்னிருந்து மூவருக்குங்கையளித்த
வனிதைபுதல்வருமாய் வளர்ந்திருக்குங்கற்குகையை
மன்னன்பிலேந்திரர்க்கு மாதுறவோன்கைநீட்டி
சொன்னவுடனே துரைமன்னன்கண்டுவிட்டான்
கைநீட்டிமாதுறவோன் கற்குகையைக்காட்டிடவும்

மெய்தளர்ந்துமன்னவனும் விரிந்தகையோடங்கலித்து
அங்கலித்தே ஆவலுடன் அழுதுவிழி ஆறோட
பங்குகெபியதனில் வருத்தமுடனுட்புகுந்து
அஞ்சிபயந்து ஆதரவற்றேஇருந்த
மங்கையையும்மைந்தரையும் மாபிரியத்தோடணைத்து
தேவியைச்சேர்த்தாவிச் சென்னிமுத்திகைமோந்து
ஆவிப்புதல்வரையும் அத்தன்மடியிருத்தி
பாலரைமுத்திசெய்வார் பார்த்துப்பார்த்தேங்கிடுவார்
மனைவிமுகம்பார்த்து மாறுதசஞ்சலமாய்
நினைவில்நினைத்தே வெகுநேரம் விழிகலங்கி
காதலிதன்கரத்தைக் கழுத்தோடரவணைத்து
பாரியாள்பாலரையும் பார்த்தழுதங்கென்சொல்வார்
ஐயையோதேவியரே என்அருமைக்குமரர்களே
வையகத்திலுங்களுக்கு வந்தஇடிவல்லிடியோ
தாயும்புதல்வரையும் தற்காத்துக்கொள்ளுமென்று
காகிதம்நான்விடவே காசினியோர்மாறுடி
மாளிகைக்குள்ளிருந்த மனைவியையும்மைந்தரையும்
வாழ்ந்திருக்கவொட்டாமல் வனவாசம்போக்கிவிட்டார்
மனைவிமனம்பதற மலைமேலுருண்டீரோ
தாய்மருகபிள்ளை ரெண்டும் தண்டலைமேலுருண்டு
காயமெல்லாந்தோலுரிந்து கடினஅவஸ்தையுற்று
பாலருந்தேவியரும் பட்டஉபத்திரவம்
காவலனுங்கேட்டுடனே கண்ணீர்சொரிந்தழுதார்
மாது இருந்தழவே மாசனமுங்கூடிஅழ
ஆதுலர்கண்டழவே அறத்தியருந்தானழவே
அங்கலித்தேஎல்லாரும் அழுதமர்ந்துநின்றாலும்
மங்கையாறுமல் மன்னர்குரல்மாறுமல்
தாங்கியபுதல்வரையும் தையலையும்பார்த்துமன்னன்
ஏங்கிசலித்திருந்து புலம்புவாராம்
தேடக்கிடையாதஎன் செல்வரேதேவியரே
நாடாண்டுநாமிருந்து நாள்தோறும்வருதற்கு
சாதங்குவித்துவைத்துச் சாப்பிடுவாரில்லாமல்
ஆதுலர்க்காளனுப்பி அழைத்தேஅசனமிட்டு
தூங்குமஞ்சம்மீதாங்கிச் சுகத்தோடிருந்தவர்க்கு
நீங்காத்துயரம் நெடுநாளாய்ப்பட்டினியோ
எத்தனைநாள்பட்டினியா லிருந்தழுதுசோர்ந்தீரோ
அத்தனரசாளஎன் அரிவைமைந்தர்க்கிவ்வினையோ
கூடமுஞ்சாவடியும் கொட்டாரமங்கிருக்க
வாடிக்கொடுகி வனத்திருந்துசோர்ந்தீரோ
காற்றுவெயில்பனியில் கல்மேற்படுத்தீரோ
பார்த்துகுழந்தைரெண்டும் பாறையின்மேலுருள
அட்டைகடிக்க அரணைபுழுக்கடிக்க

நட்டுவக்காலிகொட்ட நச்சுக்கொசுகடிக்க
அஞ்சுமொன்றுமென்னவென அறியாதபேர்களுக்கே
வஞ்சனைசெய்தவர்கள் வளர்ந்துதழைப்பாரோ
தேனுலகைநாளுளத் தேவியர்க்கும்பாலருக்கும்
மாநிலத்தில்வஞ்சம் புரிந்தோர்விளங்குவாரோ
வம்பாகதேவிமைந்தர் வனவாசம்வந்தவிதம்
வெம்பிகொதித்தழுது வேந்தன் துயர்மாறுமல்
கணவனழுதகண்ணீர் காதலியாள் தான் துடைத்து
துணைவனுக்குநல்லபுத்தி சொல்லிமனவிசனம்
தேறவைத்துதேவியரும் செப்புவாள்காந்தனுக்கு
மாறுத்துயர்பூண்ட மணவாளாஎன் துரையே
எங்களுக்காயித் துயரம் எண்ணடங்காச்சஞ்சலமாய்
அங்கலிக்கவேண்டாம்நீர் அடியாரைஆளாக்க
ஆண்டவர்சித்தம் அரண்மனையைவிட்டகற்றி
காண்டாவனத்திருத்தி கற்குகையிலேவருத்தி
கரந்தந்துமோக்ஷத்தின் காட்சிநன்மைகையேற்றேன்
பரகதியைஇங்கிருந்து பார்த்தேன்களிகூர்ந்தேன்
கட்டத்தைவிட்டகர்த்தர் கதிமெத்தகையளித்தார்
கொட்டாரத்துள்ளிருந்தால் குறைந்தகரம்நீண்டிடுமோ
ஒன்றுனகர்த்தன் ஒருகுறையுமில்லாமல்
நன்றுக்கிக்கொண்டதனுல் நலமல்லால்நட்டமில்லை
ஆனதினுல்என் துணைவா அங்கலிக்கவேண்டாம்நீர்
வானுதிசெய்தநன்றி மனதில்மறவாதிருப்பீர்

## ஞானசவுந்தரியும் குழந்தைகளும் பிலேந்திரனும் தன் அரண்மனை திரும்புதல்

இப்படியேதேவியரும் ஏந்தலுக்குசாற்றுமுறை
ஒப்புக்கொண்டேதலைவன் உற்றதுயர்நீங்கி
அருகில்நின்றகட்டியனை அரசனழைத்தென்சொல்வார்
ஒருசணத்திலொற்றனே நீ ஓடிஎசித்தூர்சேர்ந்து
காதலியும்பாலரையும் கற்குகையிற்கண்டசெய்தி
மாதாபிதாவுக்குரைத்து மாறிவாவென்றுரைத்தார்
ஏந்தலுரைகேட்டு ஏவலனெசித்தூர்போய்
காந்தன்சிமியோனை கட்டியனுங்கைதொழுது
தென்னவனேஎங்களுட் சிமியோன் நராதிபனே
மன்னவனேஉம்முடைய மைந்தனுடதேவியையும்
சிறந்தரெண்டுபாலரையும் தேறவிட்டோர்நாங்கள்சென்று
மறக்காதசிந்தையுடன் மலையெங்குந்தான்தேடி
காணுதலைமலைத்துக் கரங்காலுடலயர்ந்து
வாணுள்மறுதலித்து வானவரைமன்றுடி

தேடியெங்குங்காணுததால் திரும்பிவழிகொள்ளுகையில்
வாடிமலைக்குகையில் வந்திருந்தவோர்தவசி
மாதர்புதல்வரையும் மலையில்விட்டநாளையிலே
ஆதரித்துமூவரையும் அன்றுமுதல்காத்தமுனி
மாதுறவோனெங்களையும் மலையில்நிற்ககண்டணுகி
ஏதுநீர்வந்தகவ்வை இன்னதென்று சொல்லுமென்ருர்
பிலேந்திரராசருட பிள்ளைரெண்டுதேவியையும்
மலையிலேதேடிவந்தோம் மாதவனேஎன்றுரைத்தோம்
முன்னமேஞானியரும் மூவரையுங்காணேமென்று
பின்னுலேமன்னவனும் பேசுமொழிகேட்டறிந்து
கோதைரெண்டுபாலரையும் குகையிருக்கக்கண்டேனென்று
மாதுறவோன்தான்மகிழ்ந்து மறுத்துரைத்தாரெங்களுக்கு
மூவரையும் முன்னுள் முடுக்கிவிட்டநாளையிலே
தாபரித்துகாத்தமுனி தாயும்புதல்வரையும்
குகையிலேசேர்த்துவிட்டு கும்பிக்கிரைகொடுத்து
தவசிகற்புக்கினமென்று தானுமப்பாலேகியபின்
அன்னைமைந்தர்மூவருக்கும் அருந்தவொருதன்மமற்று
பொன்னுலக விண்ணேக்கிப் பூவையும் புலம்பினதால்
ஆஞ்சுளர்ச்சிஷ்டோர் அன்னைமரியுஞ் சுதனும்
வாஞ்சையோடங்குவந்து வனிதையர்க்குகைவளர்த்து
புசிக்கக்குறையாத போசனமுங்கையளித்து
பசிக்களையுந்தீர்த்துவிண்ணேர் பரலோகஞ்சேர்ந்தபின்
அறத்தியரும்மாறிவந்து அறிந்துவந்தகாரணத்தை
குறிப்பாகவெங்களுக்கு கூறியபின்மாதுறவோன்
குழந்தைரெண்டுதாயிருந்த குகையைக்காண்பித்துவிட்டார்
விழிகள்ரெண்டுமாருகி வேந்தனேஉன்புதல்வன்
காவிற்குகைபுகுந்து காதலியும்பாலரையும்
ஆவியேசேர்த்து அழுதுதுயர்பூண்டு
கணவனுங்காதலியைக் கண்டுமனமகிழ்ந்து
குணந்திரும்பிமன்னனென்னைக் கூறவிட்டாருங்களுக்கு
அனுப்பிவிட்டசெய்தியெல்லா மண்ணலேநானுரைத்தேன்
இனிநான்பயணமென்று ஏவலனுந்தான்நடந்தான்
கட்டியன்செப்புமுரை காவலன்கேட்டயர்ந்து
பட்டுவெட்டிசுட்டகட்டை பாரில்தழைத்ததுபோல்
அட்டகிரிகுவட்டில் ஆக்கிவிட்டமானிடர்தான்
திட்டமுடன்பிழைத்து திரும்பிவரக்காண்பதில்லை
ஆச்சரியந்தானிதுபோல் அம்புவியிற்காணேமென்று
கூச்சலாய்மன்னவனும் கொண்டாடிக்கொண்டாலும்
சந்தோஷமுண்டு சலிப்பும்மனதிலுண்டு
முந்தினகாகிதத்தை மோசமென்றுதள்ளாமல்
அஞ்சலனுரையைநன்ருய் ஆராய்ந்தறியாமல்
வஞ்சமனமாச்சே மகவர்முகம்பாராமல்

தாய்மருகப்பிள்ளைரெண்டை தண்டலையில்தள்ளிவிட்டேன்
ஞாயமறியாமல் நான்பாவிஆனேனே
சற்றுமிரங்காமல் தாயோடேபிள்ளைகளை
பற்றித்துரத்திவிட்டேன்பட்டதுயர்பார்த்திருந்தேன்
என்பேரில்குற்றமுண்டாம் ஏழுப்பெரும்பிழைதான்
பின்பற்றிவந்த பிழைகளென்றால்நீராதே
தென்னவனுமிப்படியே தேறுமல்அங்கலித்து
அன்னைமைந்தர் மூவரையும் அடவியிலேதேடவிட்ட
தலைவனும்ஆசனமும் சடைந்துநிற்ககேட்டுமன்னன்
பலகாரமுண்டுபண்ணிப் பாலருக்கும்பாவையர்க்கும்
சுமடுகட்டி கற்குகைக்குத் தீவிரமாய்த்தானனுப்பி
அமடுபட்டங்கிருக்கும் அன்னைமைந்தர்மூவருக்கும்
சிவிகையுந்தண்டிகையும் சுமக்கசேவகரும்
குவட்டுக்கனுப்பிவைத்தார் கொற்றவனுஞ்சிமியோன்
தன்னேடெசித்தார் சனத்தைச்சணம்வருத்தி
மன்னரரண்மனையும் மலைக்குவடுமோர்நிறமாய்
மேடுபள்ளந்தான் நீக்கி வேலிமுள்ளுக்காடுவெட்டி
நாடுமுதல்காடுவரை நல்லபந்தல்தான்போட்டு
பந்தலிற்பூதூக்கிப் பலவாய்அலங்கரித்து
வந்தசனத்தோரை வருத்திஅமுதளித்து
இடம்பெரியராச்சியத்தில் இன்பமாய்ச்சத்திரங்கள்
மடங்கட்டிநீர்வார்த்து மாதுளைநட்டுவைத்து
பச்சைக்கொழுந்துநட்டுப் பாவனையாய்இஞ்சிநட்டு
நற்சீரகம்பாவி நறும்வாசனைத்தூவி
மஞ்சளுள்ளிதோட்டமுடன் வாடாப்பூத்தோட்டம்வைத்து
கஞ்சாவுடன்வாழைதெங்கு கமுகும்பலாவும்வைத்து
நாடுமனைதெருவும் நன்றாய்அலங்கரித்து
கூட்முஞ்சாவடியுங் கொடிதூக்கிபூதூக்கி
காட்டுப்புலியோநாய் கடுவாய்க்கிரையாக
கூட்டிக்குவட்டில்விட்ட குழந்தைதாய்மூவரையும்
வானவர்கள்காப்பாற்றி வாராரரமென்றசெய்தி
மானிடர்கேட்டறிந்து மாகோடிமாசனங்கள்
காணவந்துநிற்போரும் கர்த்தன்சிமியோனிடம்
வீணையுந்தம்பூரும் வெங்கலடம்மானமுடன்
கொடியுங்கொடிவிருதுங் கோலவர்ணத்தண்டிகையும்
வெடியோரிடிமுழங்க வேந்தனெழுந்தருளி
கூடியமாசனமுங் கொற்றவனும்நாடியொன்றாய்
வாடிக்கெதிராக வழிநோக்கிச்செல்லுகையில்
தென்னன்பிலேந்திரரும் தேவிமைந்நர்சேவகரும்
முன்னேகுகையிருந்த முனிபதத்தைஆசரித்து
பின்னாலேதண்டிகையில் பிள்ளைரெண்டைதானேற்றி
மன்னவனுந்தேவியரும் மற்றுமுள்ளோருங்கூடி

நன்னயமாயூர்தனை நாடிப்பிரபலமாய்
தேடிஎசித்தார் திசைநோக்கிச்செல்லுகையில்
கூடிவெகுசனமும் கொலுவாய்சிமியோனும்
போறவழிக்கெதிரே பூவையருங்கால்நடையாய்
வாறதுகண்டுவழிக்கெதிரே போறமன்னன்
தண்டிகையைவிட்டிறங்கித் தரையில்நடந்துசென்று
கண்டுமருமகளைக் கரத்தைரெண்டுந்தாவி
வாரிமுகந்தணைக்க வனிதைமன்னர்பாதமுத்தி
ஒரிரண்டுபாலரையும் உயர்வேந்தன்சேர்த்தணைத்து
தாங்கிமடியில்வைத்துத் தலைவனுங்கண்ணீர்சொரிந்து
ஏங்கிஅழுதுமன்னன் ஏருப்பெரும்பாவத்தை
ஏற்றிவைத்தேனென்றலையில் எங்கேபோய்நான்தொலைப் [பேன்
பார்த்திரங்காப்பாவி பழிகாரனானேனே
அடியாரடித்துதைக்க அயர்ந்துமண்ணிற்சோர்ந்துவிழ
உடலயர்ந்துதள்ளாடி உணர்வற்றுநீர்நடக்க
கண்டுஇரங்காமல் கடுவாய்முன் நீக்கிவிட்டேன்
உண்டோவெனைப்போல் உலகிற்பெரும்பாவி
தாயோடேமைந்தருக்குஞ் சற்றுமிரங்காமல்
தூயவனே நான்புரிந்த தோஷமென்னைச்சாராமல்
என்பிழையை நீபொறுத்து ஏகனைமன்றாடுமம்மா
அன்பாய்ச்சிமியோனு மழுதழுதுசொல்லுமுறை
மருமகளுங்கேட்டிரங்கி மாமன்முகம்பார்த்துரைப்பாள்
அரசர்துரைகோவே அரையாச்சிங்காசனரே
எங்களுக்காய் அங்கலித்து இத்துயரம்பூணுவதேன்
பங்கமற்றுநானிருந்தேன் பார்த்திரங்கிஎம்பரனார்
அரண்மனையைவிட்டகற்றி அன்றுவனத்திருத்தி
கரந்தந்தார்மோட்சத்தின் காட்சியெல்லாங்கண்டுகொண்டே [ன்
சோதனையைவிட்டகர்த்தர் சுகசோபனம்புரிந்தார்
வேதனைப்பட்டதினால் வெகுமானம்பெற்றுவந்தேன்

## அரண்மனையில் ஞானசவுந்தரிக்கு வரவேற்பும் மரியாதைகளும்

சஞ்சலிக்கவேண்டாம்நீர் சலிப்பாறுமென்றுரைத்தாள்
கொஞ்சுகிளிமொழியாள் கூறுமுறைகேட்டுமன்னன்
நெஞ்சுதெளிவாகி நீங்கள்பின்னால்வாருமென்று
அஞ்சாமலண்ணல்துரை அரண்மனையில்முன்தோன்றி
மாளிகைக்குள்புகுந்து மாநிதியம்தான்வாரி
நாழிகொண்டுதானளந்து நடுவாசலிற்குவித்து
வாடிக்குகையிருந்து வாரவரைத்தான்நிறுத்தி
கூடத்தின்வாசல்முன்னே குவித்ததிரவியத்தை
தாயும்புதல்வருட தலைமேல்வாரிச்சிதற
பாவைபார்பரம்மாள் பைங்கொடியாளங்கலித்து

செங்கண்விழிஆருகிச் சேயிழையும்வந்தாவி
அங்கம்நடுங்கிடவே ஆவலாய்ச்சென்னிமுத்தி
பார்த்திரங்காப்பாவி பழிகாரிநான்தானே
கோத்திரத்தைகொல்லவிட்ட கொடும்பாவிநான்தானே
தாயோடேமைந்தர்க்கும் சற்றிரங்கா நிஷ்டூரி
ஞாயமறியாமல் நானிருந்ததீவினையால்
அன்னையும்மைந்தரையும் அடித்திழுத்துப்போகையிலே
கன்னெஞ்சிபார்த்திருந்தேன் கண்டிரங்கா நின்றேனே
காகிதத்தின்வாசகத்தை கபடமென்றறியாமல்
தாயும்புதல்வர்க்கும் சதிமானம்செய்தேனே
ஐயையோ நான்புரிந்த அநியாயபாதகத்தால்
மெய்யயர்ந்துவாடி வெகுதுயரம்பூண்டீரோ
இரைக்கலைந்துசோர்ந்தீரோ இடுக்கண்கள்பட்டீரோ
அரியமலைக்குகையில் அடைபட்டழுதீரோ
மருமகளே நாங்கள்செய்த மாகொடியகுற்றமெல்லாம்
சுருதியைமன்றாடியெங்கள் தோஷத்தை நீக்கிடம்மா
இன்பமாய்பார்பரம்மாள் இரக்கமாய்ச்சொன்னமொழி
அன்பாய்மருமகள்கேட் டகமுருகியென்சொல்வாள்
மாமியரேஎன்தாயே மகாராசிமாதாவே
நாமமுள்ளகர்த்தனுக்கு நானொருபாவியம்மா
என்பாவம்நான்தீர்க்க இடரைவிட்டாரேகபரன்
துன்பத்தைவிட்டகற்றிச் சுபசோபனம்புரிந்தார்
கடுவாய்புலிக்கிரையாய்க் காட்டிலே நீங்கள்விட்டீர்
உடையகர்த்தன்சித்தமல்லால் உங்களுடை இச்சையல்ல
மிருகம்வதைத்தருந்த முன்னெம்மைவிட்டீரென்று
உருகிமிகத்ததும்பி உள்ளம்பதருதீர்
மருமகளும்மாமியர்க்கு மனந்தேறபுத்திசொல்லி
திரும்புவமையொன்று செப்புவாளம்மானை
முன்னுளொருமுனிதான் மோசம்போகாதமொழி
எந்நாளுஞ்சொன்னதுபோ லிறைவனைப்பார்த்துரைப்பாள்
அறவோனைத்தான்பிடித்துத் துரைவளர்த்தசிங்கம்முன்னே
இறைவனிரைகொடுத்து எட்டுநாள்மாமுனியை
மிருகம்வதையாமல் முனிவனைக்காத்திருந்து
மறுபடிஎட்டாநாள் மன்னனொருமானிடனை
சங்கைகுறையாமல் தலைவனிரைபோட்டான்
அங்கிருந்தமாமுனியை அகற்றிவெளியாக்கி
பின்னிட்டுபோட்டவனைப் பிடித்தருந்திக்கொண்டதுவே
அன்புள்ளகர்த்தருக்கு அடிமையாய்உள்ளவரை
கடிநாய்புலிஅலகை கடுவாயுந்தீண்டாது
பிடிநிலையற்றவர்கள் பெலனற்றுப்போவார்கள்
இப்படிஒப்புரைகள் எல்லோர்க்குமோதிவைத்து
செப்பரியமன்னன் சிமியோன்அரண்மனையில்

பிலேந்திரருந்தேவியரும் பிதாமாதா வானவரும்
துலங்கியபாலருமாய்ச் சுகம்பெற்றாரம்மானை

## தர்மராஜர் பிலேந்திரரை வரவேற்று உபசரித்தலும் ஞானசவுந்தரியைத் தன் மகளெனக் கண்டுகொள்ளலும்

சுகம்பெற்றிருக்கையிலே தோன்றல்தர்மராசதுரை
பகையிட்டமாற்றானைப் பங்கப்படுத்திவிட்ட
எசித்தார்பிலேந்திரனை இன்னும்வரக்காணோமென்று
உசிதமன்னர்சஞ்சலமாய் ஊணுறக்கமற்று
மாறாத்துயர்பூண்டு மன்னவனுங்கட்டியனை
வாகாயருகழைத்து வள்ளல்துரைஎன்சொல்வார்
ஏவலனே நீபோய் எசித்தார்பிலேந்திரரை
காவலனைக்கண்டழைத்துக் கையோடேவாருமென்று
ஏந்தலுரைகேட்டு ஏவலனுமெசித்தார்போய்
கர்த்தன்பிலேந்திரரைக் கண்டுபாதந்தெண்டனிட்டு
இறைவனேயும்மைஎங்கள் ஏந்தல்தர்மராசருந்தான்
சுறுக்கிலழைத்துவரத் துரையுடகட்டளைதான்
வேந்தரும்மை வெகுநாளாய்க்காணாமல்
சோர்ந்துமனத்துக்கமுமாய்த் துயர்பூண்டாரஞ்சலித்து
கொற்றவனுங்கையோடே கூட்டிவரச்சொல்லிவிட்டார்
கர்த்தனேவாருமென்று கட்டியனுங்கூறலுற்றான்
மன்னனிந்தசெய்திதனை மாதாபிதாவுக்குரைத்து
அன்னைபிதாதேவியரை அனுப்பிவழிகொண்டிளகி
நன்றிருக்கும் எசித்தார்நகர்பதிகடந்து
அண்ணலுங்கட்டியனும் ஆளேவல்பேருடனே
மண்ணுலகைஆளும் மகாராசர்தர்மரிடம்
கூடிநடந்துசெல்லக் கூறவந்தஒற்றன்முன்னே
ஓடியேரோமைசென்று உயர்வேந்தன்முன்னிலையில்
ஈதோஎசித்தார் இறைவர் வந்தாரென்றுசொல்லி
ஓதுமுரைகேட்டு உயர்வேந்தனகங்களித்து
ஆவல்மிகுந்தெழுந்து அரசனெதிர்தோன்றி
காவலனைரெண்டு கரத்தாலுடலாவி
அங்கம்முகமலர்ந்து அகங்குளிர்ந்துஅண்ணல்துரை
சிங்காரமேடையிலே தென்னவர்கள்சென்றிருந்து
பிலேந்திரரைப்பார்த்துப் பெரியதுரைஏதுரைப்பார்
தலைவாஎசித்தாளும் தம்பியேஎன்பிறவி
கூடப்போய்மாற்றானைக் கூட்டங்குலைத்தோட்டி
நாடுசுற்றிவீடுவந்து நம்மைவிட்டுநீர்பிரிந்து
என்னூர்போயும்மிடத்தி லிதோவருவேனென்று
சொன்னீரேஎன்னிடத்தில் சொற்பிசகிஎத்தனைநாள்
இத்தனைநாளுக் கெனைமறந்து நீரிருக்க

கொற்றவனே நானுமக்குக் குறைநடத்திவிட்டேனே
என்னைமறந்தீரோ ஏதுகுற்றமென்பேரில்
உன்னுடையராச்சியத்தில் உள்ளகப்பம்கேட்டேனே
மறுவேந்தர்வீறுகொண்டு மாற்ருன்கள்வந்ததுண்டோ
சிறைகொள்ளை போனதுண்டோ சீர்மைக்குசின்னமுண்டோ
பஞ்சம்படைநோய்கள் பார்தனில்வந்ததுண்டோ
தொஞ்சியிருந்ததுண்டோ துணைக்கேடுதானுமுண்டோ
மாதாபிதாதடையோ மனைவிமறுத்ததுண்டோ
வாதாடிச்சூதுவினை வருத்தினவராருமுண்டோ
அரண்மனைவீடுபடை ஆனதுகள்சேதமுண்டோ
திரவியபொக்கிஷத்தில் சேதமுண்டோதம்பியரே
கள்ளர்நெருங்கிடையால் காசினிக்குசேதமுண்டோ
கொள்ளைபடை வந்ததுண்டோ குடிகளலைந்ததுண்டோ
உனக்குற்றசஞ்சலத்தில் ஒன்றும்ஒழியாமல்
எனக்குத்தான் நீயுரைத்து என்னவென்றுநானறிந்தால்
மனதிலுற்றசஞ்சலங்கள் மாறுமென்ருர்மன்னவனும்
கனமுடையதர்மர் கழறுமுரைகேட்டு
எங்களுக்குவரும் இடர்தீர்ப்பாராதிபரன்
சங்கடத்தைநானுரைத்தால் தாங்குமோதாரணிதான்
கேடெனக்குவந்த கிலேசத்தைக்கேளுமென்று
பாடுதுவக்கி பகருவா ரெசித்தரசன்
புரவலனேஎங்களுட பூர்வகாலந்துவக்கி
பதிவாகமான்வேட்டை படைகூட்டிஆடிடுவேன்
பண்டுநடந்த பழமைதவருமல்
தென்றிசையில்நானுஞ் சிறுப்பமுள்ள நாளையிலே
கூடிப்படைசேர்த்துக் குவடேறித்தங்கிநின்று
வாடியில்மானடித்து வரும்வேளைஓர்மடந்தை
அட்டகிரிமேலே அங்ககரம் இரண்டில்லாமல்
வெட்டிக்காயமுமாய் வெண்ணுரையாய்கொப்பளித்து
உணர்வற்றிருந்தவேளை உயிர்தேற்றிஊர்சேர்த்து
மணம்புரியும்நாளையிலே மறுமாதரைவெறுத்து
கரம்ரெண்டில்லாதவளைக் கலியாணம்நான்முடித்தேன்
மருவலர்கோத்திரத்தில் மாதவத்தியாமிவளை
வதுவைசெய்து நாங்களொள்ருய் வாழ்ந்திருக்கும்நாளையிலே
புதல்வியரால்நீர்சலித்து புலம்புதுயராற்றவந்தேன்
மனத்துயராற்றுமந்நாள் மாற்ருன்படைபொருத
முனைப்போருக்குநான்வரவே மூன்றுதிங்கள்தேவிகெர்ப்பம்
பொருதுகளம்விட்டுப்பிரிய முன்னேதேவியர்தான்
ஒருசூலில்ரெண்டுமைந்தர் ஒருமிக்கப்பெற்றசெய்தி
அன்னைபிதாவும்மகிழ்ந்து அஞ்சல்விட்டார்ரெந்தனுக்கு
பின்னுலொருதிருபம் பிள்ளைரெண்டுந்தேவியையும்
ஆதரித்துக்கொள்ளுமென்று அஞ்சல்விட்டகாகிதந்தான்

காதலியும்பாலரையும் கழுத்தறுத்துக்கொல்லுதற்கு
குற்றமெத்தவைத்தெழுதிக் கொலைநிருபஞ்சேர்ந்ததினால்
அத்தனன்னைதாய்மகவை அடவியிலேபோக்கிவிட்டார்
தேவிமைந்தர்காடுறைந்த செய்தியறியாமல்
ஏவல்படையைத்துரத்தி என்னூர்க்குசெல்கையிலே
காதலியும்பாலரையும் கழுத்தறுத்துக்கொன்றேமென்று
மாதாபிதா நிருபம் வழியிலேகண்டவுடன்
ஆருத்துயர்பூண்டு அழுதுவிழிஆருகி
மாருத்தவசிருக்க மலைக்குகைக்குப்போகையிலே
அத்தனன்னைவந்தாவி அழுது அலமலைத்து
புத்திமெத்தச்சொன்னாலும் பீடைகவ்வைதீராமல்
மாதாபிதாமறுத்து மைந்தனேஉன்னுடைய
காதலியும்பாலரையும் கண்ணெதிரேகொல்லாமல்
குவட்டுப்புலிகடுவாய் கொன்றருந்தவிட்டோமென்றார்
அட்டகிரிக்குவடும் அடவிமலைச்சோலையெல்லாம்
தட்டளிந்துதேடித் தகைபூண்டவேளையிலே
மனைவிபுதல்வரையும் மலையில்விட்ட நாளையிலே
முனிகண்டுமூவரையும் முன்னமேகாத்தரிஷி
கூட்டச்சனத்தில்வந்து குழந்தைதாய்செய்திகளை
கேட்டறிந்துமாதுறவோன் கெபியில்விட்டமூபேரும்
புசிக்கத் தன்மமற்றுப் பரலோகம்பார்த்தழுது
ரெட்சிக்கக் கற்குகையில் சேசுமரி வந்ததுவும்
பாவையர்கைவளர்த்துப் பசிக்கப்பமீந்ததுவும்
தேவமாதாவுஞ்சுதனும் தேவார்ச்சிஷ்டோரேகியபின்
அறத்தோனெல்லாமறிந்து அதிசயமெல்லாமுரைத்து
துறவோனுமென்னுடைய துணைவிமைந்தர்வீற்றிருந்த
கற்குகையை என்னுடைய கண்ணிலேகாட்டியபின்
தொல்புவியிலே நடந்த துயரமெல்லாங்கேட்டறிந்து
அழுதமர்ந்தெசித்தூரில் அத்தனன்னைக்காளனுப்ப
எழுந்தருளிதந்தையரும் எதிர்வந்துடன்கூடி
மாளிகையில்தேவியரும் மைந்தரும்போய்ச்சேர்ந்தபின்பு
ஊழியனுமோடிவந்து உரைத்தானுமதுசெய்தி
தரிக்காமலோடிவந்தேன் தர்மரசேஎன்றுரைத்தான்
இறையவனும் பிலேந்திரனு மியம்புமுரையித்தனையும்
அருகேநின்றுகேட்டிருந்த அண்ணல்தர்மரங்கலிந்து
கரத்தால்பிலேந்திரனைக் கட்டியுடலோடணைத்து
தர்மர்சலித்தழுது தலையிலேகையைவைத்து
மறுகிப்பிலேந்திரரும் மனம்பொறுக்கமாட்டாமல்
எண்ணம்மிகப்பூண்டு இருவிழியுமாருகி
கண்ணீர்சொரிந்தழுதுக் கர்த்தர்தர்மரேதுசொல்வார்
எனக்கின்பமுள்ளதம்பி இத்துயரம்நீயடைந்தாய்

உனக்குற்றசஞ்சலமும் உன் துணைவிபாலரையும்
காட்டில்துரத்தி கடுவாய்க்கிரையாக்க
கூட்டியேவிட்ட கொடும்பாவி நானல்லவோ
எனக்குத்துணையாக ஏவலுக்குநீர்வரவே
மனைக்குள்ளேதானிருந்த மனைவிபுதல்வரையும்
என்னாலேவந்த இடரல்லோவென்றழுவார்
உன்னைத்துணைக்கழைத்து ஊர்பயணம்போயிருக்க
பின்னாலேகண்டறிந்து பெண்சாதிபாலரையும்
ஆதரித்துக்கொள்ளுமென வனுப்பிவிட்டகாகிதந்தான்
காதலியும்பாலரையுங் கழுத்தறுக்கவந்தவினை
பாவிநான்செய்தேனென்று பரிதாபங்கொண்டழுவார்
காவலனெசித்தரசன் காதலியாள்பாலருக்கும்
சார்ந்தவினையத்தனையுந் தர்மரசரேதுவினால்
சூழ்ந்ததென்று மன்னர்தர்மர் துயர்பூண்டழுததைத்தான்
அண்ணல்பிலேந்திரரும் அன்புறவேவார்த்தைசொல்லி
கண்ணீர்துடைத்திருத்திக் கர்த்தாவைக்கைகுவித்து
விண்ணோக்கிமாதாவை வேண்டிநமஸ்கரித்து
கோதைரெண்டுபாலர்க்கும் குகையிலேகாட்சிசெய்த
மாதாதிருச்சுதனை மன்றுடித் தான்புகழ்ந்து
ஆச்சரியந்தானிதுவோ ஆகமத்தைக்கேளுமென்று
தாழ்ச்சிபுரிந்து மன்னன் தரணிக்கெல்லாம்விரித்து
வானவர்சோபனந்தான் வரிசைபெற்றோர்வாழியென்று
தானுதிதஞ்சமென்று தலைவரிருபேரும்
அன்னைமரிமாதாவுக் கடிமையென்றர்ச்சனையாய்
பொன்னுரைத்தான்புகழ்ந்து பிரியமாய்த்தர்மராசர்
பெருத்தசிநேகமுள்ள பிலேந்திரரைப்பார்த்துரைப்பார்
உருக்கமுள்ள தம்பியரே உற்றபிலேந்திரரே
என்னாலேநீயுந்தான் இருபாலர்தேவியையும்
சொல்லுக்கடங்காத துயரமெத்தகையேற்றீர்
கையேற்றவுன்புதல்வர் காதலியைக்கண்டுகொண்டு
வையகத்தில்நானவர்க்கு வரிசைசெய்ய ஆசையதால்
இனியசிநேகிதனே நீ எசித்தூர்தனக்கேகி
மனைவியையும்மைந்தரையும் மனச்சோபனமாக
என்னிடத்திற்கூட்டிவர இப்போதே ஏகுமென்றார்
சொன்னமொழிதட்டாமல் துரைபயணமானாரே
ஞானசவுந்தரியும் நலமுடைய பாலர்களும்
வானவர்கையாலே வரிசைநவம்பெற்றசெய்தி
அண்ணல்தர்மர்கேட்டுடனே ஆச்சரியம்பெற்றவனை
கண்ணிலவர்காணவென்று கர்த்தன்பிலேந்திரரை
மாறிஎசித்தூர்க்கு மன்னரனுப்பிடவே
தேறிப்பிலேந்திரரும் தேசமெசித்தூர்சேர்ந்து
புத்திரனுந்தந்தையர்க்குப் புகலுவார்வாசகங்கள்

அத்தனே அன்னையரே அடியேன்போய்ரோமையிலே
தர்மரைக்கண்டிடவும் தலைவர்மெத்ததாபமுற்று
வன்மர்படைசெய்து வந்தூர்போய் இத்தனை நாள்
வாராமலென்னையும்நீர் மறந்திருந்தனுாயமதை
நேராகஎந்தனக்கும் நேசமாய்ச்சொல்லுமென்றார்
வகைவிபரமாக வகுத்துரைத்தேன்செய்தியெல்லாம்
அகமகிழ்ந்தென்தேவியையும் அன்பானமைந்தரையும்
இதமாகக்கூட்டிவர என்னைவிட்டாரென்றுசொன்னார்
புதல்வனுரைகேட்டுப் பிரிதுரைப்பார்தந்தையரும்
மன்னர்தர்மராசருமோ மகள்துயந்திராமல்
தென்னவனுமுன்னுடைய தேவிமைந்தர்காட்சிபெற்ற
நந்நயங்கள்தானறிய நாடிவரவேணுமென்றார்
அன்புற்றேமன்னர் அழைத்துவரச்சொன்னாலும்
போகவுமே ஞாயமில்லை போகாதிருந்தாலும்
ஆகந்தெளியாமல் அரசனுமோ அங்கலிப்பார்
என்னதான் வந்தாலும் இதுவேளை உன்னுடைய
சின்னரண்டு பாலரையுந் தேவியையும் நீகூட்டி
காணமெத்த தாகமுள்ள காவலனைக்கண்டுவர
வேணுமென்று தந்தையரும் வெகுபிரியமாயுரைக்க
மைந்தன் மனமகிழ்ந்து மாதாவைக் கைதொழுது
தந்தைவிடை வாங்கித் தன்மனையாளிடம்போய்
மனைவியரேதேவியரே மன்னர்தர்மராசருந்தான்
உனக்குரெண்டுகைவளர்ந்து ஊண்பொசிப்புமானபல
அதிசயக்காட்சிகளை அண்ணல்தர்மர்கேட்டறிந்து
புதிதாய்காணுதற்கு புத்திரரைத்தேவியரைக்
கூட்டிவாவென்றுரைத்தார் கோதையரேவாருமென்றார்
கேட்டுடனேகிஞ்சுகத்தாள் கிலேசம்மிகப்பூண்டு
கையிழந்தேயிந்தவெகு கஸ்தி துயர்பூண்டு
ஐயையோ இதுவரையும் அன்னையரைப்பேணிநின்றேன்
இப்போதுதந்தையிடம் யான்போனாலேதாமோ
அப்பாமகளென்றறிந்தா லன்னையர்க்குநட்டமல்லோ
ஏகசர்வேஸ்பரனே இறைவாஉன்சித்தமென்று
போகப்பயணமுற்றாள் புதல்வர்கணவருடன்
சேவகரெல்லோரும் சிவிகையுந்தண்டிகையும்
காவலனுங்காதலியுங் காளையருந்தான்கூட
இருந்தபதியிளகி எசித்தூராம்நாடுவிட்டு
விரைவாய்நடந்தவர்கள் வினைவயலூர்காடுவிட்டு
தட்டைத்தடாகம் தருவனமுஞ்சாலைகளும்
அட்டகிரிவிட்டு அலங்காரரோமைபுக்கு
கோட்டைபடி சேர்ந்து கொற்றவனும் முன்னேக
கேட்டுள்ளேபோமென்றார் கெர்வானசேவகர்கள்
மிக்கமனம்வருந்தி மேவிநடக்காமல்

பக்கத்தில் நின்றவனை பார்த்திபனுக்கோதவிட்டார்
ஒற்றன் விரைந்தோடி உயர்துரைக்குத்தானுரைக்க
கேட்டுப்பெரியமன்னன் கிலேசம்மிகப்பூண்டு
தம்பிதலைவனைத்தான் தடைசெய்ய ஆருமுண்டோ
வெம்பிஎழுந்து விரைவாகச் சென்றுமன்னன்
வந்தவர்வராமல் வாசல்தடைசெய்தவனை
முந்தவடித்து முடுகத்துரத்திவிட்டுக்
கன்னிமரிவளர்த்த கரத்தைரெண்டுஞ்சென்றுவி
முன்னமேமுத்திசெய்து முகத்தணைத்துக்கண்ணில்வைத்து
அத்தனென்றுபுத்திரியாள் அறிந்துகொண்டுகால்பிடித்து
முத்திநமஸ்கரித்து முகத்தோடே நீர்கவிழ
தந்தைமகளென்றறியார் தாவிஅவர்கூட்டிவந்து
வந்தவிருந்தினரை வாழ்வாய்பராமரித்து
தங்கரத்தின மேடையிலே சவுந்தரியும்பாலரையும்
சிங்காரமேடையிலே செல்வமுள்ளோரங்கிருக்க
துரைமனது சோபனமாய்த் துரிதமாய்அமுதும்
உருசியுள்ள தீங்கனியும் ஒப்பில்லாபட்சணமும்
நாலாவகைக் கனிகள் நலமாகக்கொண்டளித்து
பாலோடேசீனி பழமும்பிசைந்தூட்டி
அமுதுநிறைவேற்றி ஆடைதுயில் கோடிகொண்டு
சமமாயெல்லோர்க்கும் தலைவன்வரிசைசெய்து
கூறுமுறையால் கொடுத்தேமனப்பூரணமாய்
மாறியேமன்னவனும் மாளிகையினுட்புகுந்து
சவுளிப்பதக்கம் சரப்பளியோடாபரணம்
குவளைப்பணிசிலது கோர்வை பலபணிகள்
பெட்டகத்தோடே யெடுத்து புதல்வர்தாய்மூவர்முன்னே
இட்டமுடன்கொண்டுவந்து எடுத்தணியுமென்றுரைத்தார்
தங்கப்பொன்கோர்வையிலே தாற்பரியமில்லாமல்
எங்களுக்குமிந்தநகை இருக்குமதுபுண்ணியத்தால்
முந்தமலைக்குகையில் மோட்சத்தோர்வந்திறங்கி
தந்தார்வெகுவரிசை தாற்பரியமாயணிந்தேன்
அந்தப்பணியணிய ஆருக்குங்கிட்டாது
இந்தநகைப்பணிதான் எல்லோர்க்குமுள்ளதுவே
பொன்னுடமையின்பேரில் பிரியமில்லைஎங்களுக்கு
என்னுடைமையாக எடுத்துவையுமென்றுரைத்தாள்
அபூர்வமாயெடுத்து அருகேவைத்தபொற்பணியை
உவட்டிவிட்டாளென்றறிந்தே உயர்வேந்தன்சலித்து
பொன்னுடைமைபூணவந்த புத்திரியைநானிழந்தேன்
என்னுடைமை இத்தனையும் எடுத்தணியயாரெனக்கு
அரண்மனைசெங்கோலும் ஆனைபடைசேனைகளும்
திரவியந்தானிங்கினிமேல் தேசந்தானெனக்கு
அயர்ந்துமறந்துமுன்னே ஆறியிருந்தபுண்ணை

வியர்ந்தகத்திகொண்டு வேருக்கிக்கொண்டதுபோல்
ஆகங்குமுறிமன்னன் அழுதுவிழிநீர்சொரிந்து
சேகரத்தைவிட்டே திரள்மான் தனித்ததுபோல்
கைப்பொருளைத் தூறிக்களைந்துவெறுத்தவர்போல்
மெய்யில்துயரம் மிகுந்தே அறச்சலித்து
மகளை நினைத்தங்கலித்து மன்னன்வேருகி
அகத்தில்பலநினைவா லயர்ந்திருக்கும்வேளையிலே
மன்னன்பிலேந்திரரும் மான்வேட்டைபோய்வரவே
கன்னிசிறுபேதை கரங்கள்தறிகாயமதால்
தண்டலையின்மீதே தனித்தயர்ந்து நின்றவளை
கண்டழைத்துஆதரித்து கலியாணஞ்செய்தணங்கின்
சாதிகுலமின்னதென்றும் தந்தைதாய்யாரெனவும்
மாதினிருப்பிட்டும் மற்றும்பலசெய்திகளும்
ஆராய்ந்தறியவென்றே அண்ணல்துரைஎண்ணமுற்று
சீராய்த்தன்நெஞ்சினிலே சிந்திப்பார்காவலனும்
அந்தத்துடியிடையாள் அதிகப்பெருங்காட்சிபெற்று
வந்தெசித்தார்மன்னன் மனைவியுந்தானென்மகளோ
அயல்குலத்திலுள்ளவளோ அறியவேவேணுமென்று
துயர்துக்கமானதெல்லாம் துரைமனதிலுள்ளடக்கி
மெள்ளவெழுந்துமன்னன் விழியும்முகமுகவிழ்ந்து
அள்ளாடிஎசித்தார் அரசனுடதேவியரை
பக்கத்தில் நின்று மன்னன் பார்வைமுகக்குறியும்
மிக்கவதிசயமாய் மெல்லியுடை சாயல்கண்டார்
பாலகியாள் சாயலிலே பாவையருந்தோன்றினதால்
மாலைமுடி வேந்தன் மனப்பிரியமாயிருந்து
கர்த்தன்பிலேந்திரர்தன் காதலியாளானவளை
கொற்றவர் தர்மராசருமே கூப்பிட்டருகிருத்தி
கொஞ்சியவஞ்சிக்குயிலே மடமயிலே
அஞ்சாமலென்னுடனே ஆண்டவர்க்கு தோஸ்திரமாய்
உன்னூருமுன்குலமும் உற்றதந்தைதாய்பெயரும்
சின்னக்குழந்தையிலே செங்கரம்ரெண்டும்வெட்டி
வெட்டிமலைக்குவட்டில் விட்டெறிந்தகாரணமும்
பட்டதுயர்பாடுகளும் பழமையெல்லாஞ்சாற்றுமென்றார்
அத்தனும்புத்திரியை அருகிருத்திஅங்கலித்து
கர்த்தனைக்கொண்டாணையிட்டால் கடரவழியுண்டாமோ
தேவனேகர்த்தாவே திருச்சுதனே ஆண்டவரே
பாவிஇடர்பலதும் பரனேபொறுமெனவே
புத்திரியாள்தந்தையர்க்குப் புகலுவாள்செய்திகளை
அத்தனேபுத்திரிதான் ஆதரையெல்லாமெனது
இந்நாட்டைநீராண்டு எனக்குவயதாறுண்டில்
அன்னைஇறந்துவிட்டாள் அத்தனேபின்னாலே
வேறொருமாதுதனை விவாகம்முடித்தபின்னர்

வாகாயவளிடமே வளர்த்திடென் றுகையளித்து
நாட்டுழவரிட்டபயிர் நட்டமாய்ப்போகுதென்று
கூட்டவிலங்கை குலமறுக்க நீர்போனீர்
தந்தைபரேஉம்முடைய தலைமறைந்தபின்னுலே
பிந்தினதாயினையாள் பேசிவைதுநீர்குலைத்து
கஞ்சித்தண்ணீரியாமல் காலால்மிதித்துதைக்க
ஒஞ்சிப்போய்மஞ்சமதில் உறங்கினேன் தஞ்சமென்று
அந்தராவானதிலே ஐந்தாறுசேவகர்தான்
வந்தேமனைபுகுந்து வாரிமஞ்சத்தோடெனையும்
வாடியிலேகொண்டிருத்தி வாளெடுத்தோங்குகையில்
சாடிஅவர்காலைத் தாவிஆவிப்பிடித்தேன்
கெஞ்சி அழுதவரைக் கேட்டுமன்றுடினதால்
அஞ்சியுயிர்போக்காமல் அங்கரங்கொய்தோடிவிட்டார்
வெட்டினகாய வெறியோடே நான்மயங்கி
அட்டகிரிமேலுருண்டு அயர்ந்துவுயிர் போகையிலே
வேட்டைக்குவந்த எசித்தார் வேந்தனுங்கண்டாதரித்து
சூட்டிமணம்புரிந்து சூல்தரித்தநாளையிலே
கணவர்படைக்குவந்தார் கண்உதிங்களாறதிலே
இணங்கிஒருசூலில் இருசுதனைப்பெற்றெடுத்தேன்
மைந்தனறியவென்று மாமனுர்ஓர்நிருபம்
சந்தோஷமாயெழுதி தனித்தஞ்சலோடவிட்டார்
கடுதாசிகண்டு கணவர்விட்டகாகிதத்தை
இடைவழியில்மாருடி இளையதாய்வேறெழுதி
களவாண்டகள்ளிஎன்றும் கைமாயக்காரிஎன்றும்
இளப்பமுள்ள சாதியென்றும் இழுக்குவசைஆகுதென்றும்
காகிதங்கண்டவுடன் கண்ணிரக்கம்பாராமல்
தாயும்புதல்வரையுந் தலையறுக்கவேணுமென்றும்
மாருட்டமாயெழுதி மாமனுக்குவந்தபின்பு
சிறிமுகம்பாராமல் சினந்தெங்கள்மூவரையும்
மலைக்குவட்டிலா[illegible]விட்டார் மாதுறவோன்புண்ணியத்தால்
சலிப்பாற்றிஎங்களையுந் தவசிகையில்வைத்து
வாடிக்குகையிருந்து வாயிழந்துவாஞனுரை
ஈடேற்றந்தாருமென்று இரங்கிஅழுதிருந்தேன்
தேவமாதாவுஞ்சுதனும் தூயார்ச்சிஷ்டோர்ஆஞ்சுகளும்
மேலுலகம்விட்டிறங்கி மேதினியிலெங்களுக்கு
அருந்தக்குறையாத அப்பமொன்றுகையளித்து
கரமிரவுடுந்தான்வளர்த்து காட்சிதந்துவிண்ணடைந்தார்
சுகமாய்க்குகையிருந்தோம் துணைவர்வந்தெங்களையும்
அகப்பிரியங்கொண்டாவி ஆருந்துயர்பூண்டு
மாளிகையிலேசேர்த்தார் மறுத்திங்கேகொண்டுவந்தார்
நாளில்நடந்தசெய்தி நன்றாய்அறிந்திடுமையா

## தர்மர் உண்மை வரலாறு தெரிந்து சஞ்சலித்துப் புலம்பல்

உள்ளத்தில்பாய்ந்தஅம்பு ஊடுருவிப்பட்டதுபோல்
வள்ளல்மிகவேங்கி வந்தபுதல்வியரை
ஆவிஎடுத்தணைத்து அத்தன்மடியில்வைத்து
தாவியேபாலரையும் தலைவன்மனத்துயரால்
மூவர்முகத்தையிந்தான் முகத்தோடுறவணைத்து
கூவிஅழுவார் குழந்தைரண்டைப்பார்த்திரங்கி
மகளைப்பார்த்தேங்கிடுவார் மதலையைக்கண்டங்கலிப்பார்
அகமகிழ்ந்துநின்றிடுவார் அங்கலிப்பார்சோர்ந்திடுவார்
தேவிஅறிந்தமட்டும் செய்தாளோவென்றழுவார்
பாவிநான்செய்த பழிதானேஎன்றழுவார்
பாருலகிலென்னுடைய பாலகியாள்பட்டதுயர்
ஆரிடஞ்சொல்லி இப்போ தாறிடுவேனென்றழுவார்
பாழ்வினையோஎன்னுடைய பாலகியாள்பட்டதுயர்
எழுதிமுடிந்திடுமோ எனதுதுயர்மாறிடுமோ
ஆறிடுமோதேவிசெய்த மனதுதெளிந்திடுமோ
காதலிஎன்மகளைக் கழுத்தறுப்பாளென்றறியேன்
பாதகத்திவைத்ததீ பற்றியெரியுதையோ
மகளேமணிவிளக்கே மறுவில்லாப்பாலகியே
பகையாகத்தாயிவையாள் பங்கமெத்தகொண்டாளோ
தேட்க்கிடையாத சிறுவர் இருவருந்தான்
வாடிமலைக்கெபியில் வயிறெரிந்துசோர்ந்தாரோ
எத்தனை நாள்பட்டினியால் இருந்தழுதுசோர்ந்தாரோ
புத்திரிக்கன்னைசெய்த புண்ணியமோவென்றழுவார்
பாவிதுரோகி பழிகாரிநிஷ்டூரி
தேவிஒருவஞ்சகந்தான் செய்யாளென்றன்மகளை
நகரில்மிருகமதை நான்கொல்லப்போனதினல்
தவறிழைத்தேன்மகளை சதிசெய்தாள்சண்டாளி
கயிற்றுலேகட்டினளோ கையிரண்டும்வெட்டினளோ
வயிற்றுக்கொடுமைவிட்டு வாட்டிவதக்கினளோ
மறுத்தும்எசித்தூர் மனையிருந்தஎன்மகளை
பொறுத்திருக்கவொட்டாமல் பிள்ளைதாய்மூவரையும்
கொடுத்தஅஞ்சல்மாருடி கொலைநிருபம்வேறெழுதி
பிடித்துபுலிகடுவாய் பொசித்திடக்கொண்டாக்கினளோ
ஐயையோவிந்த அநியாயம்செய்வாருண்டோ
வையகத்தில்தேவியைப்போல் வஞ்சகிநான்காணேனையோ
தாய்மகளைக் கொல்லுதற்கு தாரணியில்கேட்டதுண்டோ
பார்வேந்தன்புத்திரியும் பாலர்பட்டகஸ்தியைத்தான்
தீராமல்மன்னவனுஞ் செங்கண்விழிஆறுேட்
அழுதுதுயர்பூண்டு அங்கலித்துச்சஞ்சலமாய்
தழுவிமகளைமோந்து தந்தைமடியில்வைத்து

ஊக்கமுள்ளபாலரையும் உவப்பாய்முகந்தடவி
ஏக்கந்தணியாமல் இருந்தழுவாரம்மானை

## இளையன்னையை தர்மர் சிட்சித்தலும் அவளது புலம்பலும் கொளுத்தப்படுதலும்

நரபதிதர்மகள் ஞானசௌந்தரியாள்
தரைமீதில்தந்தையர்தாய் தனைப்பிரிந்துதட்டழிந்து
தந்தையிடம்சேர்ந்தாள் தலைவன்சலித்தழுது
பிந்தினதேவியரை பிழைதீர்க்கவே நினைத்து
வேந்தனுந்தான் புலம்பி வேகத்தைஉண்டாக்கி
காந்தனுங்கட்டியனைக் கற்பித்தருகழைந்து
ஒற்றனே நீயும் ஒருநாட்டிற்சென்றோடி
நாட்டுள்ளசோரரையும் நாளுங்கொலைசெய்வோரையும்
கண்டழைத்துவாவெனவும் கட்டியனைஏவிவிட்டார்
விண்டுரைகேட்டவொற்றன் விரைவாகச்சென்றோடி
கொலைஞரைக் கூட்டிவந்தான் கொற்றவர்தர்மராசர்முன்னே
தலையாரிவந்துடனே தர்மரையுங்கைதொழவே
மலையாமல்வேந்தருமே மழுவர்க்கெடுத்துரைப்பார்
மழுவர்களேஎந்தன் மனைவியரைச்சென்றிழுத்து
கரங்காலுடலிறுகக் கயிற்றால்வரிந்துகட்டி
தெருவெல்லாம்போட்டிழுத்துத் தியங்கியவள்மயங்க
பாவியவள்மேலே பழந்துணியுஞ்சுற்றிவைத்து
கூவியேஎண்ணெய்விட்டுக் கொழுத்திடவும்வேண்டுமென்றார்
ஒண்ணுதலும்வெந்து உடம்பெல்லாம்நீறியபின்
என்னுடனேவந்து எதிர்மொழிசொல்லுமென்றார்
புரவலன்கட்டளையால் போயுடனேசேவகர்தான்
அரண்மனைக்குட்புகுந்து அண்ணல்தர்மர்தேவியரை
கரத்தைபிடித்திழுத்து கயிற்றால்வரிந்துகட்டி
நாரியரைரோமையிலே நாலுதெருவும்இழுத்து
சோரைசதைதெறிக்கத் தோகைஅழுதுரைப்பாள்
ஐயையோநானும் அகமுடையான்சொல்மறுத்து
கையேற்றபுத்திரியை கனபங்கம்செய்ததினால்
வையகத்தோர்நகைக்க வந்துதையோவிந்தவிதி
பொய்யெல்லாம்மெய்யாச்சே போறேனேபத்தமதாய்
புத்திசொல்லி புத்திரியைப் பேணிவளர்த்திடென்று
அத்தனெனக்கொப்புவிக்க அநியாயம்செய்தேனே
செய்தவினை அத்தனையும் திரும்பிஎன்னைச்சூழ்ந்ததல்லால்
பொய்நிலையாய்போச்சிலையே பிடித்தணைப்பார்காணேனே
அருமைக்கொருமகளை அன்பாய்வளர்த்திடென்று
புருஷனுரைத்தமொழி புத்தியென்றுகொள்ளாமல்
சிரசுகொய்யவிட்டதினால் தீவினைவந்துதையோ [தால்
கரம்ரெண்டைவெட்டிவந்தோர் கழுத்தைவெட்டிப்போட்டாத

இப்போகொலைமுடித்து எனக்குவினையாச்சுதையோ
அளப்பரும்புத்திரியை அபூர்வமாய்கொண்டதல்லால்
மனைவிஎன்றுசற்றும் மனநிரங்காப்போனாரோ
எனக்கிப்படிவருமென்றெள்ளளவும்நானறியேன்
அகமுடையார்என்பேச்சை அனுசரிப்பாரென்றிருந்தேன்
மகன்முகம்பார்த்ததல்லால் மனைவிமுகம்பார்க்கவில்லை
கழுத்தைஅறுக்கவிட்டும் கரம்ரெண்டும்கொய்துவிட்ட
பழையவினை இப்போவந்து பலித்தபத்தம்போறேனே
முப்பாலமுதுடனே முறையாய்சுகித்துவந்தேன்
தப்பிதஞ்செய்ததினால் சதிமரணம்வந்ததையோ
பழிசெய்யவிட்டதெல்லாம் பழமையாய்ப்போனாலும்
குழந்தைதாய்மூவர்க்கும் கொலைநிருபம்வேறெழுதி
ஒற்றனைஉட்படுத்தி உபாயங்கள்செய்ததெல்லாம்
கூட்டமாய்வந்திப்போ கொலைப்படவும்போறேனே
சுகத்தோடிருக்கையிலே சூழ்ந்துவந்தபேர்களெல்லாம்
அபத்தமுள்ளவேளையிலே ஆரும்வரக்காணேனே
பக்கத்தில்நின்று படைபோல் சூழ்ந்தவரை
இக்கட்டுவந்தால் இரங்கும்பேர்காணேனே
அத்தனும்அன்னையரும் அண்ணர்களும்தானறிந்தால்
இத்தனைகஸ்திபங்கம் இடர்பார்த்திருப்பாரோ
உள்ளவுள்ளநாள்முதலாய் உண்டுண்டபகரித்தோர்
மெள்ளப்போய்செய்தியெல்லாம் விண்டுரைக்கமாட்டீரோ
அன்னைசுற்றங்காணாமல் அபத்தமாய்ப்போறேனே
என்னைநிலைநிறுத்த எனக்குரியோர்காணேனே
சீவனுக்குமோட்சமுண்டால் செத்தாலுந்தோஷமில்லை
பாவத்தைச் செய்ததினால் பாழ்நரகிற்போறேனே
அபத்தமாய்நானிறந்து அடிநரகிற்போவேனோ
பாவத்தைவெளியாக்கி பாவசங்கீர்த்தனம்பெறவே
குருவிடத்திற்போகாமல் கொலைக்களம்போறேனே
நரகத்திற்போறேனையோ நான்செய்ததீவினையால்
இப்படியேபுலம்பி இழுத்துவந்த ஏந்திழையை
அப்பாலொருசேரி அடக்கும்பிணக்காட்டில்
கனங்குழலைக் கொன்றுவிட கட்டைவிறகொடித்து
அனல்வளர்த்துஅக்கினியில் ஆயிழையாள்மெய்யுடலை
இத்துணிபொதிந்து எண்ணெய்மிகவூற்றி
பற்றியவக்கினியில் பாவையரைத்தள்ளிவிட்டார்
தூக்கிஎறிந்தவுடன் துடிதுடித்து தோகையரும்
போக்கினாள்சீவனையும் பொய்ச்சடமும்நீறியபின்
திரும்பத்தலையாரி தென்னவர்க்கு சேதிசொல்லி
இருக்கும்பதிநோக்கி ஏகினார்காணம்மானை

## ஞானசவுந்தரிக்கு நாடு நகர் கொடுத்து பட்டஞ்சூட்டி தர்மர் சந்நியாசம் புகுதல்

புரவலனும் புத்திரிக்கு பொன்னுட்மை நாடுபடை
திரவியமுஞ்செங்கோலும் செல்வியற்குகையளித்து
நாட்டில்விளம்பரமும் நாற்றிசைக்குமோலைவிட்டு
கூட்டிக்குடியோரைக் குமாரத்திக்கொப்புவித்து
மாநிலத்தைத் தற்காத்து மகளேவளர்த்திடென்று
நாநிலத்தில்தர்மவழி நடத்திநிறைறவேற்றி
மகளேநான் போறேனென்று மாளிகையினுட்புகுந்தார்
அகமுடையான்தேவியரும் ஆணமைந்தரும் இருந்து
ரோமாபுரி நாட்டுக் கீனமொன்றும் வராமல்
தாழ்மைபொறுமை தயவுவிசுவாசம்பக்தி
நம்பிக்கையாயிருந்து நாட்டில்மனிதருக்கு
கெம்பாமற்புத்திசொல்லிக் கீர்த்திவழிகாட்டி
மாநிலத்துக்கெல்லாம் மகாராசியாயிருந்து
ஞானசௌந்தரியை நாடெல்லாம்வந்துகண்டு
கட்டளைமீருமல் கற்பனைக்குட்படுத்தி
பட்டணத்தைத் திட்டமிட்டு பதிவாயிருக்கையிலே
பிலேந்திரராசருடை பிதாமாதாவானவர்கள்
மலங்கித் துயர்பூண்டு மருமகளும் மைந்தரோடு
சின்னரெண்டுபாலருமாய்த் திரும்பிவரக்காணோமென்று
மன்னன்சிமியோனும் மைந்தனுக்குமோர் நிருபம்
எழுதிவிட்டவாசகத்தை இன்னதென்றுகேட்டருளும்
குழவிரெண்டுபாலர்களும் குமாரருடன்தேவியரும்
நமதுமனையிருந்து நாடுரோமாபுரிபோய்
இம்மாத்திரம்நாளாய் இதுவரையும்வராததேன்
சன்னதங்கண்டவுடன் தாமதியாதேநீங்கள்
மன்னர்தர்மராசனையும் மனச்சோபனமாக்கி
சடுதிவரவேணுமென்று தந்தையரும்மைந்தனுக்கு
கடுதாசிகைக்கொடுத்து கட்டியனைஓடவிட்டார்
ஒற்றன் விரைந்தோடி ரோமாபுரிசேர்ந்து
நாட்டுக்குராக்கினியாம் ஞானசௌந்தரியை
கண்டுகரங்குவித்து கர்த்தனுக்கு காகிதத்தை
தெண்டஞ்சமர்ப்பித் தீந்திடவேசேவகனும்
மாறிஒருநிருபம் மைந்தனுந்தந்தையற்கு
கூறிஎழுதும்முறை குவலயத்தோர்கேட்டருளும்
அத்தனேரோமையிலே அடியேனுடதேவிமைந்தர்
கொற்றவர்தர்மராசர்முன்னே கூட்டிப்போய்விட்டதன்பின்
புரவலன்தேவியுடன் பூர்வமெல்லாங்கேட்டு
மரபுபிதிரூர்கேட்டு மகளென்றறிந்துகொண்டார்
காதலியைக் கைமுறித்து காகிதம்மாருடிவிட்டு

மாதர்புதல்வரையும் மலைக்குவட்டிலாக்கிவிட்ட
இறைறவனுடதேவி இளையவின்னை என்றறிந்து
முறைறமைப்படியாக மூள்தணலிற்போட்டெரித்தார்
சீர்மையுஞ்செங்கோலும் திரவியமும்ஆனைபடை
போர்வேந்தன்தர்மருமோ புத்திரிக்குகையளித்து
இறைறவன் தவசுபண்ணி இருப்போமெனப்போனர்
சிறுவர்வயதிளமை தேவிதிடனில்லாததால்
கொஞ்சநாளிங்கிருந்து குவலயத்தைத்திட்டமிட்டு
ஐந்தாறுநாட்கழித்து அங்கேவருவோமென்று
நிருபமொன்றுதானெழுதி நிறைறவொற்றன்கைக்கொடுத்தார்
பிலேந்திரரைக்கைதொழுது புறப்பட்டெசித்தூர்போய்
மலைப்புற்றுவாடி மக்களதனைப்பார்த்திருந்த
கர்த்தன்பதம்போற்றி கடுதாசிகைக்கொடுத்தான்

## ஞானசௌந்தரியை சிமியோன் அரசனும் குடிஜனங்களும் பாராட்டுதல்

புத்திரன்காகிதத்தை பிரியமாய்வாங்கியபின்
தந்தையர்வாசித்தறிந்து சந்தோஷங்கொண்டாடி
மைந்தன்மனைவியர்தான் மன்னீர்தர்மர்புத்திரியோ
அண்ணல்தர்மர்புத்திரியென் றப்போதறியேனே
மண்ணில்மடக்கொடியாள் மாதுயரங்கையேற்ருள்
ரோமைமன்னர்புத்திரியென் ருெருவரறியாரே
தர்மர்மகளறச்சலித்த சஞ்சலந்தானெவ்வாருே
ஐயையோபுத்திரியால் அத்தனென்னபாடுபட்டார்
கையேற்றுக்காடேகிக் கனமானகஸ்தியுற்று
வையகத்தை யாளுதற்கு வந்தாளோ தந்தையிடம்
தூயகர்த்தரற்புதத்தை தொல்புவியோர் காண்பாரோ
சௌந்தரிபோல்நற்குணமும் தாழ்ச்சிபொறுமைகளும்
அவனிமனுவோரில் ஆருமொருவரில்லை
மருகளைத்தான்புகழ்ந்து மன்னன்சிமியோனும்
தரையாண்டெசித்தூரில் தானிருக்கும்வேளையிலே
கர்த்தன்பிலேந்திரனுங் காதலியும்பாலருமாய்
சத்தியரோமையிலே தானிருந்துசட்டமிட்டு
பழமையுள்ளமந்திரியை பதிவாகவேயிருத்தி
குழந்தைஇருபேரும் கொற்றவனுந்தேவியரும்
இலங்கியரோமைவிட்டு எசித்தூர்க்குப்போய்நடந்தார்
பிலேந்திரரன்னைபிதா பிரியமாய்வந்தாவி
தையலேநீயுமெங்கள் தர்மராசர்புத்திரியோ
வையகத்தில்தர்மருட மகளென்ருெருவருக்கும்
எங்களுக்குஞ்சொல்லாம லித்துயம்நீபூண்டாய்
அண்ணல்தர்மர்புத்திரியென் றப்போதேநானறிந்தால்
கண்ணிமைக்குள்வைத்துக் காத்திருத்திக்கொள்வேனே

எங்களுக்கெல்லாம்பெரிய ராக்கினியேஉந்தனுக்கு
பங்கமுங்கஸ்தி துயர்படவும் விதியாச்சோ
மன்னன்மருமகவால் மா துயரம்பூண்டதினால்
அந்நேரம்மாமனுக்கு ஆயிழையுமென்சொல்வாள்
தென்னவரே மன்னவரே சிங்காசனத் துரையே
என்னைப்பார்த்திப்படியே இரங்கிச்சலிப்பானேன்
பாடுபட்டகூலி கைமேற் பற்றிடுவாரல்லாமல்
வேடிக்கையாயிருந்தால் வெகுமானங்கிட்டிடுமோ
அன்னைசெய்தகாரியத்தை அப்போவெளியில்விட்டால்
கன்னிமரிமாதாவையுங் கர்த்தரையுங் காண்பேனோ
முன்னேமுறிந்தரெண்டு முழங்கைவளர்ந்திடுமோ
இந்நிலத்தில்துக்கம் இடர்கஸ்திபூண்டவர்க்கு
பரலோகவாழ்வும் பாக்கியமுங்கைமேலே
தருவாருடையகர்த்தர் தாழ்ச்சியுண்டால்மோட்சமுண்டு
அண்ணனுக்கிப்படியே அர்த்தங்கள்போதிப்பித்து
எண்ணத்தைஆற்றிவைத்து எசித்தூரிருக்கையிலே
பிலேந்திரராசருட பெண்சாதியானவள்தான்
தலம்பெரியரோமையிலே தர்மராசர்புத்திரியாம்
என்றுசொல்லியே எசித்தூர்ராச்சியத்தோர்காணவந்தார்
சென்றுதுதிப்போரும் திரும்பியூர்சேர்வோரும்
அமிர்தகுணவாசகத்தால் அருளுமுரைகேட்டு
சமூகத்தில் நிற்போர்க்கும் யாத்திரைகேட்போர்க்கும்
மகாராசிசொல்லிடுவாள் மாநிலந்தான்பொய்வாழ்வு
பகலோனைக்கண்ட பனிபோல் பறந்தோடும்
சாவுதனைக்கண்டு சாவைவிலக்குவாருமில்லை
பூதலத்துவாழ்வுகளைப் பிரியமாய்க்கொள்ளாமல்
தேவபரன்மோட்சத்தில் சேரவழிபார்த்திடுங்கோ
பாவம்நினையாமல் பலன்தேடுமென்றுரைத்து
இலாபமுள்ளசொற்கேட்டு இராச்சியத்தோரேகிட்வே
தாபமாயெசித்தூரில் தாங்கள்சிலநாளிருந்து
தந்தைதாயெசித்தூரை தானுண்டருளுமென்று
மைந்தன்பிலேந்திரரு மனைவியரும்பாலருமாய்
அன்னைபிதாவைத்தொழுது அப்புவியைவிட்டகன்று
பொன்னிலங்கும் ரோமாபுரிநகரை ஆளவந்தார்
நாட்டிலேவீற்றிருந்து நவமாகமானிடர்கள்
பூட்டியபாவமதைப் புத்திசொல்லிபோக்கடித்து
பத்துரைகற்பனையைப் பரிவாய்விரித்துரைத்து
சத்துருவானவரைத் தலத்தைவிட்டுதானகற்றி
சிற்றின்பங்கீழாக்கி தேவமறைமேலாக்கி
கொற்றவர்கற்பனைக்கு குவலயத்தோர்கீழ்ப்பணிந்து
உற்றுருறன்முறையோர் ஒருமனமாய்த்தான்வாழ்ந்து
தாழ்ச்சியென்றபுண்ணியமும் தானேவளர்ந்தேறி

மாட்சிமையாய்ஞான சௌந்தரியாளாண்டிருந்தும்
குடியோரிறைவாங்க கொற்றவர்க்கிஷ்டமில்லை
சடையாமல்மானிடரைத் தற்காத்தரவணைத்து
சத்தியவேதமொழி தவருதேசட்டமிட்டு
கொற்றவருந்தேவியருங் குமாரருலகாளுமந்நாள்
பூவுலகும்பொன்பணமும் புத்திரிக்குக்கையளித்து
தேவனைத்தான் துதித்துத் தினந்தபசு செய்திருந்த
புரவலன் தர்மருக்குப் பிணிநோவும்மேல்தாவி
குருமார்களாலவஸ்தை கொம்பிசமும் நன்மைபெற்று
மன்னன் உயிர்பிரிந்தார் மகளுஞ்சலித்தழுது
தன்னுட்டிலுள்ள சகலமனிதர்வந்து
ஆலயத்திலோர்புறமாய் ஆங்கோர்கல்லறையில்
ஏலவேபார்த்திபனு மேந்தலுடல்நீராட்டி
தண்டிகையில்வந்துடலைத் தம்போர்தவில்முழக்கி
கொண்டேகிகோவிலுக்குள் குருமார்கள்பூசைபண்ண
அண்ணல்தர்மர்பொற்சடத்தை அடக்கினுல்கல்லறையில்
மன்னுற்குழிநிறைத்து மானிடர்களேகியபின்
அத்தனுயிர்பிழைக்க ஆலயத்திற்கைமுதல்கள்
புத்திரியுங்கையளித்து பூசைதினங்கண்டிடுவாள்
தந்தைகடன்தீர்த்து தலைவருடன்பாலருமாய்
அந்திசந்திஇராப்பகலாய் ஆண்டவரைத்தோஸ்தரித்து
ரோமாபுரிநாட்டுக்கொருகுறையும்வராமல்
சர்வேஸ்பரனவரைத் தற்காத்திருக்கையிலே
நாடெசித்தாராண்டிருந்த ராயனுக்குநோயணுகி
தேடிமகனைக்காணச் சீட்டெழுதிஆளனுப்பி
ஓடியேகட்டியனும் ரோமாபுரிசேர்ந்து
வாடிமனந்தளர்ந்து மைந்தனுக்குசேதிசொல்வான்
அண்ணலேஉன்தகப்பன் ஆரோக்கியக்கேடாய்
கண்ணில்விழிப்பதற்காய்க் கடுகிவரவுரைத்தார்
வள்ளலேநீரும் வழிகொள்ளுமென்றுரைத்தான்
அள்ளாடிமன்னவனும் அந்தனுக்காய்மெத்தயர்ந்து
தேவியையும்பாலரையுஞ் சிவிகையின்மேலேற்றி
காவலன்தன்பதிக்கு கால்நடையாய்நடந்து
சஞ்சலத்தோடேகித் தந்தையரைத்தான்தொழுது
கஞ்சிகுடியுமென்பார் காயுதேகாயமென்பார்
தீட்சைஅவஸ்தைநன்மை சணம்வருத்தித்தாருமென்பார்
ஆஸ்திகளும்இராச்சியமும் அன்பாய்க்கையேருமென்பார்
கூட்டிக்குருக்களையும் கொடுத்துநன்மைகொம்பிசமும்
அவஸ்தைபிரார்த்தனையும் ஆயத்தமந்திரமும்
செய்துநிறைவேற்றித் தென்னவனைக்காத்திருந்தார்
மெய்யுடல்கஸ்திமிஞ்சி வேந்தனுந்துஞ்சிவிட்டார்
மைந்தன்சலித்திருக்க மாநிலத்தோர்கூடிவந்து

அந்தவூராலயத்தில் அடுக்கவொருபுறமாய்
மையமடக்குதற்கு மந்திரித்துவைத்த தலம்
கையாற்குழிதோண்டிக் கற்பதித்து நீருமிட்டு
இறைவனுடல்நீராட்டி ஏகனைத்தோத்தரித்து
தரையிலடக்கிவிட்டார் தலைவனையுமம்மானை
தந்தையுடசீவனுக்காய்ந் தர்மதானங்கள்செய்து
மைந்தனும்நல்மனதாய் மாசுகளைத்தீத்தறுத்து
அத்தன்கடன் நீக்கி அன்னையர்க்காதரவாய்
புத்திரனெசித்திருந்து பிள்ளைரெண்டுபாலரையும்
உதவிதுணைக்காளுமிட்டு ரோமைநாடாளவிட்டார்
புதல்வருடன்தாயும் புவிரோமைஆண்டிருந்தார்
ஆதரைஆண்டிருந்து அகதிகளை ஆதரித்து
போதந்தயவுடனே பிணியோர்பிணிதீர்த்து
துட்டத்தனத்தோரைத் துரத்திக்குடியோட்டி
மட்டுக்கமைந்தோரை மனச்சோபனமாக்கி
சத்திரச்சாலைகட்டி சாப்பாடளித்துநிதம்
பத்திரமாய்ஆதுலரை பாதுகாத்தெப்போதும்
பள்ளிகட்டிபிள்ளைகளைப் படிக்கமுதலீந்து
கள்ளரைக்குத்தி கழுவேற்றிக்கட்டுமெட்டாய்
இராக்கினியும்பாலருமாய் நாடாண்டிருக்கையிலே
பாக்கியமுள்ளசித்தார் பார்பரம்மரள் துஞ்சிவிட்டாள்
மன்னர்பிலேந்திரர் தர்மர் இறந்தசெய்தி
தென்னவனும் ரோமையிலே தேவியர்கள்விட்டுடனே
அறிவித்தசெய்திதனை ஆயிழையுங்கேட்டயர்ந்து
மறுகிக்குழறி மனம்வாடித்தானிருந்தாள்
மாதாவுடற்சடங்கு மைந்தர் நிறைவேற்றி
தீதுகள்போக்கித் தினந்தேவனைத்துதித்து
அன்னையுயிர்பிழைக்க ஆத்துமமீடேற
நந்நயமாய்வேண்டி நாடோறும்பூசைவைத்து
கொற்றவர்நாட்டிலுள்ள குடியோர்மெலியாமல்
கர்த்தாவைஎந்நேரங் கைகுவித்துவேண்டிடுவார்
தாரணிஎசித்தாரை தர்மர்நாடாக்கிவைத்தார்
ஏருழவர்நஞ்சைபுஞ்சை இட்டபயிரானதிலே
பார்த்திபர்க்குள்ளவிறை பகுந்தெடுத்துகொள்வதல்லால்
தோஷமாய்வேறுவினை தொல்புவியோர்க்கில்லாமல்
நீதியுள்ளராசாவாய் நிலமதனை ஆண்டிருந்து
சோதிமையக்கைகுவித்துச் சுகத்தோடிருக்கையிலே

## பிலேந்திரர் மரணமும் ஞானசவுந்தரியாள் தர்ம ஆட்சியும்

நன்மையாயெசித்தார் நாடாண்டராயனுக்கு
துன்பம்பிணியணுகி துயரம்வெகுவாகி
பண்டிதர்மாத்திரைகள் பலியாமல்மன்னவனும்

உண்டவகையெல்லாம் ஒறுத்துஉடலயர்ந்து
காதலியும் பாலகரும் கண்ணில் விழிப்பதற்காய்
வாதைதனையறிந்து வகையாயொருநிருபம்
கர்த்தனுமொப்பமிட்டுக் கட்டியன்கைகொடுத்து
புத்திரர்தேவியரைப் போய்க்கூட்டிவந்திடென்றார்
ஒற்றன்விரைந்தோடி ரோமாபுரிசேர்ந்து
காட்டியே காகிதத்தைக் கர்த்தன் பிலேந்திரற்கு
சரீரசுகங்கெட்டு தலைமாற்றங்கொண்டுமன்னன்
ஒருவர்கெதியுமில்லை லோகமிதுமாய்கை
புதல்வர்மனையாளை போய்க்கூட்டி வாருமென்றே
இதயமாய் வரவிடுத்தார் எங்கள்துரை அரசர்
இராக்கினியே பாலருமாய் நடக்கவழிகொள்ளுமென்றான்
தீர்க்கமாய்க்கட்டியனும் செப்புமுறை கேட்டயர்ந்து
அங்கம்நடுநடுங்கி அள்ளாடிஉள்ளயர்ந்து
சங்கடமாய்ஞான சௌந்தரியாள் பாலருமாய்
ஒற்றனுமேவலரும் ஊழியருந்தான்கூடி
வாட்டரவாய்மாந்தர் வழிநடந்தாரம்மானை
கணவனுட சஞ்சலத்தால் காதலியாள்தாபமுற்று
மணவாளனைக்காண மனைவிமெத்த வங்கலித்து
எட்டிநடப்பா ளிருப்பாளயர்ந்திடுவாள்
எசித்தூர்பட்டணந்தான் எட்டஏகிட்டோவென்பாள்
மசகுமுன்னே சேருவேனோ என்மன்னவனைக் காண்பேனோ
எட்டத்தெரிகிறது எசித்தூரோவென் றழுவாள்
கிட்டஅடுத்ததென்பார் கெதியாய் நடவுமென்பார்
பையபெள்ளத்தான் நடந்து பாரிலெசித்தூர் சேர்ந்து
தையல்மனைக்குட்புகுந்து தலைவனைச்சென்றுவி
கண்ணோடே கண்ணைவைத்து கண்ணீராறாய்ச்சொரிந்து
அண்ணலேஎன்துரையே அசாத்தியமோ வென் றழுவாள்
ஏந்தியிருந்திடுவாள் இருகரத்தால் தாங்கிடுவாள்
காந்தனேஎன்கணவா கஞ்சிசற்றே கொள்ளுமென்பாள்
வாந்தியெடுக்குதென்பார் வாயும்வறளுதென்பார்
சோர்ந்துஉடலயர்ந்து சொல்லுங் குழறுதென்பார்
போதங்குழறுதென்பார் பிழைக்கிறது கஷ்டமென்பார்
காதலியேஅஞ்சாதே கர்த்தரை மன்றாடுமென்பார்
சிரேஷ்டர்வரவேணுமென்பார் தேவநன்மை வேணுமென்பார்
கூட்டியேவாருமென்பார் கொம்பிசமும் வேணுமென்பார்
ஆலயத்து சிரேஷ்டர்வந்து அவஸ்தைநன்மை கொம்பிசமும்
ஏலவேயுள்ள இடர்வினையெல்லாந்தீர்த்து
பாவிகட்காய் ஆண்டவரும் பாடுபட்ட பொற்சிலுவை
காவலன் கைக்கொடுத்துக் கண்ணில்வைத்து முத்திசெய்து
தேவனேநீரெனக்காய்ச் சிந்தும் திருவிரத்தம்
பாவியெனக்குள்ளபங்கு பகிர்ந்துதரவேணுமென்று

ஆண்டவர்பட்டு அறையுண்டவ ணிகளை
வேண்டியேமுத்திசெய்து விழிநீ ாருயுதிர்த்து
உற்றமனஸ்தாபம் உள்ளமெல்லாமுடுருவி
கர்த்தனே வந்தெனக்குக் கதிதரவேணுமென்று
வானத்தைப்பார்த்து வணங்கிநமஸ்கரித்து
ஞானசௌந்தரியாள் நாயகனைக் காத்திருக்க
தேவன்குறித்துவைத்த தெய்தியிலேமன்னவனும்
ஆவிபிரிந்தவரும் அம்பரவான்சேர்ந்துவிட்டார்
காதலியாள் கமறிக் கணவன்மேல் விழுந்து
மாதுயரம் பூண்டு மண்ணிற் புரண்டுருண்டு
கணவனைப் பார்த்தேங்கிக் கையால்முகத்தறைந்து
துணைவனைவந்தாவிச் சொல்லி அழுதிடுவாள்
என்கணவா என்துரையே எனக்குதவி செய்ததுபோல்
அன்புள்ளவோர்மனுவோர் அம்புவியிற்காணேனையா
எனக்கிரங்கிஎன்கணவா ஏதிடுக்கண் நீர்பூண்டீர்
வனத்திலடியாளை வந்துநீர் ஆதரித்து
மனையில்நின்று தற்காத்து மாதாபிதா விலக்க
எனக்கிரங்கி என்துரையே என்னைமணஞ்செய்நீரே
தந்தையர்க்குவந்த சலிப்பெல்லாந்தீர்த்தீரே
நிந்தித்துமாற்றானை நீர்துரத்தப்போனீரே
குழந்தைரண்டும் நானடியாள் குகைக்குள்ளிருக்கையிலே
அழுதுதுயர்பூண்டு அடவிமலையேறி
தட்டலைந்து தேடிச் சலித்துதகைபூண்டு
அட்டகிரிக்குகையில் அடியாளைக்கண்டீரே
அரண்மனையில்சேர்த்தீரே அத்தனிடம்போனீரே
திரும்பிவந்தெங்களையும் சேர்த்தீரேதந்தையிடம்
கரம்ரண்டுமில்லையென்றே கழித்திருத்திவைத்தஎன்னை
உரிமையாய்மன்றல்செய்து உபசரித்த நீரலவோ
இப்படியேமன்றல்செய்த என்கணவா என்னைவிட்டு
தப்பிவானஞ்சேர்ந்தீரோ சலித்தடியேனிங்கிருக்க
ஞானசௌந்தரியாள் நாயகன்மேல்விழுந்து
மாநிலத்தில்மங்கை மறவாமலேசலித்து
அங்கலித்துதானழுவே ஆதரையோர்வந்தமர்த்த
மங்கைதுயரை மனதிலே உள்ளடக்கி
அன்றுமுடிக்க அகத்தியமாயிருந்த
தொண்டுபலதைத் தேகையருஞ்சாற்றிடவே
குவலயத்தோர் கூடிவந்து கோவிலொருபுறமாய்
ஆங்கோர் கல்லறையில் அங்கடக்கமாய்ச்சடத்தை
சாந்துகல்லும் நீறுமிட்டுச் சடத்தையும் நீராட்டி
பாந்திபமாய்சற்குருமார் பாடியநற்பூசைகண்டு
சிவிகையிலேற்றிவந்து தேவாலயம்புகுந்து
புவியில் வெகுசிறப்பாய் பூசைசெய்துமெய்சடத்தை

கல்லறைக்குள்ளடக்கிக் கலமானசங்கையுடன்
நல்லடக்கங்கண்டுடனே நாட்டாருமேகிடவே
கணவனுயிர்பிழைக்கக் காதலியாள் தானதர்மம்
இணக்கமாய்ச்செய்து இரப்பவர்க்கெல்லாமீந்து
ஆத்துமபூசைகளும் ஆலயந்தோறும்நடத்தி
ஏற்றியேமோட்ச விளக்கெடுத்துநிறைவேற்றி
தங்களெசித்தூரில் தலைமகனைத்தான் நிறுத்தி
சங்கைபுதல்வனுக்குத் தனிக்குத்துணையுமிட்டு
மைந்தனிளையவரும் மாதாவும்ரோமையிலே
வந்திருந்து தாய்மகனும் வளர்நகரை ஆண்டிருந்தார்

## ஞானசவுந்தரிக்கு வானவர் காட்சியும் நன்மரணமும்

ஞானசௌந்தரியாள் நாடாண்டிருக்கையிலே
வானபரனோடே மன்றுடிஎப்போதும்
நாட்டுக்கொருகுறையும் நாடாமல்ராக்கினியும்
கேட்டவரம்வாங்கிக் கெதிபெற்றிருக்கையிலே
சௌந்தரியாம் ராக்கினிக்கு சர்வேஸ்பரன்குறித்த
உகந்தநாள்வந்தடுத்து ஒருதீங்குமில்லாமல்
தலத்திலிருக்கையிலே தார்குழலாள் தன்னிடமே
குலவான்சம்மனசு கூட்டமாய்வந்திறங்கி
ஞானசௌந்தரியே நாயகமேதங்கையரே
வானத்துராக்கினியாள் வரவழைத்தாளன்னையங்கே
கோதையரே ஆத்துமத்தை கொண்டுசெல்ல வந்தோமென்று
ஓதும்திருவசன உரைகேட்டு இராக்கினியாள்
மைந்தரிருபேர்க்கும் மனந்தேறபுத்திசொல்லி
என்மக்களே நீங்களிருபேர் ஒருமனதாய்
தன்நட்க்கையினல் தாரணியைநீராண்டு
பாவமணுகாமல் பரலோகம் பாருமென்று
ஆவிரெண்டு மைந்தரையும் அன்பாய்முகத்தட்வி
சிரேஷ்டரைத்தானழைத்து திருச்சபைஆசாரம்
கூட்டிநிறைவேற்றி கொம்பிசமும் நன்மைபெற்று
மைந்தரும் முன்னிருக்க மாநிலத்தோர் சூழ்ந்திருக்க
அந்தச்சபைதனிலே அண்ணாந்துவிண்ணோக்கி
முழங்காலில்நின்று நங்கை மோட்சத்தைக்கண்ணோக்கி
அழுது இருதயமும் ஆகமுந்தான்பதற
ஆஞ்சுமார் சூழ்ந்துநின்று ஆத்துமத்தைதான்பிரிக்க
நீந்தினள் மோட்சத்தின் நித்தியனார்முன்னிலையில்
அன்னைமரி யுஞ்சுதனும் அன்பாயருகிருந்து
எந்நேர மென்பேரில் இரக்கமுள்ளஎன்மகளே
மோட்சத்தைக் கண்டு முடியாதிருந்திடென்று
பாக்கியம்பெற்று பலனடைத்த வெற்றிமுடி

O,87,M9
N56



தாழ்ச்சிபொறுமை தயவுள்ள நன்மைமுடி
மோட்சமுடி சூட்டி மூன்றுமுடி [illegible]யேற்று
கன்னிமரிமுகமும் கர்த்தர் திருமுகமும்
விண்ணொளிக்குமெட்டாத மேலானபொன்னுலகம்
கண்டுகளிகூர்ந்து கதிர்வானகத்திருந்து
உண்டுமகிழ்ந்திருப்பாள் ஊழியுள்ளகாலமெல்லாம்
வானவரைவேண்டி மனதிற்றியானமுடன்
ஞானசௌந்தரியாள் நன்மைபெற்றாளம்மானை
மக்கள்சலித்திருக்க மாநிலத்தோர் சூழ்ந்திருக்க
துக்கமடக்கி துயர்பூண்டுதொல்புவியின்
கோவிலுட்சென்று குருபீடம்முன்பாக
தீர்த்தமும் பன்னீரால் தேகத்தை நீராட்டி
சற்குருமார் பூசைசெய்து சடத்தையோர்தண்டிகையில்
எக்காளம் கொம்புடனே எண்ணடங்காவாத்தியமும்
பாரவெடிபீரங்கி பலபல வானமொடு
ஆரவாரத்தோட ஆலயத்திற்கொண்டிறக்கி
சந்நியாசிசற்குருமார் தவத்தோர்குருசிரேஷ்டர்
பொன்னாலயம்புகுந்து பீடத்திற்பூசைசெய்து
சங்கையாய்ஞான சௌந்தரியாள்தன்னுடலை
அங்கத்தைக்கோவிலிலே அடக்கினாரம்மானை
மண்ணிலடக்கிவைத்து மாநிலத்தோரேகியபின்
புண்ணியதானதர்மம் புத்திரர்கள்தான்நடத்தி
தாயத்துமங்குறித்து தர்மதானம்வழங்கி
வாகாய்ப்பலசடங்கு வகைவகையாய் செய்துவந்தார்
எம்பரனுக்காக இக்கதையிற் குற்றமுண்டால்
பொறுத்திடவேணுமென்று பொறுதிதயையுடனும்
உருக்கமாய் கதையிதை ஓதினேன்கேட்கலுற்றான்
அருகிருந்தம்மானை அன்பாகக் கேட்டோரே
பரமண்டலம்மூன்று பாவிகட்காய் வேண்டிடுங்கோ
வாழிமிகவாழி வானவரெல்லாம் வாழி
ஆழிசூழ் பூவுலகம் அடங்கலுந்தான்வாழியவே.

ஞானசவுந்தரி அம்மானை முற்றிற்று.

கலைமகள் பிரஸ், வடக்கன்குளம்.